கோகுலம்

GOKULAM

டிசம்பர் '87 ரூ. 3.





சுவைத்து மகிழ்ந்து வளர்ச்சி அடைந்திடும் வழி—ஃபாரெக்ஸ்®

குழந்தையின் உயரம் மற்றும்* எடையை சோதித்திடுங்கள்	ஆண் குழந்தை எடை (கிலோ)	ஆண் குழந்தை உயரம் (செ.மீ.)	பெண் குழந்தை எடை (கிலோ)	பெண் குழந்தை உயரம் (செ.மீ.)
3 மாதம்	5.2	59.1	4.9	58.4
6 மாதம்	6.7	64.7	6.1	63.7
9 மாதம்	7.3	68.2	6.9	67.0
12 மாதம்	8.4	73.9	7.8	72.5

* இது இந்தியக் குழந்தை மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தால் வழங்கப்பட்டது.
இது இந்தியக் குழந்தைகளுக்கு மட்டுமே சராசரியாகும். குழந்தையின் வளர்ச்சி உங்கள் டாக்டரின் திருப்திக்கேற்ற வகையில் இருந்தால் போதும்.

வண்ணமய பாப்பா— பராமரிப்பு வழிகாட்டி இலவசமாய் பெற்றிட இதை அனுப்புங்கள் இங்கே: க்ளிண்டியா லிமிடெட் (FPD/51) டாக்டர் அன்னி பெஸண்ட் ரோட், ஒர்லி, பம்பாய்-400 025..



உங்கள் குழந்தை பரிபூரண அபிவிருத்தியும் வளர்ச்சியும் அடைந்திட போஷாக்கு நிறைந்த ஃபாரெக்ஸ் அளியுங்கள்.

ஃபாரெக்ஸ்®

சுவைத்து மகிழ்ந்து வளர்ச்சி அடைந்திடும் வழி

26/203



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.

கோகுலம்

1987 டிசம்பர் மாத இதழ்
மலர் 5 : இதழ் 11
தனிப் பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—
கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா



புகைப்படம்: எம். எம். இப்ராஹீம்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

டிசம்பர் 25 ஆம் தேதியை கிறிஸ்துமஸ் விழாவாக உலகிலுள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும் கொண்டாடுகிறார்கள். அந்த நாளில்தான் ஏசுநாதர் அவதரித்தார் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

அவர் சிலுவையில் இறந்த நாளைப் பெரிய வெள்ளிக்கிழமையாகவும், மீண்டும் அவர் உயிர்பெற்று எழுந்தநாளை ஈஸ்ட்டர் பண்டிகையாகவும் கொண்டாடுகிறார்கள்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன் (கி. மு.) கிறிஸ்து பிறந்ததற்குப் பின் (கி. பி.) என்று ஆண்டுகளை நாம் குறிப்பிடுகிறோம்.

1987 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த அவர் பல இடங்களுக்கும் சென்றார். மக்களுக்குப் பல அறிவுரைகளைச் சிறுசிறு கதைகளாகக் கூறி விளக்கினார்.

'மக்கள் எல்லா மக்களிடத்திலும் அன்பாக இருக்க வேண்டும். ஒரு மனிதன் எக்காரணத்தாலோ குற்றம் செய்திருக்கலாம். தான் செய்த குற்றத்தை உணர்ந்து திருந்திக் கொள்பவன் இறைவனால் மன்னிக்கப்படுகிறான்'— இவை போன்ற நல்லுரைகளை அவர் நாள்தோறும் வழங்கினார்.

மனிதரை மனிதர் நேசிக்கத் தொடங்கிவிட்டால், அப்புறம் கொலை, கொள்ளை போன்ற கொடிய செயல்கள் நடக்குமா? உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யவோ, பிறரை ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கவோ மனம் இடம் கொடுக்குமா?

ஏசுநாதர் கூறிய அன்பு நெறியைத்தான் புத்தரும்போதித்தார்; காந்திஜியும் நம் கருத்திலே பதிக்க முயன்றார். இந்த மகான்களெல்லாம் தோன்றி, இத்தகைய நல்லுரைகளை வழங்கியிருந்தும், உலகிலே பல கொடிய செயல்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றனவே என்று நல்லவர்கள் வேதனைப் படுகிறார்கள்; மக்களை நல்வழிப்படுத்த முயலுகிறார்கள்.

வருங்காலக் குடிமக்களாகிய நீங்களாவது இந்த மகான்களின் அறிவுரைகளுக்கு மதிப்புக் கொடுப்பீர்கள்; அன்பு வழியைப் பின்பற்றுவீர்கள் என்று நம்புகிறோம். அப்படிச் செய்தால் நல்லவர் தொகை பெருகும்; நாட்டிலே அமைதி நிலவும்.

அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்



நதமா — ஜே. பி.

பிருந்தாவனக் கவிஞர்கள்



ஜா. அருணாசலம்




எஸ். முத்துலட்சுமி



ம. அருள்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



தாயு. செந்தில்குமார்



மா. தா. ஸ்ரீதர்



ஆர். கார்த்திகைச் செல்வி


வண்ண அட்டைப்படம்: திலீப்குமார்



புதியவை
கேம்ப்கோ
அளிக்கும்
சாக்கலேட் கொழிக்கும்
எக்ளேர்கள்
புதிய கேம்ப்கோ சாக்கலேட் எக்ளேர்-
பேக்கைப் பிரித்தது தான் தாமதம், பறந்துவிடும்
அருஞ்சுவை எக்ளேர்கள். நண்பர்கள் மத்தியில் உங்கள்
புகழோ நிறைந்து விடும். உங்களது சரியான தேர்விற்குக்
கிடைப்பதோ நிறைவான
பாராட்டு.
கேம்ப்கோ
சாக்லேட் எக்ளேர்கள்
உன்னதமான சுவையை
பகிர்ந்து கொள்ளுங்கள்
Chocolate Eclairs
Campco
இந்தியாவின் மிகப்பெரிய
நவீன ஆலை அளிப்பது
கேம்ப்கோ லிமிடெட், மங்களூர்

மின்மினிக் கதைகள்

—— ஓவியர் சாமா எழுதிய கதைகள்



பாபு துப்பறிஞன்

பாபுவுக்கு ஏழு வயது இருக்கும். ரொம்பவும் துடுக்காகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பான். எந்த நெருக்கடியான நிலைமையிலும் தன் சமயோசித புத்தியினால் பாபு சமாளித்து விடுவான். ஒருநாள் தகப்பனார் பாபுவிடம் பணம் கொடுத்து மாம்பழம் வாங்கி வரச் சொன்னார். கடைக்குப் போகும் வழியில் ஒரு மாந்தோட்டம் இருந்தது. தோட்டத்தில் புகுந்து குறுக்கு வழியாகப் போகலாம் என்று துணிந்தான் பாபு.


பாபு அன்று கலர் சொக்காய் அணிந்து இருந்தான். அவனுடைய கலர் சொக்காயைப் பார்த்தால் யாரும் மிரண்டு விடுவார்கள். அப்படி இருக்க அங்கு நின்று கொண்டிருந்த காளை சும்மாவா இருக்கும்? அதுவோ கலர் சொக்காயைக் கண்டு மிரண்டு எவ்வளவோ நாளாகி விட்டது. கொஞ்சம் மிரண்டுதான் பார்க்கலாமே என்று மிரண்டு ஒரு துள்ளுத் துள்ளியது.

பாபு நடுங்கிப் போய் ஓட ஆரம்பித்தான். மாடு துரத்தியது. ஓடி, ஓடி அவன் மூச்சுத் திணறியது. அப்பொழுது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. சொக்காயைக் கழற்றி அதனிடம் விட்டெறிந்து விட்டால் அது தன்னை விட்டுவிடும் என்று நினைத்தான். ஆனால் சொக்காயை நின்று கழற்ற அவனுக்கு நேரம் எங்கே இருக்கிறது? அவன்தான் அங்கும் இங்குமாக ஓடு

விருனே! பாபுவுக்குப் பக்கத்தில் இரண்டு மரங்கள் ஒன்றுக்கொன்று ஒன்றரை அடி தூரத்தில் இருப்பதைக் கண்டான். அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. 'சபாஷ்! இதுதான் சரி' என்று இரண்டு மரங்களுக்கும் நடுவே ஓடி நின்று எதிர்த்தாற்போல் ஓடிவரும் மாட்டிற்குப் பாய்ச்சல் காட்டினான்.

மாடு அவனை நோக்கி மரத்திற்கு நடுவே பாய்ந்தது. பாபு சட்டென்று பக்கவாட்டில் நகர்ந்தான். அவ்வளவுதான், பாபுவின் யோசனை பலித்தது. மாடு வந்த வேகத்தில் நன்றாக இரண்டு மரங்களுக்கும் நடுவே மாட்டிக் கொண்டது. மாடு மோதின வேகத்தில் மரங்களே சமயோசித யோசனைக்குப் பரிசாகப் பழங்களை உதிர்த்தன. பாபு ஆனந்தத்தில் பழங்களைப் பொறுக்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடினான்.

யார் பலசாலி?



கிருஷ்ணமணி மிகவும் சோனிப் பயல். தனக்குப் பலம் இல்லா விட்டாலும், பிறரது பலத்தைத் தனக்குச் சாதகமாக்கி விடுவான்.

அவனுக்கு மூன்று சிநேகிதர்கள் உண்டு. தேகப் பயிற்சி மேல் அவர் களுக்குச் சிரத்தை அதிகம். 'கர்லா,' 'டம்பல்ஸ்,' குஸ்தி போடுதல் முதலியவற் றைப் பயின்று வந்தார்கள். பாவம், கிருஷ்ணமணி வேடிக்கை பார்த்தானே தவிர அவனால் அந்தக் கருவிகளைத் தூக்கக் கூட முடியவில்லை.

ஒருநாள் கிருஷ்ணமணி கடையிலிருந்து புளி மூட்டை, பயறு மூட்டை, இவைகளை ஒரு சிறு வண்டியில் வைத்துச் சிரமப்பட்டு இழுத்து வந்தான். வரும் வழியில் ஒரு பெரிய மேடு இருந்தது. அதன்மேல் எப்படி இழுத்து வரு வது என்று திணறினான். வண்டியைப் பள்ளத்தில் நிறுத்தி வைத்துவிட்டு மேட்டின்மேல் ஏறிப் பார்த்தான். அங்கே அவன் சிநேகிதர்கள் மூன்று பேரும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். மணிக்கு ஒரு யோசனை தோன் றிற்று. கீழே இறங்கித் தான் வைத்திருந்த கயிற்றின் ஒரு நுனியை வண்டியில் கட்டினான். மற்றொரு நுனியை எடுத்துக் கொண்டு மேட்டின் மேல் ஏறி, சிநேகிதர்களைப் பார்த்து, ''டக் — அப் — வார் விளையாடலாம்! வாருங்கள். நீங்கள் மூவரும் ஒரு பக்கம் இருந்து இழுங்கள். நான் எதிர்ப்பக்கம் இழுக் கிறேன்!'' என்றான்.

மூன்று பையன்களும் கொல் என்று சிரித்தார்கள். ''சிரிப்பைக் கடைசியில் வைத்துக் கொள்ளுங்கள். உம், இழுங்கள்'' என்றான் கிருஷ்ண மணி. பையன்கள் இழுத்தார்கள். மணி, தான் முழு பலத்துடன் எதிர்ப்பக்கம் இழுப்பது போல் நடித்தான். பையன்களுக்கு இழுப்பது கஷ்டமாகத்தான் இருந்தது. 'சோனிப் பயலிடம் தோற்றுவிடப் போகிறோமோ?' என்று பயந்து முழு பலத்துடன் இழுத்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் கயிற்றை விட்டுக்

கொண்டே இருந்தான் மணி. 'சபாஷ், பயல் நகர்கிறான்!' என்று நினைத்துக் கொண்டு அவர்கள் வேகமாக இழுத்தார்கள். இதற்குள் வண்டியை முக்கால்வாசி இழுத்து விட்டார்கள். கடைசியில் வண்டியே மேலே வந்து விட்டது. மூன்று பையன்களுக்கும் விஷயம் இப்பொழுதுதான் புரிந்தது. கிருஷ்ணமணி கொல் என்று சிரித்தான். பையன்கள் முகத்தில் அசடு வழிந்தது.

யானைச் சவாரி


பாபுவுக்கு வயது ஏழு இருக்கும். வயதில் சிறியவனாக இருந்தாலும் ரொம்பவும் தைரியசாலி, துணிச்சல் பேர்வழி. பள்ளிக்கூடத்திற்கு மட்டம் போடுவதென்றால் அவனுக்கு ரொம்பக் குஷி.

ஒருநாள் அவனுக்கு ஏரோப்ளேனில் ஏறிச் செல்ல வேண்டும் என்ற ஆசை உண்டாகிவிட்டது. பள்ளிக்கூடத்திற்கு மட்டம் போட்டுவிட்டு அதி வேகமாகப் பக்கத்தில் உள்ள விமான நிலையத்திற்குள் யாருக்கும் தெரியாமல் நுழைந்து விட்டான். அப்பொழுதுதான் ஒரு விமானம் கிளம்பிக் கொண்டிருந்தது. ஓடிப் போய், ''மாமா, மாமா! என்னையும் ஏற்றிக் கொள்ளுங்கள்!'' என்று கெஞ்சினான். விமானி, 'பாவம், சின்னப் பையன் பறப்பதற்குப் பறக்கிறான்; ஏற்றிக் கொள்ளலாம்' என்று ஏற்றிக் கொண்டார். பிறகு பையனுக்குப் 'பாராசூட்'டை எடுத்து முதுகில் கட்டிவிட்டார். பாபு விமானியுடன் பேசிக் கொண்டே பறந்தான்.

பாபுவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. திடீரென்று ஒரு அசட்டுத் தைரியம் அவனுக்கு வந்தது. 'பாராசூட்' எப்படி வேலை செய்கிறது என்று பார்க்கலாம் என்று விமானத்திலிருந்து வெளியே திடீர் என்று குதித்து விட்டான். விமானிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

பாராசூட் குடைபோல் விரிந்தது. பாபு ஆகாசத்தில் மிதந்தான். மெள்ள மெள்ளக் கீழே இறங்கினான். திடீரென்று இடுப்பில் கட்டிருந்த 'பாராசூட்'டின் 'வார்' அறுந்து விழுந்து விட்டது. பாபு அதி வேகத்தில் கீழே விழுந்து கொண்டிருந்தான். அப்பொழுது கீழே,தான் விழப் போகிற இடம் எப்படிப்பட்டது என்று பார்த்தான். ஒரு பெரிய குளம் தெரிந்தது. 'சரி, இன்றைக்கு நாம் தொலைந்தோம்' என்று தீர்மானித்து விட்டான்.

'தொபுகடீர்' என்று பாபு விழுந்தான். குளத்திற்குள் அல்ல — ஒரு யானையின் மேல். ஒரு யானைப் பாகன் தன் கோவில் யானையை அங்கு குளிப்பாட்டிக் கொண்டிராவிட்டால் பாபு குளத்தில் மூழ்கியிருப்பான். யானை நகர்ந்தது. பாபு யானையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான். யானை தெருக்கள் வழியாக அசைந்து சென்றது. வீதிகளில் எல்லோரும் கூட்டமாக





"அம்மாவோட காபியை விட என் காபி ரொம்ப நல்லாயிருக்கும்!"
Parry's
காஃபி பைட்
COFFY BITE
Parry's
COFFY BITE
"காபின்னு இப்படித்தான் இருக்கணும்!"
PARRYS
பாரிஸின் தரமான தயாரிப்புகள்
காராமில்க் - சாக்லேட் எக்ளேர்ஸ்
ட்ரை-மி - கோகனட் க்ரீம் - சாக்ளேர்ஸ்
லால்லியாப்ஸ் - காஃபி பைட்
Parry's
The King of Sweets
HTA 7037

வந்து வேடிக்கை பார்த்தார்கள். கொஞ்ச தூரம் போய் ஒரு பெரிய கட்டிடத்திற்குள் புகுந்து யானை மண்டியிட்டு பாபுவை இறக்கி விட்டது.

பாபுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. மட்டம் போட எத்தனித்தவனைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு சேர்த்தால், ஏன் ஆச்சரியமாக இருக்காது? அதே போல் உபாத்தியாயர்களும் மற்றப் பையன்களும் பாபு மணியடிப்பதற்கு முன்னாலேயே பள்ளிக்கூடம் வந்து சேர்ந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்து விட்டார்கள்!

சபாஷ் சீனு



சீனு ஒரு கறுப்பு நாய் வளர்த்து வந்தான். அதை அவன் எங்கு சென்றாலும் அழைத்துப் போவது வழக்கம். அவன் தகப்பனார் ஒரு சின்ன சைக்கிள் வாங்கிக் கொடுத்திருந்தார். சீனு தன் சைக்கிளில் ஏறி நாயைப் பிடித்துக் கொண்டு கிளம்பினான்.

சீனு தங்கவேலு முதலியார் நகைக் கடை வழியாக வந்தான். முதலியார் சீனுவிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து, "ரொம்ப அவசரமாக இது போகணும். தயவு செய்து தபாலாபீஸில் போட்டு விடுகிறாயா?" என்றார். தபாலை வாங்கிக் கொண்டு சைக்கிளை விடத் தொடங்கினான். நாயும் கூடவே வந்தது. நாயின் கயிற்றைச் சைக்கிளில் கட்டி விட்டான். சைக்கிளை நாயே இழுத்துக் கொண்டு ஓடிற்று. சீனு ஜம்மென்று காலைத் தூக்கிக் கொண்டு சாய்ந்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். நாயின் கண்ணில் ஒரு கறுப்புப் பூனை பட்டுவிட்டது. உடனே நாலுகால் பாய்ச்சலில் இங்குமங்குமாகப் பூனையைத் துரத்தியது. சீனு திக்கு முக்காடி விட்டான். எந்தச் சமயத்தில் தான் மோதிக்கொள்ளப் போகிறோமோ என்று பயந்தான்.

இதற்கு நடுவில் முதலியாரின் நகைக் கடையில் திருடன் புகுந்து பல நகைகளையும் எடுத்துக் கொண்டு எல்லோருக்கும் கத்தியைக் காண்பித்துப் பயமுறுத்திக் கடையை விட்டு ஓட எத்தனித்தான். வாசற்படியில் வந்ததுதான் தாமதம். பூனையைத் துரத்திக் கொண்டு பறந்த நாய், அப்படியே கடைக்குள் தாவிற்று. திருடன் மேல் சைக்கிள், சீனு, நாய் எல்லாமாகச் சேர்ந்து விழுந்தார்கள். திருடன் உருண்டு கீழே விழுந்தான். அவனுக்குப் பலத்த காயம் ஏற்பட்டது. எல்லோரும் திருடனை ஓடி வந்து பிடித்து ஜெயிலுக்குக் கொண்டு போனார்கள். சீனுவுக்குச் சிறிதுதான் காயம் ஏற்பட்டது. அவனையும் நாயையும் பாராட்டினார்கள். சன்மானங்களும் தந்தார்கள். நாய் எதையும் பாராட்டாமல், தான் துரத்திய பூனையையே மோப்பம் பிடித்து ஓடிக் கொண்டிருந்தது.

என் குழந்தைப் பருவம்



அகிலன்

இந்தியாவில் மிக உயர்ந்த இலக்கியப் பரிசான ஞானபீடப் பரிசை இதுவரை பெற்ற ஒரே தமிழ் எழுத்தாளர் திரு.அகிலன் அவர்கள்தான்! ஞானபீடப் பரிசு மட்டும் தானா? சாகித்ய அகாதமிப் பரிசு, ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பரிசு, சோவியத் நாடு நேரு பரிசு, தமிழக அரசின் பல பரிசுகள், 'கலைமகள்' பத்திரிகை நாவல் போட்டியில் முதல் பரிசு— இப்படி எத்தனையோ பரிசுகளைப் பெற்றவர்.

இவரது 'பாவை விளக்கு', 'வாழ்வு எங்கே?' என்ற நாவல்கள் திரைப்படங்களாக வந்தன. இவரது சிறுகதைகள் ரஷ்யன், ஜெர்மன், ஆங்கிலம், போலிஷ் முதலிய பிறநாட்டு மொழிகளிலும், இந்திய மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

உங்களைப் போன்ற குழந்தைகளுக்காகவும் இவர் 'கண்ணான கண்ணன்' 'நல்ல பையன்' 'தங்க நகரம்' 'சிகப்பு விளக்கு', முதலிய கதைப் புத்தகங்களை எழுதியிருக்கிறார். இவற்றில் 'கண்ணான கண்ணன்' தமிழக அரசின் பரிசைப் பெற்றுள்ளது.

சென்னை வானொலியில் சொற்பொழிவுத் துறை அமைப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், சோவியத் ருஷ்யா, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கும் சென்று வந்தவர்.

அரச குமாரனாகப் பத்தாண்டுகளும் ஆண்டிச் சிறுவனாகப் பத்தாண்டுகளும் தொடர்ந்தாற்போல் வாழ்ந்த அனுபவம் எனக்கு உண்டு.

குழந்தைப் பருவத்து நிகழ்ச்சிகள் சிலவற்றை என் அன்னையாரிடமிருந்து கேட்டிருக்கிறேன். அன்னையாரும் என்னை அந்தக் காலத்தில் வளர்த்த சிற்றன்னை போன்றவர்களும், மற்றவர்களும் கூறுவதைக் கேட்டால், நான் பிடிவாதமும் மூர்க்கத்தனமும் கொண்ட குழந்தையாகவே, வளர்ந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. 'Spoilt Child' எனச் சொல்வார்களே, அந்தச் சொல் எனக்கு முற்றிலும் பொருந்தும். செல்



லம் கொடுத்துக் கெடுக்கப் பெற்ற குழந்தை நான்.

நான் பிறந்தபோது என் தாயாருக்குப் பதினாறு வயது. ஆகவே தாய்ப் பால் கிடையாது. பால் கொடுப்பதற்காக அமர்த்தப்பட்ட தாதியிடமும் நான் பால் குடிக்கவில்லையாம். அந்தக் காலத்தில் குழந்தைகளுக்கான உணவெல்லாம் கூட மேல்நாட்டுத் தயாரிப்புத்தான். இங்கிலாந்து நாட்டுப் பசுக்களின் பாலிலிருந்து தயாரிக்கப் பெற்றுப் புட்டிகளில் அடைக்கப்பட்டு இறக்குமதியாகிய புட்டிப் பாலே எனக்கு ஆகாரம்.

தந்தையார் கொடுத்த செல்லமோ தாங்க முடியாத செல்லம். என்னை எல்லோருமே 'ஐயா' என்று தான் மரியாதையோடு அழைக்க வேண்டும். ஆனால் நானோ யாரிடமுமே மரியாதையுடன் பேசியதில்லை. குழந்தை உருவத்தில் ஒரு கொடுங்கோல் ஆட்சி என்றால் வீட்டில் நடத்தப்பட்டதை எல்லோரும் மகிழ்ச்சியோடு ரசித்து வந்திருக்கிறார்கள். குடும்பத்தில் என் தண்டனைக்குத் தப்பியவர்கள் யாருமே இல்லையாம். தாயார், தந்தை, பணியாட்கள், சிற்றன்னை ஆகிய யாவரையுமே நான் ஆட்டிப் படைத்திருக்கிறேன். என்னைத் தூக்கி வளர்த்த என் சிற்றன்னையின் முதுகில் நான் கூர்மையான பென்சிலால் ஓங்கிக் குத்தி ஆழமான ரத்தக் காயம் ஏற்படுத்தி விட்டேனாம். அந்தத் தழும்பு இன்னும் அவர்கள் முதுகில் இருக்கிறது.

பனையப்பட்டி என்ற ஊரில் என் தந்தையார் வேலையாக இருந்தது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. காட்டிலாகாவில் வேலை அவருக்கு.

அந்தக் காலத்துச் செட்டி நாட்டு நகரத்தார் கல்யாணமென்றால் மிகவும் தடபுடலாக நடக்கும். மூன்று நாள், ஒருவாரம் என்று நடக்கும். அதற்கெல்லாம் விறகு வேண்டாமா? மரங்களைக் காட்டில் வெட்டிக் கொள்ள என் தந்தையார் தாராளமாக அனுமதி வழங்கியிருப்பார் என்று நினைக்கிறேன். ஏனென்றால், அவர் தம் சம்பாத்தியத்தை விட எப்போதும் அதிகமாகவே செலவழித்து வந்தாராம் நூறு ரூபாய் நோட்டுக்கு அன்றைக்கு இருந்த மதிப்பு இன்று உள்ளது போல் எத்தனையோ மடங்கு அதிகம். நூறு ரூபாய் நோட்டுகளை மாற்றிச் செலவு செய்து பழக்கப்பட்டவர் என் தந்தை. பெரும் செலவாளி.

'பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் மரணமடைவதற்கு முதல்நாள் இரவு, என்னிடம் கூறிய வார்த்தை, "நீ எதற்காகவும் எப்போதும் லஞ்சம் வாங்காதே!" என்பதாகும். என் உள்ளத்தில் அவர் பதித்து விட்டுச் சென்ற பசுமரத்தாணி அது. அவர் ஏன் அப்படிச் சொன்னார் என்பதைச் சில ஆண்டுகளுக்குப் பிறகே என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

'என்னைப் பள்ளிக் கூடத்தில்





வைத்த காட்சி நினைவுக்கு வருகிறது. தந்தையின் நண்பர் ஒருவரின் அலங்கரிக்கப் பெற்ற காரில் மேள தாளங்களோடு ஊர்வலமாக, நான், பனையப்பட்டியிலிருந்த ஒரு திண்ணைப் பள்ளி கூடத்துக்கு அழைத்துச் செல்லப் பெற்றேன். அப்போதெல்லாம் வசதி உள்ளவர்கள், பிள்ளையைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்புவதை ஒரு விழாவாகவே கொண்டாடி ஊர் கூட்டுவார்கள். எனக்கும் அப்படித்தான் நடந்தது.

திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தமிழ்ப் படிப்புத்தான். என் தந்தையோ நான் பிறந்த அன்றைக்கே என்னை லண்டனுக்கு அனுப்பி I.C.S. படிக்க வைத்து ஒரு கலெக்டராக்கிப் பார்த்துவிட வேண்டுமென்று ஆசைப் பட்டவர். தமிழ்ப் படிப்போடு என்னைச் சும்மா விடுவாரா?

அவரே என்னுடைய ஆங்கில ஆசிரியராக மாறி விட்டார். மிட்டாய், கல்கண்டு முதலிய தின்பண்டங்களை வாங்கி வைத்துக் கொண்டு, "A சொன்னால் ஒரு மிட்டாய், B சொன்னால் ஒரு கல்கண்டு'' என்று எனக்கே லஞ்சம் கொடுக்கத் துணிந்துவிட்டார். நான் ஆங்கில மொழியில் தீவிரமாகப் பயிற்சி பெற வேண்டுமென்பதிலும், ஆங்கிலேயருடைய நடை உடை பாவனைகளில் நான் என்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்பதிலும் அவருக்கிருந்த ஆசை எல்லையற்றது.

'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்'

என்ற குறளை என் தந்தை படித்திருந்தாரோ இல்லையோ, தெரியாது. ஆனால், என்னைப் பொறுத்த வரையில் அவருடைய செயல் ஒவ்வொன்றும் அப்படித்தானிருந்தது. அந்தக் காலத்து நடுத்தர வர்க்கத்தாரின் மிக உயர்ந்த லட்சியம் I.C.S. கல்வியும் கலெக்டர் பதவியுந்தான். என்னுடைய ஏழாவது வயது முதற் கொண்டே எனக்கு அந்த லட்சியத்தைப் போதிக்கத் தொடங்கி விட்டார் என் ஐயா. ஆம், அவரை நான் 'ஐயா' என்றுதான் அழைப்பேன். அவரும் அப்படித்தான் என்னை அழைப்பார்.

சமஸ்தானத்தின் தலைநகரமான புதுக்கோட்டைக்கு என்னைக் கூட்டிச் செல்வார். அங்கே 'ஆனந்த பாக்' என்று அழைக்கப்பட்ட பூங்காவுக்குள் அப்போது கூண்டுகளுக்குள் புலி, சிங்கம், கரடி முதலிய மிருகங்கள் அடைக்கப்பட்டிருந்தன. அவற்றை எனக்குக் காண்பித்து மகிழ்விப்பார். பூங்காவுக்குள் என்னோடு சுற்றுவார். சமஸ்தான அலுவலகமான 'பப்ளிக் ஆபீஸ்' என்ற கட்டிடத்தைச் சுற்றிக் காட்டி, ''இங்குதான் ஒரு நீதிபதியாகவோ, திவானாகவோ வேலை பார்க்கப் போகிறாய்'' என்பார்.

'ஆனந்தபாக்' பூங்கா நான் பெரியவனாகிப் புதுக்கோட்டையில் படித்த காலம் வரையில் எனக்கு மிகவும் பிடித்த புகலிடமாக விளங்கியது. இன்று அது அங்கே இல்லை. நான் அந்தப் பக்கம் போகும்போதெல்லாம் அது இருந்த இடத்தை நினைத்துப் பெருமூச்செறிகிறேன்.




எங்கள் கிராமமான பெருங்களூரில் என் தந்தை எங்கள் பரம்பரை உத்தியோகமான கோவில் கணக்குப் பிள்ளை உத்தியோகம் பார்த்த போது தான், தமக்கென ஒரு புது வீடு கட்டிக் கொள்வதில் மும்முரமாக முனைந்திருந்தார். எங்கள் பரம்பரை வீட்டில் என் சிறிய தகப்பனார் குடியிருந்தார். பங்காளிகளுக்குள் வழக்கமாக நடக்கும் போட்டி இவர்களுக்குள்ளும் நடந்ததாம்!

பின்னர் அந்த வீட்டை விடப் பெரிய வீடு ஒன்றைக் கட்டிக் கொண்டு, மற்றவர்களுக்கு முன்னால் தம்முடைய அந்தஸ்தை நிலைநாட்டிக் கொள்ளத் துணிந்து விட்டார் என் தந்தை. பரம்பரை வீடு ஓட்டு வீடு; இவர் புதிதாகக் கட்டியதோ மச்சு வீடு!

கையிலிருந்த பணம், கடன் வாங்கிய பணம், என் தாயாரின் நகைகள் முதலியவையெல்லாம் செங்கல்லும், சுண்ணாம்பும் இதர சாமான்களுமாக மாறின. அஸ்திவாரத்தை ஆழமாகவும், கவனமாகவும் போட்டுக் கொள்ளாமல் மளமளவென்று அவர் மாளிகையைத் துரிதமாக எழுப்பலானார்.

கோடை விடுமுறைக்கு நானும் என் தாயாரும் கரூருக்குச் சென்று விட்டு எங்கள் கிராமத்துக்குத் திரும்பினோம். பேருந்துவிலிருந்து கீழே இறங்கியவுடன் சாலையை ஒட்டிய தெருமுனையில் ஒரு புது வீடு திடீரென முளைத்தெழுந்திருப்பது தெரிந்தது. என் தந்தை அதைப் பூரிப்போடு எனக்குச் சுட்டிக் காட்டினார். சாலையோரச் சத்திரம் போல் தோற்றமளித்தது அது.




உயரமான வீடு. வெளிப்புறம் படிகள். விசாலமான திண்ணை. உள்ளே சதுரமான கூடம். கூடத்திற்குப் பின் சமையலறை, அதை அடுத்துத் தோட்டம், அதில் கேணி முதலியன.

''இன்னும் மேல்மாடி கட்டவில்லை. மாடியில் நீ படிப்பதற்குத் தனியாக அறை கட்டிப் படிகளும் வைத்து விடுகிறேன்'' என்றார் என் ஐயா. எந்தப் பக்கத்தில் எப்படி மாடி அறை கட்ட வேண்டும் என்றெல்லாம் என்னிடம் கூறியதாக நினைவு. அவரைப் பொறுத்த வரையில் நான் எதையும் புரிந்து கொள்ள முடியாத சிறு பிள்ளையில்லை. சமவயதுள்ள தோழன். எங்களுக்கிடையே இருந்த நாற்பதாண்டுக் கால இடைவெளியை அவர் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

அந்த வீட்டில் ஓராண்டுக் காலம் நாங்கள் குடியிருந்தும் என் அப்பா எனக்கு மாடி அறையைக் கட்டித் தரவில்லை. அவருக்குப் பல்வேறு பிரச்னைகள். காட்டிலாகா வேலையில் மேல் வரும்படி உண்டு. கோயில் கணக்கு வேலையைப் பொறுத்த மட்டில் 'சிவன் சொத்து குலநாசம்' என்ற கொள்கையில் அவர் உறுதியாக இருந்தார். தம்கை சுத்தமாக இருக்கும்படி மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டார். நிலபுலன்கள் இருந்தன. வேளாண்மையை நேரில் கவனிக்க வேண்டியிருந்தது

அவர் வெளியூரில் ஏதோ வேலையாகச் சென்றிருந்த சமயம் ஒரு பேரதிர்ச்சி தரும் நிகழ்ச்சி நடந்தது. அது 1929 ஆம் ஆண்டு என்று நினைவு.

சேர்ந்தாற்போல் மூன்று நான்கு நாட்களுக்கு இடியும் புயலும் மழையுமாகக் கிராமம் படாத பாடு பட்டது. 'மாதம் மும்மாரி' என்ன, ஆண்டுக்கு மும்மாரி கூடப் பெய்யாத வானம் பார்த்த சீமை எங்கள் புதுக்கோட்டைச் சீமை. எப்படியோ அங்கே கூட வானம் பொத்துக் கொண்டு கொட்டு கொட்டென்று கொட்டித் தீர்த்தது.



நள்ளிரவு.

நானும் தங்கையும் தாயாரும் பின் கட்டில் ஒரு மூலையில் உறங்கிக் கொண்டிருந்தோம். திடீரென்று ஓர் இடி விழுந்தது போன்ற பயங்கரமான சத்தம். அதுவும் நேரே எங்கள் தலைகளில் விழுந்த மாதிரிச் சத்தம்.

பொறி கலங்கிப் போய் நாங்கள் கூச்சலிட்டோம். கோழிக் குஞ்சுகளைத் தன் சிறகில் அணைக்கும் தாய்க் கோழி போல் எங்கள் இருவரையும் தம் இரு கரங்களிலும் அணைத்துக் கொண்டார் என் தாயார்.

இடி ஏதும் விழவில்லை. ஆனால் எங்கள் வீட்டின் முன் பகுதிதான் வெடித்து விழுந்து விட்டது!

அதற்குள் அக்கம் பக்கத்தார் கூடி விட்டார்கள். எங்களில் யாருக்குமே ஆபத்தில்லை என்பதில் அவர்களுக்கோர் மகிழ்ச்சி. எதிர் வீட்டில் நாங்கள் அடைக்கலம் புகுந்தோம்.

அந்தப் பயங்கரமான இரவு நேரம் எனக்கு இப்போதும் நன்றாக நினைவில் இருக்கிறது.

சிறிய கோட்டை போன்ற அந்த வீடு தகர்ந்து விட்டது. என் தந்தையைப் பொறுத்த வரையில் அது வெறும் வீடு மட்டுமல்ல. என்னைச் சுற்றி அவர் எழுப்பியிருந்த பிரம்மாண்டமான மனமாளிகையின் நிதர்சனமான சின்னம் அது. செங்கல்லையும், சுண்ணாம்பையும், மரத்தையும் மட்டிலும் வைத்து அவர் அதைக் கட்டியிருக்க மாட்டார். அவருடைய ஆசைக் கனவுகளையும், லட்சியங்களையும், உதிரத்தையும், உயிர்மூச்சையும் கொண்டு எனக்காகவே அதை உருவாக்கியிருந்தார்.

செய்தியை அறிந்து அவர் ஊரிலிருந்து திரும்பி வந்து, அதைக் கண்டு அவர் எப்படியெல்லாம் துடித்தாரோ தெரியாது. எத்தனையோ நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்து எழுதும் என்னால், அந்த ஒரு காட்சியை மட்டும் கற்பனை செய்யவே முடியவில்லை.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். அது அவருடைய வீட்டின் வீழ்ச்சியல்ல; குடும்பத்தின் வீழ்ச்சி; என் எதிர்காலம் பற்றி அவர் கண்டிருந்த அற்புதமான கனவுகளின் வீழ்ச்சி.

ஆற்றங்கரையில் செழித்திருந்த பயிர்போல அரசிளங் குமரனுக்கு ஒப்பாக நான் வாழ்ந்த வாழ்க்கையில் அன்று ஒரு பயங்கரமான திருப்பம் ஏற்பட்டு விட்டது. அதே நாளில் நான் ஆண்டிச் சிறுவன் ஆகிவிடவில்லையென்றாலும், அதற்கான தொடக்கத்தை என் தந்தையார் கட்டிய புதுவீடு தொடங்கி விட்டது.

அந்த இதழில்

என் குழந்தைப் பருவம்

— டாக்டர் பி. ராமமூர்த்தி



கூழாங்கல்லின் கதை




ஜவஹர்லால் நேரு

'தந்தை மகளுக்கு எழுதிய கடிதங்கள்' என்ற புத்தகம் அமரர் கே. ஆர். வாசுதேவன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு, பூரம் பப்ளிகேஷன்ஸால் வெளியிடப்பட்டிருக்கிறது. பாரதப் பிரதமராயிருந்த இந்திரா காந்திக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும்போது சிறையிலிருந்து ஜவாஹர்லால் எழுதிய கடிதங்களின் தொகுப்பே இந்தப் புத்தகம். 'இயற்கையெனும் புத்தகம்' என்ற தலைப்பில் தொடங்கி, 'இராமாயணமும், மகாபாரதமும்' என்ற தலைப்புடன் மொத்தம் 30 கடிதங்கள் கொண்டது இப்புத்தகம். இதில் ஏராளமான வண்ணப் படங்களைக் காணலாம். கூழாங்கல்லின் வரலாற்றை நேருஜி எவ்வாறு இங்கே கூறுகிறார், படித்துப் பாருங்கள்.

சிறியதொரு உருண்டையான பளபளக்கும் கூழாங்கல்லை நீ பார்த்தால், ஏதோ ஒன்றை அது உனக்குக் கூறுகிறது அல்லவா? கூரிய அல்லது கரடு முரடான முனைகளாக இல்லாமல் எப்படி அது உருண்டையாகவும் வழவழப்பாகவும் பளபளப்பாகவும் ஆயிற்று? பெரியதொரு பாறையை சிறு துண்டுகளாக உடைத்தால் ஒவ்வொரு துண்டும் கரடு முரடாகவும், கூரிய முனைகளை உடையதாகவும் இருக்கும். உருண்டையான வழவழப்பான கூழாங்கல்லைப் போலவே இருக்காது. பின், எப்படி அந்தக் கூழாங்கல் இவ்வளவு உருண்டையாகவும், வழவழப்பாகவும், பளபளப்பாகவும் ஆயிற்று. பார்க்க நல்ல கண்களும் கேட்க நல்ல காதும் இருந்தால் அது தன் கதையைச் சொல்லும். முன்னொரு காலத்தில் — வெகு காலத்திற்கு முன்பு இருக்கலாம் — பல நுனிகளையும் மூலைகளையும் கொண்ட பெரிய பாறையை உடைத்தால் கிடைக்கக் கூடிய சிறிய துண்டம் போன்ற ஒரு சிறு பாறைத் துண்டாகத்தான் இருந்தது என்று சொல்லும். அநேகமாக அத்துண்டு ஏதோ ஒரு மலைப்பாகமாகத்தான் கிடந்திருக்கும். பிறகு மழை பெய்து மழை நீரால் — அத்துண்டு சிறு சமவெளிக்கு அடித்துச் செல்லப்பட்டு அங்குள்ள மலையருவியால் மேலும் தள்ளப்பட்டு, முடிவில் ஒரு





சிறிய ஆற்றுக்குச் சென்றடைந்திருக்கும். அச்சிறிய ஆறு அத்துண்டை பெரிய ஆற்றுக்குள் அடித்துக் கொண்டு போயிருக்கும். இவ்வளவு காலமும் அது ஆற்றின் அடியிலே உருண்டு கொண்டேயிருக்கும். அதன் நுனிகள் மழுங்கிப் போய் கரடு முரடான மேற்புறம் வழுவழுப்பாகவும் பளபளப்பாகவும் ஆகியிருக்கும். இப்படிந்தான் நீ பார்க்கும் கூழாங்கல் உண்டாயிற்று. எப்படியோ முடிவில் ஆற்றினால் அது மேலும் அடித்துச் செல்லப்படாது போகவே, அதை நீ காண முடிந்தது. ஆறு அதை மேலும் அடித்துச் சென்றிருந்தால் அது மேலும் மேலும் சிறியதாகி மணலாகி கடற்புறத்தில் மணலோடு மணலாகக் கலந்து சிறுகுழந்தைகள் மணல் வீடு கட்டி, விளையாடும் அழகிய கடற்கரை ஆகியிருக்கும்.

ஒரு கூழாங்கல் இவ்வளவு கூற முடிந்தால் அனைத்துப் பாறைகள், மலைகள் மற்றும் நம்மைச் சுற்றி லுமுள்ள பல பொருள்கள் இவற்றி லிருந்து மேலும் எத்தனை எத்தனையோ விஷயங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும். யோசித்துப் பார்!

— 'தந்தை மகளுக்கு எழுதிய கடிதங்கள்' — பெரிய அளவில். பக்கங்கள் 114, விலை ரூ. 15/—; வெளியிட்டோர்: பூரம்பப்ளிகேஷன்ஸ், சென்னை — 33.

சேர வேண்டிய இடம்



நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்குச் சென்னை கோகலே மண்டபத்தில் நிதி அளிப்பு விழா நடந்தது. நிதியாக சுமார் 13,000 ரூபாய் சேர்ந்து இருந்தது. விழாத் தலைவர் ராஜாஜி, அந்தப் பணத்தை ஒரு தட்டில் வைத்துக் கவிஞரிடம் கொடுத்தார். கவிஞர் அதை வாங்கித் தம் பக்கத்திலிருந்த தம் மனைவியிடம் கொடுத்தார்.

அதைக் கண்ட ராஜாஜி சிரித்துக் கொண்டே, "பணம் சேர வேண்டிய இடத்தில் பத்திரமாகச் சேர்ந்து விட்டது!" என்றார்.

கூடியிருந்தவர்களின் சிரிப்பொலி மண்டபத்தை நிரப்பியது.

— எம்.எஸ். விமலா.



பேரொளி ஏசு

பெத்லஹேம் நகரிலே
ஏசு பிறந்தார்;
பேரொளியின் வடிவமாய்
தேவன் பிறந்தார்!

சத்ய மேரி பாலராய்
கிறிஸ்து பிறந்தார்;
சாந்த மாட்டுத் தொழுவத்தில்
கர்த்தர் பிறந்தார்!

உலகமெல்லாம் வாழ்ந்திட
வழிகள் கூறினார்;
உண்மை ஒளி காட்டியே
அருளைப் பரப்பினார்!

சிலுவையிலே இறக்கும் போதும்
தேவ குமாரன்,
தீயவரை மன்னித்து
இரக்கம் காட்டினார்!

ஈசனுடல் சிலுவையிலே
மாண்ட போதிலும்,
இவ்வுலகைக் காத்திட
உயிர்த்து எழுந்தார்!

ஏசு நாம் போற்றியே
உண்மை பேணுவோம்!
மாசு நீக்கி மனமெல்லாம்
தூய்மை காணுவோம்!








பழமொழிப் புதிர்

புதிர்-25



புதிர்-26



ஒவ்வொரு படமும் ஒரு பழமொழியை நினைவூட்டுகிறதல்லவா? எந்த எந்தப் பழமொழி எனக் கண்டுபிடியுங்கள்.

விடை 19 ஆம் பக்கம்.

தவளை நண்பன்



மா.தா. ஸ்ரீதர் (1360)

கேசவன் ஒரு ஆட்டோ டிரைவர். காலையில் சவாரிக்குச் சென்றால், இரவில்தான் வீடு திரும்புவார். அவர் வீடு பகல் வேளையில் எப்பொழுதும் பூட்டியிருக்கும். பூட்டியிருந்த வீட்டில் பல்லி, கரப்பான் பூச்சிகளோடு ஓர் எலியும், தவளையும் சேர்ந்து கொண்டன.

கேசவன் இல்லாத பொழுது வீட்டில் எலியும் தவளையும் இங்கும் அங்குமாக ஓடி விளையாடிக் கொண்டிருக்கும். எலி துணிகளையெல்லாம் கடித்துவிடும். பலகாரம் வாங்கி வைத்தால், மிச்சம் மீதி வைக்காமல் தின்றுவிடும். எலித் தொல்லையைப் போக்க, கேசவன் ஒரு பூனையைக் கொண்டு வந்து வளர்த்தார். அதற்கு பன், இட்லி, பால் என்று ஊட்டிச் செல்லமாக வளர்த்தார்.

தின் பண்டங்களின் ருசியில் ஊறிப்போன பூனை, கேசவன் வேலைக்குப் போனவுடனே கூரை மேல் ஏறி நிம்மதியாகத் தூங்கும். திரும்பவும் கேசவன் வரும்பொழுது 'மியாவ் மியாவ்' என்று கத்தி அவனை வரவேற்கும்.

வீட்டிற்குள் கொட்டமடிக்கும் தவளையும், எலியும் கதவு திறந்தால் போதும், உடனே ஓடி மறைந்து கொள்ளும்.

ஒரு நாள் எலியின் நண்பன் தவளை ஒரு கோணிப்பைக்குள் மாட்டிக் கொண்டு வெளியேறத் தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தது. எலி உடனே அந்தக் கோணிப் பையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்து அதைத் தப்பிக்க வைத்தது.

மறு நாள்.

வழக்கம் போல இரவில் கேசவன் வீடு திரும்பினான். வழக்கம் போலவே பூனை 'மியாவ் மியாவ்' என்று அவனை வரவேற்றது. கேசவன் ஆசையோடு அதைப் பிடித்துத் தூக்கினான். கதவைத் திறந்து பூனையை முதலில் விட்டு பின்னர் வீட்டினுள்ளே நுழைந்தான்.

வீட்டிற்குள்ளே ஒரே இருட்டு. எலியும், தவளையும் அப்போது ஏதோ பேசிக் கொண்டிருந்தன. இருட்டிலும் அந்தப் பூனை தன் கொள்ளிக் கண்களால் எலியைப் பார்த்துவிட்டது.

அடுத்த கணம்!

பூனை அவைகளை நோக்கி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. திடுக்கிட்ட எலியும், தவளையும் தாவிக் குதித்துத் தலைதெறிக்க ஓடின. பூனையும் அவைகளை விடாமல் துரத்தியது. ஆனாலும் இரண்டும் எப்படியோ பூனையிடம் அகப்படாமல் தப்பி ஓடி விட்டன.

அந்த வீட்டுப் பக்கத்தில் ஒரு சிறிய குளம் இருந்தது.

''நான் குளத்தில் குதித்து விடுகிறேன்'' என்று தவளை கூறியது. அப்போது எலி, ''என் கதி என்ன?'' என்று கேட்டது. தவளை எலி வாலைத் தன் காலில் முடிச்சுப் போட்டுக் கொண்டது. ''என்ன செய்யப் போகிறாய்?'' எலி கேட்டது.

''இந்தக் குளத்தில் குதித்து, நீந்தி அக்கரைக்குப் போகப் போகிறேன்! உன்னையும் காப்பாற்றப் போகிறேன்!'' என்றுபதில்கூறிக்கொண்டே குளத்தில் குதித்து விட்டது.


தவளை குளத்தின் எதிர் கரையை அடைந்தது. காலில் முடிச்சுப் போட்டிருந்த வாலைப் பிடித்து இழுத்தது. பார்த்தால், எலி நண்பன் செத்துப்

கதையரங்கம்

போய்க்கிடக்கிறது! நீந்தத் தெரியாத எலி குளத்தில் மூழ்கிச் செத்து விட்டது.

"நான் ஒரு முட்டாள்! நண்பனைக் காப்பாற்றப் போய் கொன்று விட்டேனே!'' என்று வருந்தி, குளத்தின் கரையில் உட்கார்ந்து அழுது கொண்டே இருந்தது தவளை.

சேமிப்பு



ஆர். கார்த்திகைச் செல்வி (3/32)

அந்தத் தெருவில் ஜெயம்மா வீட்டைத் தவிர மற்ற வீடுகளில் இருந்த குடும்பத் தலைவிகள் யாவரும் எரிச்சல் அடைந்தனர். காரணம் ஜெயம்மா வீட்டில் சமீபத்தில் டி.வி. வாங்கியிருந்ததுதான். அந்தத் தெருவில் வேறு யாருடைய வீட்டிலும் டி.வி. இல்லை. அவ்வீடு கூட்டுக் குடும்பமாதலால் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகம். அவர்களுடன் சேர்ந்து ஞாயிறு தோறும் டி.வி.யில் தமிழ்ப் படம் பார்க்க அந்தத் தெருவில் வசிக்கும் குழந்தைகள் வருவார்கள். அவரவர் வீட்டில் அடம்பிடித்து, ஜெயம்மாவின் கட்டளைப்படி தலா ஒரு ரூபாய் கொடுத்து அவர்கள் படம் பார்ப்பார்கள்.

ஓராண்டுக்கு மேல் ஓடிவிட்டது. ஜெயம்மா குடும்பம் வேறு ஊருக்குச் சென்று குடியேறும் கட்டாயம் ஏற்பட்டது. சாமான்கள் அனைத்தும் கொண்டு செல்லப்பட்டன. கடைசியில் அனைவரும் வேனில் ஏறிவிட்டனர். ஜெயம்மா மட்டும் கையில் சில புதிய பொருள்களுடன் அங்கே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பிற வீட்டுக் குடும்பத் தலைவிகளை அணுகினாள். ஆளுக்கு ஒரு பொருளாக கலங்கிய கண்ணீருடன் தந்தாள்.

"உங்களின் குழந்தைகள் படம் பார்க்கத் தந்த பணங்களை எல்லாம் ஓர் உண்டியலில் போட்டுச் சேமித்து வைத்திருந்தேன். பிரிவு எந்த ரூபத்திலும் வரும் என்று எனக்குத் தெரியும். இந்தப் பொருள்களை என் நினைவாக உங்களுக்குத் தரவில்லை. நீங்களாகவே சேமித்திருந்தால் சினிமா, டிராமா என்று அச்சேமிப்பு கரைந்து விடும். அதற்காகவே இந்த ஏற்பாடு''. என்று ஜெயம்மா கூறியதைக் கேட்டு அனைவரும் வியந்தனர், மகிழ்ந்தனர் பிரிவை எண்ணிக் கலங்கினர்.

சமீப காலத்தில் அவர்கள் என்னென்ன வாங்க வேண்டும் என்று பொது இடத்தில் பொழுது போக்குக்காகப் பேசும் போது பிறரிடம் கூறிக்

பழமொழிப் புதிர் விடை:

புதிர் — 25: வாளினும் வல்லமை வாய்ந்தது பேனா.

புதிர் — 26: ஆற்றிலே அதிக வெள்ளம் போனாலும், நாய் நக்கி நக்கித்தானே குடிக்க வேணும்?

கொண்டிருந்தார்களோ, அப்பொருள்களே ஒவ்வொருவரின் கையிலும் இருந்தன.

அந்தக் குடும்பத்தலைவிகள் ஜெயம்மாவைப் பார்வையாலேயே பேசி வழி அனுப்பி வைத்தனர். வேன் கிளம்பியது. அதன் பின்பும் ஐந்து நிமிடங்கள் யாரும் அசையவில்லை.



தணிகாசலம், தம் பக்கத்து வீட்டுக்கு வந்து நாற்காலியில் அமர்ந்திருந்தார். அந்த வீட்டுச் சிறுமியான மீனு அவர் மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டு அவரது மீசையைப் பிடித்து இழுப்பதும், வாய்க்குள் விரலை விடுவதும், அவர் மடியில் குதிப்பதுமாக இருந்தாள்.

அவருக்குக் கோபம் கோபமாய் வந்தது. அதட்டவும் முடியாத நிலை. சலவை செய்து கசங்காமல் இருந்த தம்து உடைகள் அழுக்காகிக் கொண்டிருப்பதை அவர் விரும்பவில்லை என்றாலும், அதட்ட முடியாத இக்கட்டான நிலை. தணிகாசலத்தின் சங்கடத்தை உணர்ந்த மீனுவின் தந்தை,

"மீனு, உள்ளே போய் சாப்பாடு ஆகி விட்டதா என்று பார்?"

மீனுவோ தந்தையின் கட்டளையைத்தலைமேற்கொள்ளவில்லை. சேஷ்டைகள் தொடர்ந்தன.

சிறிது நேரம் ஆனதும் தணிகாசலம் விட்டால் போதும் என்று ஓட்டம் பிடித்து விட்டார். மீனுவின் தந்தை மீனுவை அழைத்து,

"ஏன் மீனு. மாமா பக்கத்து வீடு தானே? அப்பொழுதெல்லாம் கொஞ்சாமல், நம் வீட்டுக்கு விருந்துக்கு வந்திருக்கும் போது அப்படி என்ன கொஞ்சல் வேண்டிக்கிடக்கிறது?" என்று கண்டித்தார்.

அதற்கு மீனு, "பின்னே என்ன அப்பா? அவர் வீட்டுக்குச் சென்றால் பேசுவதில்லை. அருகில் சென்றால், 'தொடாதே, சட்டை அழுக்காயிடும்' என்று அதட்டுகிறார். தன் குழந்தையை மட்டும் கொஞ்சுவது, மடியிலே தூக்கி வைத்துப் புகழுவது. என்னை மட்டும் பிடிப்பதில்லை. நான் என்ன பிசாசா பிடுங்கி தின்பதற்கு? அதற்காகத்தான் இப்படிச் செய்தேன்"

இப்படிக் கோபத்தில் படபடவென்று பேசினாள் ஐந்து வயது மீனு.

அப்பொழுது தற்செயலாக விட்டுப்போன துண்டை எடுக்க வந்த தணிகாசலம், மீனுவின் பேச்சைக் கேட்டு வெட்கிப் போனார். 'ஒரு பிஞ்சு உள்ளத்தை வாட விட்டோமே! அதனிடத்தில் வெறுப்பு வளர வகை செய்தோமே!' என்று, வருந்தினார். மௌனமாகத் தம் துண்டுடன் மீனுவையும் சேர்த்துத் தூக்கிக் கொண்டு புன்னகையுடன் தம் வீடு சென்றார்.



"ஒரு ஜிலேபி ரூ. 1.80.
ஒரு லட்டு ரூ. 1.75.
ஒரு அல்வா ரூ. 2.25.
ஒரு குலோப்ஜான் ரூ. 2.50. என்றால், மொத்தம் எவ்வளவு?"

"ஸாரி சார்! எனக்குச் சர்க்கரை வியாதி! இந்தக் கணக்கு எனக்கு ஒத்துக்காது!"

இருமொழிகளில் பழமொழிகள்



PARALLEL PROVERBS

புத்திமானே பலவான்

Knowledge is power

அணைக்கும் ஒரு கை; அடிக்கும் ஒரு கை

Love well; Whip well.

வைகறைத் துயில் எழு

Lie with the lamb and rise with the lark

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்

Lie is a nine days wonder

ஒன்றும் தெரியாதவனுக்கு எதிலும் சந்தேகம் இல்லை.

He who knows nothing, doubts nothing.

தாயைப் போல் பிள்ளை;
நூலைப் போல் சேலை;

A tree is known by its fruits.

திருடனைப் பிடிக்க திருடனை விடு.

Set a thief to catch a thief.

பால சோதிடர்; விருத்த வைத்தியர்

An old physician and a young astrologer

கோபம் சண்டாளம்.

Anger is a sworn enemy.



இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை.

Good deeds are never lost.

அரைக் காசுக்குப் போன மானம் ஆயிரம் வராகன் கொடுத்தாலும் வராது.

A wonded reputation is seldom cured.

இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவான்.

Give him an inch; he will take an ell.



ஆசை வெட்கம் அறியாது

Desire knows no shame.

வெறும் வாயை மெல்லுகிறவனுக்கு அவல் கிடைத்தாற் போல

Better half a loaf than no bread.

ஒழுக்கமே ஒருவனை மனிதனாக்கும்.

Manners make a man.

ஆபத்துக்குப் பாபம் இல்லை.

Necessity has no law.

உழுகிற மாடானால் உள்ளூரில் விலைப் போகாதா?

Good wares find a quick master.

பணக்காரனைச் சுற்றிப் பத்துப் பேர்

Friends flock round the rich.

காலனுக்கு காலம் இல்லை.

Death keeps no calender.


ஆட மாட்டாதவள் கூடம் போதாது என்றாளாம்.

A bad woman quarrels with her tools.


— அ. ஆனந்தகுமார் (10715), கரூர்.

சித்திரப் புதிர்! 23


ஆழி ———




1 இது ஒரு கோழிதான். ஆனால், என்ன கோழி என்று தெரியுமா?



2 மைசூரில் உள்ள, இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தச் சிலையின் பெயர் என்ன?



3 எந்த மாநில அரசின் சின்னம் இது?



4 ஜப்பானிலுள்ள உலகப் பிரசித்தி பெற்ற இந்த மலையின் பெயர் என்ன?



5. இவள் எந்த நாட்டுப் பெண்மணி?

விடை வேறு பக்கம்

மூக்கில் இரத்தம் வருகிறதா?



டாக்டர் பக்கம்

டாக்டர் கு.கணேசன்

சங்கரைத் தெரியுமா உங்களுக்கு? எங்கள் ஊர் மேல்நிலைப் பள்ளியொன்றில் பத்தாம் வகுப்பு படிக்கிறான் சங்கர். நல்ல பையன். புத்திசாலி. மிகவும் சுறுசுறுப்பானவன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை. நான் சற்றே ஓய்வாக இருந்த போது சங்கர் என்னைப் பார்க்க அவசரம் அவசரமாக ஓடி வந்தான். அவன் மூக்கிலிருந்து இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது.

"என்ன சங்கர், என்ன விஷயம்?" என்று கேட்டேன். சங்கர், 'ஹோ'வென அழுதவாறே, "டாக்டர், என் மூக்கிலிருந்து இரத்தமா கொட்டுது டாக்டர்... எனக்குப் பயமா இருக்கு டாக்டர்... என்ன காரணம்னு தெரியலே... திடீர்னு மூக்கிலிருந்து 'சொலு, சொலு'ன்னு இரத்தம் கொட்ட ஆரம்பிச்சிட்டது. சீக்கிரம் பாருங்க டாக்டர்...." என்று பதறியபடி சொன்னான்.

அவன் சட்டையெல்லாம் இரத்தக் கறை. மூக்கில் இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. கண்களில் கண்ணீர்.

உடனே அவனை பெஞ்சில் உட்கார வைத்துப் பரிசோதித்தேன். பிறகு, "பயப்படாதே சங்கர்! உனக்கு 'சில்லு மூக்கு' விழுந்திருக்கிறது. இன்னும் சில நிமிடங்களில் உன் மூக்கில் இரத்தம் வடிவதை நிறுத்தி விடலாம்" என்று தைரியம் சொல்லிக்கொண்டே என் சிகிச்சை முறைகளை ஆரம்பித்தேன்.

அடுத்த ஆறாவது நிமிடம் அவன் மூக்கில் இரத்தம் கொட்டுவது நின்று விட்டது!

சங்கர் பெருமகிழ்ச்சி அடைந்தான்.

அம்மகிழ்ச்சியின் நடுவில் எங்களுக்குள் நடந்த உரையாடலை உங்களுக்குத் தருகிறேன். உபயோகமாக இருக்கும் —

சங்கர்: டாக்டர், 'சில்லு மூக்கு' என்றால் என்ன? இதுவரை நான் கேள்விப்பட்டதே இல்லையே?

நான்: சில்லு மூக்கு என்பது வேறொன்றுமில்லை. மூக்கில் உள்ள சிறு இரத்தக் குழாய்கள் கிழிபடும் போது திடீரென்று மூக்கிலிருந்து இரத்தம் வெளிவர ஆரம்பிக்கும். அதைத்தான் 'சில்லு மூக்கு' என்று

பொதுவாகச் சொல்வார்கள். இதை மருத்துவ ரீதியில் 'எபிஸ்டாக்சிஸ்' (Epistaxis) என்று அழைப்போம்.

சங்கர்: என்ன காரணத்தினால் இம்மாதிரி மூக்கில் இரத்தம் வருகிறது, டாக்டர்? அதையும் சொல்லுங்களேன்; தெரிந்து கொள்கிறேன்.

நான்: சொல்கிறேன் கேள். மூக்கிலிருந்து இரத்தம் வருவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றாகச் சொல்கிறேன்.

மூக்கில் அடிபட்டாலோ, அல்லது காயம் பட்டாலோ இரத்தம் வரலாம். நமக்கு ஜலதோஷம் பிடிக்கும்போது மூக்கில் சளி கட்டும். அச்சமயங்களில் அளவுக்கதிகமான ஈரத்தன்மை காரணமாக மூக்கின் உட்பகுதியில் சிறு வெடிப்புகள் உண்டாகி இரத்தம் கசியலாம். அல்லது சளியை வெளியேற்ற மூக்கை வேகமாகச் சிந்தும்போது மூக்கிலிருந்து இரத்தம் கொட்டலாம்.

சில குழந்தைகள் எப்போது பார்த்தாலும் மூக்கில் விரலை நுழைத்துக் குடைந்து கொண்டே இருப்பார்கள். சிலர் குச்சி, பலப்பம், கட்டை, பயிறு, பட்டாணி, பென்சில் போன்ற பொருட்களை மூக்கில் செலுத்தி விளையாடுவார்கள், பார்த்திருக்கிறாயா?

சங்கர்: ஆம், பார்த்திருக்கிறேன், டாக்டர். இன்னும் சொல்லப்போனால் நான்கூட அம்மாதிரி செய்திருக்கிறேன், டாக்டர்...

நான்: பார்த்தாயா... அம்மாதிரித் தப்பான காரியங்கள் செய்வதால் மூக்கில் புண் உண்டாகி இரத்தம் வடியும். இது தவிர தொண்டை அடைப்பான், தொழு நோய், டைபாய்டு, அம்மை நோய் போன்ற தொற்று நோய்கள் இருந்தாலும், மூக்கில் இரத்தம் வடியலாம்.

குழந்தைகளுக்கு மூக்கிலும் தொண்டையிலும் சதை வளர்வது இயல்பு. அம்மாதிரிநேரங்களில்நோய்த்தடுப்பு இருந்தால் மூக்கிலிருந்து இரத்தம் வெளிப்படலாம்.

உடம்பில் இரத்த உறைவுக் கோளாறு இருந்தாலும் மூக்கிலிருந்து இரத்தம் கொட்டும்.

சங்கர்: ஏன் டாக்டர், இது குழந்தைகளுக்கு மட்டுமே வருமா? இல்லை, பெரியவர்களுக்கும் வருமா?

நான்: பொதுவாகக் குழந்தைகளுக்குத்தான் அடிக்கடி மூக்கிலிருந்து இரத்தம் வடியும். பெரியவர்களுக்கு எப்போதாவது வரலாம். இரத்தக் கொதிப்பு அதிகமாக இருந்தாலோ அல்லது மூக்கில் புற்று நோய் இருந்தாலோ பெரியவர்களுக்கு மூக்கிலிருந்து இரத்தம் கொட்டலாம்.

சங்கர்: இப்படி மூக்கில் இரத்தம் கொட்டுவது ஆபத்தானதா, டாக்டர்?

நான்: அவ்வளவாக ஆபத்து வருவது இல்லை. இரத்த உறைவுக் கோளாறு (Haemophilia) உள்ளவர்களுக்கு வேண்டுமானால், அதிகமாக இரத்தம் வெளியேறும் வாய்ப்பு உள்ளது. மற்றவர்களுக்கு இரத்தம் கொட்ட ஆரம்பித்த சில நிமிடங்களில் நின்றுவிடும். ஆனாலும், இரத்தம் கொட்டுவதை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியுமா என்ன? உடனே, அதை நிறுத்துவதற்கு முயற்சிகள் செய்ய வேண்டாமா?

சங்கர்: ஆமாம் டாக்டர். கண்டிப்பாகச் செய்ய வேண்டும். அந்த வழிமுறைகளை எனக்கும் சொல்லிக் கொடுங்கள், டாக்டர்.

நான்: மூக்கிலிருந்து இரத்தம் வடியும் நபரைச் சற்றே தலையைக் குனிந்து கொண்டு உட்காரச் செய்ய வேண்டும். பெருவிரலையும் மற்ற விரல்

சித்திரப் புதிர் - 23 விடை

1. காணுங்கோழி
2. கோமதீஸ்வரர்
3. கேரள மாநிலம்
4. பியூஜி
5. லடாக்

களையும் வைத்து மூக்கின் இருபுறங்களையும் உறுதியாக — அதே சமயத்தில் மென்மையாக — அழுத்திப் பிடிக்க வேண்டும். சுமார் பத்து நிமிடங்கள் வரை இவ்வாறு செய்தால், மூக்கில் இரத்தம் வருவது நின்றுவிடும்.

இதற்குப் பிறகும் இரத்தம் வடியுமானால், மூக்கின் மேல் குளிர்ந்த நீரை ஊற்றலாம். அல்லது ஐஸ் கட்டியை மூக்கின் மேற்பகுதியும் நெற்றியும் இணையுமிடத்தில் அழுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதன் மூலமும் மூக்கில் இரத்தம் வருவதை நிறுத்தி விட முடியும்.

இதையும் மீறி இரத்தம் வருகிறது என்று வைத்துக் கொள்வோம். சுத்தமான திரி போன்ற நீண்ட துணியைக் குளிர்ந்த நீரில் தோய்த்துப் பிழிந்து, மூக்குத்துவாரத்தை அடைக்கலாம்.


இதிலும் இரத்தம் நிற்கவில்லையா? இனிமேல் உங்களுக்கு வேலையில்லை. நேராக டாக்டரிடம் சென்று முறையான சிகிச்சை முறைகளை மேற்கொள்ள வேண்டியதுதான்.

சங்கர்: நீங்கள் எப்படி டாக்டர் மூக்கில் இரத்தம் ஒழுகுவதை நிறுத்துகிறீர்கள்?

நான்: உன் ஆசையைப் பூர்த்தி செய்ய அதையும் சொல்கிறேன், கேள். சுத்தமான துணியை அட்ரீனலின் என்ற மருந்தில் தோய்த்து மூக்குத் துவாரத்தைத் தற்காலிகமாக அடைத்து வைப்போம்; இந்த அட்ரீனலின் மருந்திற்கு இரத்த நாளங்களைச் சுருக்கி இரத்தம் வெளி வருவதைத் தடுக்கும் சக்தி உண்டு. சில சமயங்களில் மின் சூட்டுக் கோலால் (Cautery) இரத்தக் குழாய்களைப் பொசுக்கி இரத்தம் வடிவதை நிறுத்துவோம்.

சங்கர்: மூக்கில் இரத்தம் வராமல் இருப்பதற்கு ஏதேனும் தடுப்பு முறைகள் இருக்கிறதா டாக்டர்?

நான்: இருக்கிறதே... முதலில் கண், காது, பல் போன்றவற்றைப் பாதுகாப்பதைப் போல் மூக்கையும் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். மூக்கில் அடி படாமல் இருக்க வேண்டும். குழந்தைகள் சண்டை போடும் போது மூக்கில் குத்திவிடக் கூடாது.



''என்னோட புது டெஸ்ட் புக்கை இரவல் கேட்கிறயே! எதுக்கு? படிக்கவா?''

''ஊகும்! புது பிளேடு வாங்கினேன். அதன் கூர்மையை 'டெஸ்ட்' பண்ணிப் பார்க்கணும்.''

மூக்கில் சளி, ஜலதோஷம் ஆகியவை பிடிக்காதவாறு சுகாதார முறைகளைக் கையாள வேண்டும். மூக்குச் சளியை வேகமாகச் சிந்தி வெளியேற்றக் கூடாது.

மூக்கில் விரலை நுழைத்து நோண்டும் பழக்கத்தை விட்டு விட வேண்டும். பென்சில், குச்சி, பலப்பம் போன்ற பொருட்களை மூக்குத் துவாரத்தில் நுழைத்து விளையாடக் கூடாது.

உடம்பில் வேறு ஏதேனும் தொற்று நோய்கள் இருந்தால் அவற்றுக்கு முறையாக வைத்தியம் பெற வேண்டும்.

குழந்தைகளுக்கு அடிக்கடி மூக்கில் இரத்தம் வடிந்தால், அலட்சியமாக இருக்காமல் மருத்துவரிடம் கலந்தாலோசித்து, காரணமறிந்து மருத்துவம் பெற வேண்டும்.

பெரியவர்கள் அவ்வப்போது மருத்துவரிடம் சென்று இரத்தக் கொதிப்பு சீராக இருக்கிறதா என்பதைச் சரி பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த வழிமுறைகளையெல்லாம் கடைப்பிடித்தால் நிச்சயம் மூக்கிலிருந்து இரத்தம் வெளிவராது.

சங்கர்: சரி டாக்டர், இனிமேல் அப்படியே கடைப்பிடிப்பேன் டாக்டர். மீண்டும் என் மூக்கில் இரத்தம் ஒழுகாமல் பார்த்துக் கொள்வேன். மிக்க நன்றி, வணக்கம்.

நான்: வணக்கம்.


பிருந்தாவனக் கவியரங்கம்

சுண்டெலியும் கருப்புப் பூனையும்

திருட்டு எலியைப் பிடித்திடவே
கறுப்புப் பூனையும் வந்திடவே
இருட்டு முழுக்கத் தேடிவிட்டு
வெறுத்துப் போய் அது படுத்திடவே

பானைகள் இடுக்கில் எலிநுழைய,
பார்த்ததும் பூனை பாய்ந்திடவே
பானைகள் கீழே விழ்ந்தனவே,
பாழும் எலியைக் காணவில்லை!

பெட்டி மேலே எலி இருக்க
கட்டிப் பூனை தாவிடவே
பெட்டியும் கீழே விழுந்ததுவே,
'பே'எனப் பூனை விழித்ததுவே!



கிணற்றுக் கரையில் எலிநிற்க
கறுப்புப் பூனை பாய்ந்திடவே
சட்டென எலியும் நகர்ந்திடவே
தாவிய பூனையின் கதிஎன்ன?

— மா. சேகர் (11,599), திருச்செங்கோடு.

விளங்கிடும் விஷயங்கள்

வானம் முழுதும் நீல வர்ணம்
பூசிய தாரோ? — அது
மாலை நேர மாகும் போது
மங்குவ தேனோ?

பஞ்சு மிட்டாய் வான் திரையைப்
போட்டது யாரோ? — அது
பறந்து பறந்து என் மனத்தை
கவர்வது ஏனோ?

பாலி னிலே ஊறிப் போன
அப்பம் எடுத்து — அதை
வானத் திலே ஒட்டும் படி
வீசிய தாரோ?



பொன் னிறத்துச் சாயல் கொண்ட
முத்திலே வானில் — தினம்
பொறுக்கி எடுத்துச் சிதறும் படி
எறிவது யாரோ?

மின்மினி போல் பள பளக்கும்
சரிகையை எடுத்து — அதை
மழையின் போது மேகத் திலே
தெளிப்பது யாரோ?

வியப்பைத் தரும் இவ் வளவும்
படைத்தது யாரோ? — இந்த
விந்தை உலகைப் படைத்த வர்தான்!
வேறு யார் உளார்?

— த. அருள் சிவபாலன் (47),
செங்கல்பட்டு — 1.

நமக்கு வேண்டுவன

காலையிலே குளிர்நீரில் குளிக்க வேண்டும்
கருத்துடனே தெய்வத்தை நினைக்க வேண்டும்
வேலையிலே சோம்பாத விரைவு வேண்டும்
வெட்டிச்சொல் பேசுவதைக் குறைத்தல்
வேண்டும்

மாலையிலே மகிழ்வுடனே உலாவ வேண்டும்
மனம்நிறைந்த நித்திரையும் இரவில்
வேண்டும்
சோலையிலே சுற்றுகிற கிளியைப் போல
'சுதந்திரமாய்' வாழ்வதற்கு முயல வேண்டும்

சத்தான உணவுதனை உண்ண வேண்டும்
'சரிவிகித' உணவினிலே சுவையும்
வேண்டும்
கொத்தான மல்லியுடன் கீரை வேண்டும்
கொழுப்புநிறை பொருள்களையே நீக்க
வேண்டும்
சுத்திசெய்த பகங்காய்கள் மிகுதி வேண்டும்
சுவைநல்கும் பழம்தயிர்பால் வெண்ணெய்
வேண்டும்
பத்தியமாய் உணவுமுறைப் பழக்கம்
கொண்டால்
பலகாலம் நோயின்றி வாழலாமே!



பொய்யான் சொற்களையே நீக்க வேண்டும்
பொறுமையுடன் வாழ்வதற்குப் பழக
வேண்டும்
செய்கின்ற பணியதனில் திருத்தம் வேண்டும்
செயல்திறனில் தளராத முயற்சி வேண்டும்
எய்யாத சொற்களையே பேச வேண்டும்
எவரிடமும் பணிவுடனே அன்பும் வேண்டும்
தொய்யாத மனமுடனே தொண்டு செய்து
தொல்லுலகில் நன்மகளாய் வாழ வேண்டும்

— எஸ். முத்துலட்சுமி (1992),
கிருட்டிணகிரி.

எங்கள் வேலை

செல்கிறோம் செல்கிறோம்
பள்ளிக்கூடம் செல்கிறோம்!

படிக்கிறோம் படிக்கிறோம்
பாடங்களைப் படிக்கிறோம்!

ஆடுவோம் ஆடுவோம்
மாலையில் ஆடுவோம்!

பாடுவோம் பாடுவோம்
பாட்டுக்கள் பாடுவோம்!




ஓடுவோம் ஓடுவோம்
வீட்டிற்கு ஓடுவோம்!

செய்குவோம் செய்குவோம்
வேலைகளைச் செய்குவோம்!

தூங்குவோம், தூங்குவோம்!
சாப்பிட்டுத் தூங்குவோம்!

— ம. அருள் (2167), கதிராமங்கலம்.

என் ஒரு நாள் கதை





விடியற் காலையில் எழுந்தேன்
பாடங்கள் பலவும் பயின்றேன்.
பள்ளிக்குச் செல்லத் துணிந்தேன்.
பாங்காய் நானும் நடந்தேன்.

பள்ளி வழிபாட்டில் கலந்தேன்.
பணிவாய்ப் பாடம் பயின்றேன்.
ஆசிரியர் சொல்படி நடந்தேன்.
அன்பாய் ஆடி மகிழ்ந்தேன்.

பள்ளி முடிந்ததும் வந்தேன்.
பலகாரம் கொஞ்சம் உண்டேன்.
வீட்டுப் பாடம் முடித்தேன்.
உணவுண்டு நானும் படுத்தேன்.

— ஜா. அருணசலம் (10,280),
சென்னை — 17.


கெடுவான் கேடு நினைப்பான்.....
படக்கதை —
ஓவியர் – S.K.ராமானுஜம் (ராஜு)
முருகன் தன் ஆடு, மாடுகளை, தினமும் காட்டிற்கு ஓட்டிச்செல்வான்
ஒருநாள்.. முருகனின் இரண்டு ஆடுகள், காட்டில் தனியாக மேய்ந்து கொண்டிருந்தன. அப்பொழுது ஒரு ஓநாய் அங்கு வந்தது
ஓநாய், அதில் ஒரு ஆட்டைத் தின்று தன் பசியைப்போக்கிக்கொண்டது.
புத்திசாலியான இன்னொரு ஆடு ஒரு முரட்டுக்காளையைத் தன் நண்பனாக்கிக்கொண்டது.
முரட்டுக்காளையுடன் சேர்ந்து... புத்திசாலி ஆடு புல்மேய்வதை ஓநாய் கண்டது....
உடனே ஓநாய் அந்த ஆட்டின் மீது வேகமாகப்பாய்ந்தது...
அதைக்கண்ட முரட்டுக்காளை ஓநாயை முட்டித்துரத்தியது.



எப்படியும் இந்த ஆட்டைச் சாப்பிட்டே தீருவேன்...
ஓநாய்.. அந்த ஆட்டையே சுற்றி, சுற்றி வந்தது.
நீ.. எங்கு போனாலும் உன்னை விடமாட்டேன்.
புத்திசாலி ஆடு ஓநாய்க்கு ஒரு நல்ல பாடம் கற்றுக்கொடுக்க எண்ணியது.
ஆடு தந்திரமாக முரட்டுக்காளையிடம் — "நீ.. அந்தப் புதருக்குப் பின்னால் ஒளிந்து கொள். எனக்கு ஆபத்து ஏற்படும்பொழுது உன்னைக் கூப்பிடுகிறேன்" என்றது.
காளைமாடு, ஆட்டை விட்டு விலகிச் செல்லுவதைக்கண்ட ஓநாய்க்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை....
அட பொடிப்பயலே.. இப்போ.. நீ... யாரைக் கூப்பிட்டாலும் வரமாட்டாங்க.. என்னையா.. ஏமாற்றப்பார்க்கிறாய்..?
புத்திசாலியான ஆடு...... ஓநாய், கன்னைக்கடித்ததுபோல் கீழே விழுந்து கதறியது....
ஆட்டின் சப்தத்தைக்கேட்ட காளை முரட்டுத்தனமாக ஓநாயைத்தாக்கியது. முருகனும் அதைக்கற்களால் அடித்துக்கொன்றான்.

யாருக்கு வேலை?

சதீஷ் எட்டாம் வகுப்பு மாணவன். பார்வைக்கு அமைதியாய்க் காணப்பட்டாலும், எந்த ஒரு விஷயத்தையும் ஆழமாய்ச் சிந்தித்துச் செயல்படுபவன். அனைத்துப் பாடங்களிலும் அவன்தான் முதல் ரேங்க். மொத்த எண்ணிக்கையில் சதீஷுக்கும் இரண்டாம் ரேங்க் மாணவனான குமாருக்கும் குறைந்த பட்சம் அறுபது மதிப்பெண்களாவது இடைவெளி இருக்கும்.

சதீஷ் மீது மிகவும் பொறாமை கொண்டவன் குமார். குமாரின் தந்தை அரசியலில் 'முக்கிய' புள்ளி. அவன் ஒருநாள் தன் தந்தையிடம், 'அப்பா என் வகுப்பு' ஆசிரியரான சுந்தரம் சதீஷுக்கு ஆதரவாகவேண்டுமென்றே நடந்து கொள்கிறார், அதனால்தான் நான் இரண்டாம் ரேங்க் பெற வேண்டிய துர்பாக்கிய நிலையில் இருக்கிறேன். அவர் ஒழுங்காக நடந்து கொண்டால்தான் 'முதல் ரேங்க் மாணவன்' என்ற அந்தஸ்தை நான் எளிதில் பெற முடியும். அதற்காக நீங்கள் நேரில் வந்து ஆசிரியர் சுந்தரத்திடம் பேச வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தான்.

தன் மகனுக்கு வேண்டுமென்றே அநீதி இழைக்கப்படுவதாகக் கருதிக் கொதித்தெழுந்த குமாரின் தந்தை பிரபாகர், பள்ளிக்கு வந்து சுந்தரம் வகுப்பெடுத்துக் கொண்டிருந்த வகுப்பறையை நோக்கி நடந்தார்.

அரசியலில் முக்கிய புள்ளியான பிரபாகரைக் கண்டதும், "வணக்கம் சார்!" என்றவாறே வகுப்பறையை விட்டு வெளியே வந்தார் சுந்தரம்.

எஸ்.பாலகிருஷ்ணன்

"வணக்கம் மிஸ்டர் சுந்தரம். உங்கள் போக்கு கொஞ்சங்கூடச் சரியில்லையே...?"

"என்ன சார் சொல்றீங்க....?" அதிர்ந்தார் சுந்தரம்.

"மிஸ்டர் சுந்தரம், நீங்க வேணும்னே அந்தசதீஷுக்கு ஆதரவா நடந்துக்கிறீங்க. நான் அரசியலில் பிரபலமான புள்ளின்னு தெரிஞ்சும், என் பையன் குமாருக்கு அநீதி இழைச்சு அவனை இரண்டாவது ரேங்குக்குத் தள்ளிடறீங்க...!" என்று குற்றம் சாட்டினார் பிரபாகர்.

இதைக் கேட்டதும் கடகடவென வாய்விட்டுச் சிரித்தார் சுந்தரம்.

"நான் கொதிச்சுப் போய்ச் சொல்றேன்... என்ன சார் சொல்றீங்க..?" பிரபாகரின் வார்த்தைகளில் கோபம் கொப்புளித்தது.

"இந்த மாதிரி அர்த்தமில்லாத குற்றச்சாட்டைக் கேட்டுச் சிரிக்காம வேறே என்ன சார் செய்யறது... ஆசிரியருக்கு எல்லா மாணவர்களும் ஒண்ணுதான். மாணவர்களோட புத்திசாலித்தனத்தை அவங்களோட விடைத்தாள்கள் மூலமாகத் தெரிஞ்சுக்கிட்டு மார்க் போடறோமே தவிர, வேறெந்த அடிப்படையிலேயும் நாங்க மார்க் தர்றது கிடையாது. சதீஷ் உங்க பையன் குமாரைவிட அபாரமான புத்திசாலி? இப்பவே என்னாலே அதை நிரூபிக்க முடியும். வாங்க, வகுப்புக்குள்ளே வந்து என்னோட நாற்காலியிலே கொஞ்ச நேரம் உட்காருங்க!" என்றார் சுந்தரம்.

பிரபாகரும் உள்ளே சென்று சுந்தரத்தின் நாற்காலியில் அமர்ந்தார்.

"மாணவர்களே! இப்ப உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன்...!" என்றவாறே வகுப்பறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தார் சுந்தரம்.

சுறுசுறுப்படைந்து கதை கேட்கத் தயாராயினர் மாணவர்கள்.

ஒரு மாபெரும் செருப்புக் கம்பெனி அதிபர் ஒருவரிடம் வேலை கேட்டு வந்தனர் இரண்டு பட்டதாரி இளைஞர்கள்.

"இளைஞர்களே! இங்கிருந்து நூறு மைல் தொலைவில் 'ஜஹூஹா' தீவு என்றோர் தீவு உள்ளது. ஏறத்தாழ

ஒரு லட்சம் மக்கள் குடியிருக்கிறார்கள் அத்தீவில். நீங்கள் இருவரும் தனித் தனியாக அத்தீவிற்குச் சென்று நம் கம்பெனிச் செருப்புகளை எவ்வளவு தூரம் விற்பனை செய்ய இயலுமென்று 'மார்கெட் நிலவரம்' அறிந்து வர வேண்டும். கேஷியரிடம் ஆளுக்கு ஐநூறு ரூபாய் வாங்கிக் கொண்டு செல்லுங்கள். நிலவரத்தை அறிந்து கொண்டு ஐந்து நாட்களில் திரும்பி வாருங்கள்!'' என்றார்.

பணத்தைப் பெற்றுக் கொண்டு பயணம் மேற்கொண்ட இளைஞர்கள் இருவரும் ஐந்தாம் நாள் தங்கள் ஆராய்ச்சியை முடித்துக் கொண்டு திரும்பினர்.

''பயணம் இனிதாய் முடிந்ததா?'' என்றார் அதிபர்.

''யெஸ் சார்!'' என்றனர் இருவரும்.

''உன் கணிப்பென்ன...?'' என்றார் அதிபர் முதல் பட்டதாரியிடம்.

''சார்! அந்தத் தீவில் ஒருவர்கூட செருப்பு அணிவது கிடையாது. எனவே என்னைப் பொறுத்தவரை, மார்க்கெட் நிலவரம் கொஞ்சங்கூட ஏதுவாக இல்லை!'' என்றான்.

''உன் கணிப்பென்ன...?'' என்றார் அதிபர் இப்போது இரண்டாம் பட்டதாரியிடம்.

''சார்! அந்தத் தீவில் ஒருவர்கூட செருப்பு அணிவது கிடையாது. எனவே என்னைப் பொறுத்தவரை, மார்க்கெட் நிலவரம் அமோகமாக உள்ளது!'' என்றான்.

—கதையை இந்த இடத்தில் நிறுத்திய ஆசிரியர் சுந்தரம், குமாரை நோக்கி, ''குமார்! செருப்புக் கம்பெனி அதிபர் யாருக்கு வேலை கொடுத்திருப்பார்...?'' என்றார்.

''முதல் பட்டதாரிக்குத்தான்!'' பட்டென்று சொன்னான் குமார்.

''ஏன்...?''

''அத்தீவில் ஒருவரும் செருப்பு அணிவது கிடையாது. அங்கு போய் நாம் செருப்புக் கடை திறந்தால்,



போண்டியாக வேண்டியது தான் என்ற உண்மை நிலையை எடுத்துரைத்தவன் என்பதனால்!''

ஆசிரியர் சதீஷின் பக்கம் இப்போது திரும்பி, ''சதீஷ்! உன் பதில் என்ன...?'' என்றார்.


''அந்தச் செருப்புக் கம்பெனி அதிபர் நிச்சயமாக இரண்டாவது பட்டதாரிக்குத்தான் வேலை கொடுத்திருப்பார்!'' என்று உறுதியாகச் சொன்னான் சதீஷ்.

''ஏன் அவ்வாறு சொல்கிறாய்?''

"என்னைப் பொறுத்தவரை மார்க்கெட்டை நிர்ணயிப்பது மக்கள். அத்தீவில் ஒருவரும் செருப்பு அணிவதில்லை என்பது, தற்போதைய நிலை; தற்காலிக நிலை. ஆனால், செருப்பு அணிவதால் என்னென்ன நன்மைகள் என்று விளம்பரம் செய்து, நேரிலும் எடுத்துக் கூறினால் அம் மக்கள் நிச்சயம் செருப்பு அணிய ஆசைப்படுவார்கள். அங்கே ஒரு லட்சம் ஜோடி செருப்புக்களை விற்க இயலும் என்று கணக்கிடுகிறான் இரண்டாமவன். எனவேதான் மார்க்கெட் நிலவரம் அமோகமாக உள்ளது என்கிறான். செருப்புக்களை விற்பனை செய்ய அடிப்படைத் தேவை அவனைப் பொறுத்தவரை இரண்டு கால்களுள்ள மக்களேயன்றி, வேறல்ல. எனவே, சாதுர்யமும், தொலை நோக்கும் கொண்ட இரண்டாம் பட்டதாரிக்கே வேலை!''

''வெல் ஸைட்!'' என்று சதீஷைப் பாராட்டிய ஆசிரியர் சுந்தரம் இப்போது பிரபாகரின் பக்கம் திரும்ப..

''என்னை மன்னிச்சிடுங்க மிஸ்டர் சுந்தரம். நான் வர்றேன்...!'' அவசரமாய் வெளியேறினார் பிரபாகர்.



திட்டமிடு... திட்டமிடு...
திட்டப்படி செயல்படு!
திட்டமிட்ட செயல்யாவும்
திருப்திதரும் நம்பிடு!

வாழ்க்கையைத் திட்டமிடு
வளத்தினைப் பெற்றிடுவாய்!
வரவுசெலவைத் திட்டமிடு
வகையுடனே வாழ்ந்திடுவாய்!

உணவினைத் திட்டமிடு
உடல்வலிமை அடைந்திடுவாய்!

உடுப்பினைத் திட்டமிடு
உடலழகைப் பெற்றிடுவாய்!

பாதையைத் திட்டமிடு
பயணத்தில் பலனடைவாய்!
படிப்பினைத் திட்டமிடு
பெரும்வெற்றி பெற்றிடுவாய்

எதனையும் திட்டமிடு
எளிதாக வென்றிடுவாய்!
எழுச்சியுடன் செயல்படு
ஏற்றம்பல கண்டிடுவாய்!



வி.ர.வசந்தன்

முரட்டுக் கதாநாயகன்

திரையில் பிரபலநடிகர் இரஞ்சித் குமார் வேங்கையாகப் பாய்ந்து எதிரிகள் ஏழெட்டுப் பேரைத் தலைகீழாக வீழ்த்திக் கொண்டிருந்தார். இரசிகர்களின் கை தட்டலும், சீழ்க்கை ஒலியும் காதைப் பிய்த்துக்கொண்டு போயின. பூக்களையும் காகிதத் துண்டுகளையும் வீசியெறிந்து தங்கள் மகிழ்ச்சியை அவர்கள் தெரிவித்துக் கொண்டனர். கண்ணன் தன் பங்குக்குக் கைக்குட்டையை வீசி ஆரவாரித்தான்.

இப்போதெல்லாம் கண்ணனின் நடை, உடை, பாவனைகளில் பெரிதும் வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. முரட்டுத்தனமும்,சீழ்ப்படியாமையுமேவீரம் என்ற ஒரு தவறான எண்ணம் அவனிடம் உருவாகியிருந்தது. இதற்கெல்லாம் காரணம் அவன் அடிக்கடி பார்க்கும் திரைப்படங்களும் அதில் இடம் பெறும் சண்டைக்காட்சிகளும்தான்! மக்களை மகிழ்விக்கும் பொருட்டு, பொழுதுபோக்குக்காகத்திரைப்படங்களில் வரும் காட்சிகள் வாழ்க்கையோடு ஒத்துவராதவை என்பதை அவனது இளம் மனத்தால் பகுத்தறிய இயலவில்லை. அதிலும்இரஞ்சித்குமார் நடிக்கும் சண்டைக் காட்சிகளில் அவன் மதிமயங்கிப் போயிருந்தான்.

திரைப்படம் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த கண்ணனின் மனத்தில் அவன் பார்த்த சண்டைக் காட்சிகளே திரும்பத் திரும்பத் தோன்றிக் கொண்டிருந்தன. தலைமுடி காற்றில் கலைந்து பறக்க, ஒரு தோளைச் சரித்தவாறு நடந்துவந்து சுற்றிச் சுற்றிச் சண்டையிட்டு எதிரிகளைத் தோற்கடித்து விரட்டிய கதாநாயகனின் வீரம் அவனைப் புல்லரிக்க வைத்தது.

தொலைவில் அவன் நண்பர்களான மாதவனும், சரவணனும் வருவதைப் பார்த்தான் கண்ணன். அவன் மனத்தில் உற்சாகம் பெரும் வெள்ளமாகக் கரைபுரண்டு ஓடியது. சட்டென்று சினிமாக் கதாநாயகனைப் போல ஒரு தோளைச் சரித்துக்கொண்டு அலட்சிய நடை நடக்க ஆரம்பித்தான் அவன்.

கண்ணன் ஒரு மாதிரியாக நடந்து வருவதைக் கவனித்த மாதவனும், சரவணனும் தங்கள் மனத்துக்குள் சிரித்துக் கொண்டனர். அவன் அருகில்வந்ததும் சரவணன் சற்று உரக்க, ''இரஞ்சித்குமார் வர்றாரு பாரு'' என்று

சொல்ல, மாதவன் கலகலவென்று சிரித்தான்.

இருவரும் தன்னைக் கேலி செய்கிறார்கள் என்று கண்ணனுக்குப் புரிந்துவிட்டது. அவன் நின்று இருவரையும் பார்த்து முறைத்தான்.

மாதவன் கேலியாக, "ஆக்ஷன் ஹீரோ முறைக்கிறார்டா" என்றான். அதைக் கேட்டதும் கண்ணனின் கோபம் எல்லை கடந்து போயிற்று.

சட்டென்று அவன் மனத்தில் இரஞ்சித்குமார் தோன்றி முறுவலித்தார். அவன் தோள்கள் தினவெடுத்துத் துடித்தன. மறுகணம் ஒரே பாய்ச்சலாக இருவர் மீதும் பாய்ந்து கண்டபடி தாக்க ஆரம்பித்தான்.

அவனது திடீர்த் தாக்குதலைச் சற்றும் எதிர்பாராத நண்பர்கள் இருவரும், தப்பினால் போதுமென்று விழுந்தடித்துக் கொண்டு ஓடி மறைந்தனர்.

கோபத்தில் மூச்சு வாங்க, அவர்கள் இருவரும் ஓடுவதைப் பார்த்துக் கொண்டு நின்ற கண்ணன், "அடேய் கண்ணா, என்னடா இது" என்ற அதட்டலுடன் தனக்குப் பின்னால் எழுந்த குரலைக் கேட்டுத் திடுக்கிட்டவனாய்த் திரும்பிப் பார்த்தான்.

அவனது மாமா முகத்தில் கோபம் கொதிக்க நின்று கொண்டிருந்தார்.

"மாமா, அது வந்து, ரெண்டு பேரும் என்னைக் கேலி பண்ணினாங்க" என்று திணறினான் கண்ணன். மாமாவின் கோபத்தைப் பற்றி அவனுக்குத் தெரியும். கம்பைக் கையில் எடுத்தால் பிய்த்து உதறிவிடுவார் அவர்! எனவே, அவனுக்கு அவரிடம் கொஞ்சம் பயம் உண்டு.

"ஓகோ, கேலி பண்ணினா கையை நீட்டி நீ அவங்களை அடிக்கணுமா? நான் கூடத்தாண்டா பார்த்தேன், நீ காலைப் பரப்பிப் பரப்பி நடந்து வந்த இலட்சணத்தை. அதுக்கு கேலி செய்யாமே, பாராட்டவா செய்வாங்க" என்றுறுமினார் மாமா.

கண்ணனுக்கு அவர் மேல் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ஆனாலும் என்ன செய்வது? அவரிடம் கோபத்தைக் காட்டவா முடியும்? "நான் எப்படி நடந்தா அவனுங்களுக்கு என்ன?" என்று வாய்க்குள்ளேயே முணுமுணுத்தான் அவன்.

"சீ! வாயை மூடுடா. சும்மா சினிமாவைப் பார்த்துட்டு, முடியை சிலுப்பிக்கிட்டா ஆச்சா? படத்துலே சந்திரனைப் பிடிச்சுக் கையிலே வச்சுக்கிட்டு ஆடுவான். அது உன்னாலே முடியுமா? சினிமாவைப்பார்த்துட்டு ஊர்வம்பை விலைக்கு வாங்கிறியே! போடா போய் ஆகவேண்டிய காரியத்தைப் பாரு" என்று சத்தமிட்டார் மாமா.

கண்ணன் குனிந்த தலை நிமிராமலேயே கோபத்துடன், "இப்ப ஆகவேண்டிய காரியம் என்ன கெட்டுப் போச்சாம்?" என்றான்.

அவன் கூறியதைக் கேட்டுப் புருவத்தை நெரித்துக் கொண்டார் மாமா. "என்னடா எதிர்த்து வேறே பேசறியா? மூணு நாளா வயலுக்குப் பூச்சி கொல்லி மருந்து வாங்கணும்; டவுனுக்குப் போயிட்டு வான்னு சொல்லிக்கிட்டு இருக்கேனே,போனியா நீ ?நமக்குப் பிழைப்



ஞாபக மறதி

"அந்தப் போலீஸ்காரருக்கு ஞாபக மறதி ரொம்ப அதிகம்!"

"எப்படி?"

"சைக்கிளில் லைட் இல்லைன்னு பகலிலே சார்ஜ் பண்றார்!"

— கடலூர் கன்னியப்பன்

புக்கு வழி அதுதான். அதை விட்டுட்டு நீ, சினிமாவுக்கு அலேஞ்சா எப்படி?'' என்று கடுமையாக அவனைப் பார்த்தார்.

கண்ணனுக்கு அப்போதுதான் பூச்சிக்கொல்லி மருந்து வாங்கும்படி மாமா சொல்லி இருந்தது நினைவுக்கு வந்தது. ஆனாலும், இவர் என்ன சொல்வது என்றவக்கிர எண்ணமே அவனிடம் மேலோங்கி நின்றது.

''நாளைக்கு வாங்கிடறேன் மாமா'' என்று சமாளித்தவனாய் அந்த இடத்தை விட்டு அகன்றான்.

மறுநாள் காலை பூச்சி கொல்லி மருந்து வாங்கும் பொருட்டு வேண்டா வெறுப்பாக மனத்துக்குள் மாமாவைத் திட்டியவாறு அருகிலிருந்த பட்டணத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான் கண்ணன். சற்று தொலைவு சென்றதும் அவனது நண்பனான வாசுதேவன் சைக்கிளில் வேகமாக வருவதைப் பார்த்தான்.

கண்ணனைப் பார்த்ததும் பட்டென்று சைக்கிளை நிறுத்தி, கீழே குதித்தவாசு, ''டேய் கண்ணா, எங்கடா போய்க்கிட்டு இருக்கே? உனக்கு விஷயமே தெரியாதா?'' என்று உற்சாகத்தோடு அவன் தோளைப் பற்றிக் கொண்டான்.

ஒன்றும் புரியாமல் விழித்த கண்ணன், ''என்ன விஷயம்?'' என்று பரபரக்க,

''நம்ம ஊருக்கு வெளியே இருக்கே சவுக்குத் தோப்பு, அங்கே இரஞ்சித்குமார் நடிக்கிற ஒரு படத்தோட படப்பிடிப்பு நடக்குதாம்; சண்டைக் காட்சியாம், அதைத்தான் பார்க்கப் போய்க்கிட்டு இருக்கேன், வரல்லியா நீ'' என்று மகிழ்ச்சிப் பெருக்கில் திக்குமுக்காடியவனாய்ப் பதிலளித்தான் வாசுதேவன்.

ஒரு நிமிடம் கண்ணனுக்கு உடம்பெல்லாம் சிலிர்த்துப் போய்விட்டது! என்ன ஒரு அரிய சந்தர்ப்பம்! அவனது மனத்தைக் கொள்ளை கொண்ட கதாநாயகர் இரஞ்சித்குமார் எதிரியோடு மோதுகிற ஒப்பற்ற காட்சியை நேரிலேயே பார்ப்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பூச்சிகொல்லி மருந்துக்கு இப்போது என்ன அவசரம் வந்து விட்டது!

அவன் வாசுதேவனின் சைக்கிளின் பின்னால் ஏறிக் கொண்டான். மறுநிமி



வந்தவர்: ஏம்பா சர்வர்! இட்லி இவ்வளவு சிறுசா இருக்கே! கொஞ்சம் பெரிசா வைத்தக் கூடாதா?

சர்வர்: இது இட்லி இல்லிங்க! தோசை!

— கடலூர் கன்னியப்பன்


டம் சைக்கிள் சவுக்குத் தோப்பை நோக்கிச் சிட்டாய்ப் பறந்தது.

சவுக்குத் தோப்பில் மக்கள் பெருந்திரளாகக் கூடி இருந்தனர். படப்பிடிப்பிற்கான ஆயத்தங்கள் படு அமர்க்களமாக நடந்து கொண்டிருந்தன. டிராலியின் மேல் கேமரா ஒன்று தயாராக வைக்கப்பட்டிருந்தது. ஐந்தாறு பேர் அடி வாங்குவதற்கு ஆயத்தமாக நிற்க, நடிகர் இரஞ்சித்குமார் சற்று தூரத்தில் ஒயிலாக நின்று கொண்டிருந்தார்.

கண்ணன் ஆவலை கட்டுப்படுத்த முடியாதவனாய் கூட்டத்தின் முன்னால் போய் நின்று கொண்டான்.

படத்தை இயக்குபவர், ''ரெடி, ஸ்டார்ட்'' என்று கத்தவும், கேமரா இயங்கத் தொடங்கியது. இரஞ்சித்குமார் ஆக்ரோஷமாக ஓடிவந்து எதிராளி ஒருவனின் முகத்தில் கும்மென்று ஒரு குத்து விடுவதுபோல் கையை வீசினார்.

அவ்வளவுதான்! இயக்குநர், ''கட், கட்'' என்று கூச்சலிட இயங்கிக் கொண்டிருந்த கேமரா நின்றது. இரஞ்சித்குமாரிடம் வேகமாக வந்த இயக்குநர், ''நீங்க கையை வீசினது சரியில்லே. என்னவோ கல்யாண வீட்டில் பன்னீர் தெளிக்கிற மாதிரி இருக்கு. இன்னும் வேகம் வேணும். இதோ பாருங்க, இப்படிச் செய்யணும்'' என்று தன்



கையை வீசிக் காட்டினார்.

இரஞ்சித்குமார் புரிந்து கொண்டதற்கு அடையாளமாகத் தலையை அசைக்க மீண்டும் படப்பிடிப்புத் தொடங்கியது. இந்த முறை வேகமாக ஓடிவந்த இரஞ்சித்குமார் எந்த இடத்தில்நின்றுஎதிரியைத்தாக்கவேண்டும் என்று அடையாளமிடப்பட்டிருந்ததோ, அந்தக் கோட்டைத் தவறுதலாகத் தாண்டிவிட்டார். இயக்குநர் கையை அசைத்து மீண்டும் படப்பிடிப்பை நிறுத்தினார்.

நாலைந்துமுறை திரும்பத்திரும்ப அந்தக் காட்சியை எடுத்தும் திருப்தியாக அமையவில்லை. ஒவ்வொருமுறையும் இயக்குநர் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டு, அதற்குத் தகுந்தபடி நடிக்க முயன்று கொண்டிருந்தார் இரஞ்சித்குமார்.

எதையோ எதிர்பார்த்து வந்த கண்ணனுக்கு அங்கு நடந்த நிகழ்ச்சிகள் வியப்பைத் தந்தன. ஒரே ஒரு கை வீச்சை எடுப்பதற்கு எவ்வளவு நேரமும் முயற்சியும் தேவைப்படுகிறது என்பதைக் காண அவனுக்குப் பெரும் வியப்பாக இருந்தது. திரைப்படத்தில் முரட்டுத்தனமாக மோதி தூள்கிளப்பும் கதாநாயகர் ஒரே ஒரு தாக்குதலைச் சரியாகச் செய்ய முடியாமல் அங்கு திணறிக் கொண்டிருந்தார். இந்த வீரத்தின் கதை இவ்வளவு தானா என்று நினைத்து மனத்துக்குள் சலிப்படைந்தான் கண்ணன்.

மீண்டும் ஒப்பனை செய்து கொண்டு வந்த இரஞ்சித்குமார் மறுபடியும் முன்போலவே ஓடிவந்தார். தன் தாக்குதல் எதிரியாகநடித்தவர்களின் மேல்பட்டு விடார்திருக்க, ஒரு குறிப்பிட்ட எல்லையில் நின்றுகொண்டு கையை வீசினார். உடனே எதிரியாகநடித்தவர் அடிபட்டு வேதனை தாங்காமல் தவிப்பது போல முகத்தைச் சுருக்கி பாவனை காட்ட ஆரம்பித்தார். இந்ததடவை காட்சி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த ஒரு காட்சியில் நடிப்பதற்குள் இரஞ்சித்குமாருக்குப் போதும்போதுமென்று ஆகிவிட்டது. களைப்புடன் அங்கு போடப்பட்டிருந்த ஒரு நாற்காலியில் வந்து ஓய்வுக்காக அமர்ந்தார்.

உடனே இரசிகர் கூட்டம் அவரைச் சூழ்ந்து கொண்டது. கேள்விகளும் கையெழுத்து வேட்டையும் ஆரம்

பமாயின.

கூட்டத்தில் ஒருவர், ''என்ன ஸார், சினிமாவில் யாருக்கும் அடங்காத் வீரனைத் தூள் கிளப்பறீங்க, இங்க என்னடான்னா இயக்குநர் ஸார் உங்களை வாட்டி எடுத்துட்டாரே!'' என்று கேலியாக ஒரு கேள்வியை வீசினார்.

இரஞ்சித்குமார் அந்த மனிதரைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். பின் அமைதியாக, ''அப்படி அவர் என்னைப் போட்டு வாட்டி எடுக்கிறதாலேதான் இன்னைக்கு இவ்வளவு பிரபலமாக இருக்கேன். அவர் எனக்கு குரு: அவர் சொன்னபடி கேட்க வேண்டியதுதான் இங்கே என் வேலை. நூல் இல்லாமல் ஆடுகிற ஒரு பொம்மைதான் நான்'' என்று அடக்கமாக பதிலளித்தார்.


பளிச்சென்று அந்த உண்மை கண்ணனின் மனத்தில் உறுத்தியது. இவ்வளவு பெரிய நடிகரின் அடக்கம் இப்போது அவனது மனத்தைக் கவர்ந்தது. தன்னுடைய இந்தப் பெரிய வெற்றிக்குக் காரணம் தான் கீழ்படிந்து நடப்பது தான் என்று அவர் சொன்னதை மீண்டும் மீண்டும் மனத்துக்குள் நினைத்துக் கொண்டான். அதில்தான் எவ்வளவு பெரிய உண்மை மறைந்து இருக்கிறது!

வெறும் பொழுது போக்கிற்காகக் காட்டப்படும் திரைப்படக் காட்சிகளைப் பார்த்துவிட்டு, உண்மையோடு பொருந்தாதபோலிஎண்ணங்களையும் கீழ்ப்படியாமைபோன்றமன வக்கிரங்களையும் வளர்த்துக் கொண்ட பேதமையை எண்ணி அவன் தனக்குள் வெட்கப்பட்டான்.

மீண்டும் படப்பிடிப்பு ஆரம்பித்த போது மனத்தெளிவுடன் அந்த இடத்தை விட்டுத் திரும்பி நடந்தான் கண்ணன்.

மாமாவுக்கு பூச்சிகொல்லி மருந்து வாங்கவேண்டும் என்பதுதான் இப்போது அவனுக்கு முக்கியமாகத் தோன்றியது.

ஓவியராகலாம்



கேள்விகள்;

* **பேனா என்ற பெயர் எப்படி வந்தது?**

— எம். ஜே. தாஸ், திருச்சி — 1.

தாள் கண்டுபிடித்த பிறகு, வாத்தின் இறகுகளை மையில் தோய்த்து எழுத ஆரம்பித்தார்கள். 'இறகு' என்பதைலத்தீன் மொழியில் பென்னா (**Penna**) என்பார்கள். அதுவே பிறகு 'பென்' (**Pen**) ஆகி, 'பேனா'வாகிவிட்டது. முதலில் இறகு பேனாவில் எழுதி வந்தவர்கள் பிறகு கட்டையில் உலோகத்தாலான முள்ளைச் செருகி எழுதினார்கள். கட்டைப் பேனா அப்புறம் ஊற்றுப் பேனா (**Fountain Pen**), குண்டு முனைப் பேனா (**Ball Point Pen**) என்று பலவகை முன்னேற்றங்களை அடைந்தது.

* **'சடுகுடு' ஆட்டத்திற்கு விதிகள் உண்டா? இருந்தால், தெரிவிப்பீர்களா?**

— சி. குமாரவேலு, பட்டுக்கோட்டை.

விதிகள் உண்டு. இந்திய ஒலிம்பிக் சங்கம் சடுகுடு ஆட்டத்தை 1944 இல் அங்கீகரித்தது. விதிமுறைகளை வகுத்தது. ஆடும் இடம் சமதளமாக இருக்க வேண்டும்; அந்த இடம் 11 கஜ அகலமும், 14 கஜ நீளமும் உடையதாக இருக்க வேண்டும்; நடுவே ஒரு கோடு கிழித்து, ஒவ்வொரு பக்கத்திலும் 7 பேர் கட்சியாக இருந்து ஆட வேண்டும். ஆடுகிறவர் கையில்லாத பனியனும், அரைக்கால் சட்டையும் அணிந்து கொள்ள வேண்டும். எதிர்க்கட்சியில் ஒருவரின் உடலையோ உடையையோ தொட்டாலும், தொடப்பட்டவர் 'அவுட்'. இப்படிச் சில விதிகள் உள்ளன.

* **எங்கள் ஊரில் ஒரு பெரிய சிமிண்டுக் கம்பெனி இருக்கிறது. அதைப் பார்க்கும் போதெல்லாம் நம் தேசத்தில் முதல் முதலாக எங்கே சிமிண்டுக் கம்பெனி ஆரம்பமானது என்று அறிந்து கொள்ள ஆசையாயிருக்கிறது.**

— கி. ராஜவேலு, ராமசாமி ராஜா நகர்.

சென்னை நகரில்தான், 'சௌத் இந்தியன் இண்டஸ்ட்ரியல்ஸ்' என்ற பெயரில் ஒரு சிமிண்டுத் தொழிற்சாலையை 1904 இல் ஆரம்பித்தார்கள். ஆனால், அது பல காரணங்களால் விரைவிலே மூடப்பட்டு விட்டது. அதன் பிறகு 1914 இல் நம் தேசத் தந்தை பிறந்த போர்பந்தரில் 'இந்தியா சிமிண்டு கம்பெனி லிமிடெட்' என்று ஒரு தொழிற்சாலையைத் தொடங்கினார்கள். அப்போது முதல் உலக யுத்தம் நடந்ததால், நிறைய சிமிண்ட் தேவையாயிருந்தது. அதைத் தொடர்ந்து பல சிமிண்டுத் தொழிற்சாலைகள் தோன்றின.

* **சர்க்கரை வள்ளிக்கிழங்கில் அரிசியை விடச் சத்து அதிகம் என்கிறார்களே, உண்மையா?**

— பி. குணசேகர், மணியாச்சி.

உண்மைதான். அரிசியில் இருப்பதை விட வைட்டமின் 'ஏ,' 'டி' இரண்டும் சர்க்கரை வள்ளிக்கிழங்கில் அதிகமாக உள்ளன. அத்துடன், இரும்புச் சத்தும் அதில் உண்டு.

* **விண்வெளி என்றால் என்ன? சற்று புரியும்படி சொல்லுங்களேன்.**

— எஸ். எஸ். கலா, சென்னை — 6.

பூமியிலிருந்து சுமார் 300 முதல் 320 கிலோ மீட்டர் உயரம் வரையில் வாயு மண்டலம் சூழ்ந்திருக்கிறது. அதற்கு அப்பால் இருப்பது விண்வெளி. அதற்கு எல்லையே இல்லை. விரிந்து கிடக்கிறது. அங்கு வாயு இல்லை. அதனால், பிராண வாயுவும் கிடையாது. அங்கு கோடிக்கணக்கான நட்சத்திரக் கூட்டங்கள், எரி கற்கள், வால் நட்சத்திரங்கள் எனப் பல இருக்கின்றன.

* **எங்களைப் போன்ற சிறுவர்களுக்கு விஞ்ஞான நூல்களை எழுதியவர்கள் யார், யார்? கூறுவீர்களா?**

— வே. கார்த்திகேயன், விழுப்புரம்.



அவர்களில் மிக முக்கியமானவர் சமீபத்தில் காலமான பெ. நா. அப்புஸ்வாமி அவர்களே. வைத்தண்ணா, நா.கி. நாகராஜன், என். கே. வேலன், கு. ராஜாராம், கல்வி கோபாலகிருஷ்ணன், அ. நடராஜன், ருத்ர துளசிதாஸ், ப. குணசேகர், பிறையணிவோன், நா. வானமாமலை — இப்படிப் பலர்.

சொல்லுகிறோம்

* ராஜாஜி எழுதிய 'சக்கரவர்த்தித் திருமகன்', 'வியாசர் விருந்து' ஆகிய நூல்கள் இப்போது கிடைப்பதில்லையே, ஏன்?

— ஆர். சாவித்திரி, கும்பகோணம்.



அந்தப் புத்தகங்களின் பெயர்கள் இப்போது மாறிவிட்டன. ராஜாஜி எழுதிய 'இராமாயணம்,' 'மகாபாரதம்' என்று கேட்டால் கிடைக்கும். வெளியிட்டோர்: வானதி பதிப்பகம், சென்னை — 17.

* மலேரியாக் காய்ச்சல், டைபாயிட் காய்ச்சல், டிங்கு காய்ச்சல் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். 'கிளிக் காய்ச்சல்' என்று ஒரு காய்ச்சல் இருக்கிறதாமே, நிஜமா?

— தே. முருகன், திருவள்ளூர்.



நிஜம்தான். கிளிக் காய்ச்சல்' என்பது கிளிக்கு வரும் ஒரு வித நோய். அது கிளியின் மூலம் மற்றப் பறவைகளுக்கும் பரவுவதுண்டு. மனிதர்களைக் கூட அந்த நோய் பற்றிக் கொள்ளும் என்கிறார்கள்.


* ஒத்துழையாமை இயக்கம்' என்று சில புத்தகங்களில் வருகிறது. ஆனால், விளக்கமாக இல்லை. தயவு செய்து புரியும்படி சொல்லுங்கள்.

— க. குஞ்சிதபாதம், கருங்குழி.

ஆசிரியருடன் மாணவர் ஒத்துழைக்காமல் இருப்பதோ, பெற்றோருடன் பிள்ளைகள் ஒத்துழைக்காமல் இருப்பதோ அல்ல, ஆங்கிலேயர் நம் தேசத்தை ஆண்ட போது நம் மக்கள் பல துன்பங்கள், துயரங்களை அடைந்தார்கள். 1919 இல் மேலும் பல அடக்குமுறைச் சட்டங்களை ஆங்கிலேயர் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டங்களை எதிர்த்து மகாத்மா 1920 இல் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். அந்த இயக்கத்தில் இலட்சக்கணக்கானவர்கள் சேர்ந்தனர். அவர்களில் சிலர் வன்முறையில் ஈடுபட்டதால், மகாத்மா அந்த இயக்கத்தை உடனே நிறுத்தி, அதற்காக மிகவும் வருந்தி 5 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்.

* ஆமைக்குப் பல் உண்டா?

— பி. விஜயன், சேந்தமங்கலம்.




அது பல்லைக் காட்டிப் பார்த்ததே இல்லை. தாடை எலும்புக்கு மேல் பறவைகளுக்கு இருப்பது போல் உறுதியான அலகு உண்டு. அதன் உதவியால் உணவை அரைத்து உண்ணுகிறது.

* நான் ஒரு கவிதை எழுதி வைத்திருக்கிறேன். அனுப்பினால், பிருந்தாவனக் கவியரங்கத்தில் வெளியிடுவீர்களா? என்ன சன்மானம் தருவீர்கள்?

— பெ. குருராஜன், திருநெல்வேலி.


தம்பி, கத்திரிக்காய், வாழைக்காய் வாங்குவதென்றால்கூட, நேரில் பார்த்து, பிடித்திருந்தால்தானே வாங்குவார்கள். நீ இவ்வளவு தூரத்தில் இருந்து கொண்டு, 'கவிதையை அனுப்பினால் வெளியிடுவீர்களா? என்ன சன்மானம் தருவீர்கள்?' என்று கேட்டால், என்ன பதில் சொல்வது? கவிதையை அனுப்பி வைத்தால் ஆசிரியர் படித்துப் பார்த்து, நன்றாயிருந்தால் வெளியிடுவார். சன்மானமும் கிடைக்கும். கோகுலத்தில் வெளியாகும் கதை, கவிதை, கட்டுரை, துணுக்கு, நகைச்சுவை எல்லாவற்றுக்குமே சன்மானம் உண்டு. ஆயினும், இந்த வயதிலே பணத்தை மட்டுமே குறியாகக் கொண்டு எழுதுவது நல்லதல்லவே!


பரீட்சைக்கு, படிக்கணும்
காலையில் ஐந்துமணிக்கு
எழுப்பிறியாடி அம்மு!
நந்து! நந்து! நந்து!
பரீட்சைக்குப்படிக்க
எழுந்திரு
காலை ஐந்து
மணிக்கு
எழுப்பச்சொன்னே
இப்பவே
எழுப்பறியே!
இப்பவே எழுப்ப ஆரம்பிச்சாத்தான்
காலை ஐந்து மணிக்கு
நீ எந்திருக்க சரியா இருக்கும்!
மாலா—

ராமன் பிறந்த வம்சத்துக்கு ரகு வம்சம் என்று பெயர். ராமனுடைய மூதாதையரில் ரகு என்ற மன்னன் மிகவும் புகழ் பெற்று விளங்கினான். ரகுவம்சம் பற்றி காளிதாசன் காவியம் படைத்திருக்கிறார்...






திலீபனும் சுதக்ஷிணையும் வசிஷ்டரையும் அவரது பத்தினி அருந்ததியையும் வலம் வந்து....
குருவே, வணங்குகிறேன்....
நாடு நகரமெல்லாம் நலம் தானே?
தாங்கள் செய்யும் யாகங்களால் நாடு வளமாய் இருக்கிறது. ஆனால்...
திலீபா, உன் மனக்குறை எனக்குத் தெரியும்!
மன்னரின் வம்சம் தழைக்க வேண்டும் என்று மக்களும் கவலைப் படுகிறார்கள்.
சுவாமி! எங்களுக்குக் குழந்தை வரம் அருளுங்கள்.
நடந்த கதையைக் கூறு கிறேன், கேள்!
சுதக்ஷிணைக்கு வசிஷ்டர் சொன்னார்:
முன்னொரு சமயம் உன் கணவன் இந்திரனைச் சந்தித்துவிட்டுத் திரும்பினான்...
போய் வருகிறேன், நண்பரே!
சென்று வா, திலீபா!


கற்பக மரத்தினடியில் காமதேனு, தன் குழந்தை நந்தினியுடன் நின்றது. திலீபன் அதனைக் கவனிக்க வில்லை.
பூஜிக்க வேண்டிய என்னைத் திரும்பிப் பார்க்காமல் போகிறாயே! உனக்குச் சந்ததி இல்லாமல் போகும்!
வசிஷ்டர் நடந்த கதையைக் கூறி...
அந்தச் சாபம் திலீபன் காதில் விழவில்லை.
சுவாமி! நீங்கள் தான் சாபம் நீங்க வழி கூற வேண்டும்.
காமதேனுவின் மகளான நந்தினி, நமது ஆசிரமத்தில் வசித்து வருகிறது. அதற்குத் தொண்டு செய்யுங்கள்!
மன்னன் திலீபனும் அரசி சுதக்ஷிணையும் குடிசையில் புல்லில் படுத்தார்கள். ஆசிரம வாசிகள் போல் எளிய வாழ்க்கை நடத்தினார்கள்...



தினமும் காலையில் நந்தினி பாலைப்பொழிந்துவிட்டுக் காட்டுக்குப் போகும்...
சுதக்ஷிணை! நான் நந்தினியுடன் காவலுக்குப் போய் வருகிறேன்!
திலீபன் பச்சைப் பசும்புல் வெட்டி நந்தினிக்குக் கொடுத்தான்.
மாலையில் ஆற்றில் குளிப்பாட்டினான்...
சுதக்ஷிணை அதற்கு மாலை சூட்டி, தூபம் காட்ட, இருவரும் வழிபட்டனர்....
ஒரு நாள் காட்டில் ஒரு சிங்கம் நந்தினி மீது பாய்ந்தது....
அம்மா!



சிங்கம் நந்தினியை அடித்து வீழ்த்தியது....
நந்தினியைக் காக்க நினைத்தான் திலீபன். ஆனால்...
ஐயோ! என் கைகால்களைத் திடீரென்று அசைக்க முடிய வில்லையே!
சிங்கம் பேசியது!
உன் அம்பு இங்கு பயன்படாது! நான் சிவ கணங்களுள் ஒருவன்!
திலீபன் துணிவு பெற்று...
நந்தினி என் குருவுடைய பசு. அதை விட்டு விடு. அதற்குப் பதில் என்னைத் தின்று பசியாறு!
சிங்கம் சிரித்தது...
என்னைத் தேடி வந்த உணவு இது. இதற்காக நீ ஏன் உயிர்த்தியாகம் செய்ய வேண்டும்?...



... இதற்குப்பதில் ஆயிரம் பசுக்களை நீ குருவுக்குத் தானம் பண்ணலாமே?
அரசனின் கடமை, நம்பியவர்களைக் கைவிடாதிருத்தல் தான்.
அப்படியானால் சரி, பசுவை விட்டு விட்டு உன்னைச் சாப்பிடுகிறேன்!
திலீபன் அசையும் சக்தி பெற்றான். அம்பு, வில் முதலியவற்றைப் போட்டு விட்டு...
தியானத்தில் ஆழ்ந்து போகிறேன்...
சற்று நேரம் சென்று...
அரசனே! எழுந்திரு!
திலீபன் கண் விழித்தான்....
நந்தினி! என்ன இது? சிங்கம் எங்கே? ஏன் என்னை அது அடித்துச் சாப்பிடவில்லை?


அரசே! உன்னைச் சோதிக்க நாங்கள் நடத்திய நாடகம் இது. .. உன் கருணை கண்டு மகிழ்கிறேன்......
... என்ன வரம் வேண்டுமோ, கேள்!
உலகம் புகழும் மகனைப் பெற விரும்புகிறேன்.
ஒரு தொன்னையில் என் பாலைக் கறந்து பருகு!
குருவின் அனுமதி பெறாமல் நான் உன் பாலைப் பருகக் கூடாது. முதலில் ஆசிரமம் செல்வோம்.
திலீபன் வசிஷ்டரை வணங்கி நடந்ததைக் கூற...
நந்தினியின் வரத்தால் உன் குலம் தழைக்கும்!


நந்தினியின் பாலைப்
பருகினான் திலீபன்.
சுதக்ஷிணையும் திலீபனும்
அயோத்திக்குத் திரும்பினார்கள்.
காலாகாலத்தில் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது...
அரசே! நந்தினி கொடுத்த வரம்!
அப்போது வசிஷ்டர் வர...
வரவேணும்! குழந்தை மகா பாக்கியசாலிதான்! நாமகரணம் செய்யத் தாங்களே வந்து விட்டீர்களே!
சூரிய வம்சத்தில் பிறந்த உன் மகனுக்கு 'ரகு' என்று பெயர் சூட்டுகிறேன்!


ரகு வளர்ந்து இளம் காளையாக விளங்கினான்...
ரகு! ஆட்சிப் பொறுப்பை இனி உன்னிடம் ஒப்படைக்கிறேன்...
இதற்கு என்ன அவசரம் அப்பா?
மகனே! எனக்கு வயதாகி வருகிறது. என் காலம் முடியுமுன் நூறு அசுவமேத யாகங்கள் செய்து தேவருலகில் நிரந்தர இடம்பிடிக்க விரும்புகிறேன்...
ஒவ்வொரு அசுவமேத யாகத்தின் முடிவிலும் குதிரை தன்னிச்சையாகச் செல்லும்; பின்தொடர்ந்து போவான் ரகு.
குதிரைக்கு யாராலும் எந்தத் தீங்கும் நேராமல் காப்பேன்.
எல்லா தேச மன்னர்களும் திலீபனின் அசுவமேத குதிரையை வரவேற்று, அதன் மூலம் அவனுடைய மேலாதிக்கத்தை ஏற்றனர்...
வரவேணும்! இளவரசர் ரகு வாழ்க!
...எதிர்த்த சிலர் ரகுவின் பராக்கிரமத்தால் முறியடிக்கப் பட்டனர்...


தொண்ணூற்று ஒன்பது யாகங்கள் நடந்து முடிந்தன.
இது நூறாவது யாகக்குதிரை. இந்த திக்விஜயத்துடன் என் தந்தையின் மனோரதம் நிறைவேறிவிடும்...
ஒரு காட்டு வழியே செல்கையில் குதிரை திடீரென்று மறைந்துவிட்டது...
இதென்ன மாயம்! தந்தைக்கு என்ன பதில் சொல்வேன்?
அப்போது நந்தினி தோன்றி...
ரகு! என் பாலினால் கண்களைத் துடைத்தால், கொள் குதிரையைக் காண்பாய்!
நந்தினியின் அருளால் அகக் கண்களைப் பெற்ற ரகு, யாகக் குதிரையை இந்திரன் இழுத்துச் செல்வதைக் கண்டான்.
இந்திரா நில்! நீயே இப்படி திருட்டுத்தனம் செய்தால் தர்மம் தழைக்குமா?
நூறு அசுவமேத யாகம் செய்து எனது இந்திர பதவியை அடைய உன் தந்தை ஆசைப்படுகிறார். அதை நான் தடுக்காமல் இருப்பேனா?


அப்படியானால் என்னை வென்று குதிரையை அழைத்துப் போக வேண்டியதுதானே, வஞ்சனை எதற்கு?
இந்திரன் கோபமுற்று ரகுவைத் தாக்க, இருவரும் நீண்ட நேரம் போரிட்டனர்.
கடைசியில் வஜ்ராயுதத்தை வீசினான் இந்திரன். அது நெஞ்சில் தாக்கியும் நிலை குலையாது நின்றான் ரகு!
இதென்ன ஆச்சரியம்!
இந்திரா! இதைவிடப் பெரிய ஆயுதம் ஏதாவது வைத்திருக்கிறாயா?
இந்திரன் மனம் இளகியது...
ரகு! வஜ்ராயுதத்தையும் தாங்கி நின்ற உன்னுடன் நட்பு கொள்ளவே விரும்புகிறேன். இந்தக் குதிரையைத் தவிர வேறு எதை வேண்டுமானாலும் கேள், தருகிறேன்!
ரகு சற்று யோசித்து விட்டு...
குதிரையை, நீயே வைத்துக் கொள்! ஆனால் யாகத்தின் முழுப் பயனையும் என் தந்தைக்குக் கொடு!



இந்திரன் மனம் மகிழ்ந்தான்...
ரகு! உன் வீரத்தைப் போலவே உன் அறிவும் பிரகாசிக்கிறது. உன் வம்சத்தில் உலகம் போற்றும் உத்தமர்கள் தோன்றுவார்கள்!
பெற்றோரிடம் திரும்பினான் ரகு.
மகனே! உன் வீரத்தாலும் திறமையாலும் நூறு யாகங்களின் பயனை அடைந்தேன்.
வாழ்நாள் முடிய இனி நாங்கள் காட்டுக்குச் சென்று தவம் புரிகிறோம்...
பெற்றோர் வனவாசம் கிளம்ப, விடையளித்தான் ரகு...
போய் வாருங்கள்...
தர்மம் தவறாமல் அரசாள்வாயாக...
ரகுவின் ஆட்சியில் மகிழ்ந்து கலைமகளும் திருமகளும் பூரண அருள் புரிந்தார்கள்.
மீண்டும் திக் விஜயம் செய்தான் ரகு... இமயம் முதல் குமரி வரை மன்னர்கள் அடிபணிந்தார்கள்.
இந்தக் காணிக்கையை ஏற்க வேணும்...


திக்விஜயம் முடிந்து நாடு திரும்பிய சக்கரவர்த்தி ரகு, பெரிய யாகத்தை அறிவித்தார்...
யாகத்தின் போது யார் எது கேட்டாலும் மகாராஜா தருவார்...
ஐம்பத்தாறு தேச மன்னர்களுக்கு அழைப்பிதழ்கள் சென்றன.
யாகம் பிரமாதமாக நடந்தது...
யாகம் முடிந்த பின் மன்னர்கள்...
எவ்வளவு பெரிய யாகம்! அடேயப்பா!
என்ன உபசாரம்!
ரகு, திக்விஜயத்தில் திரட்டிய செல்வம் எல்லாம் தானம் செய்து விட்டாரே!
எல்லோரும் விடை பெற்றுச் சென்ற பின்...
வர்தந்து முனிவரின் சீடன் நான்... பெயர் கௌடன்...
வரவேணும்...


ரகு, மண்பாண்டத்தில் நீர் கொண்டு வந்து அந்தணரின் பாதங்களை அலம்பினார்...
கௌடரே! என்னைக் காண நீங்கள் வந்தது என் பாக்கியம். தங்களுக்கு வேண்டியது என்ன ....?
அறுவடையான வயல்போல் எல்லாவற்றையும் இழந்து நிற்கும் இம்மன்னரிடம் என்ன கேட்பது?
நான் தரவேண்டிய குருதட்சிணையை யாசித்துப் பெற நினைத்தேன்... ஆனால் உங்களிடம் இப்போது கேட்டு என்ன பயன்? வேறு யாரிடமாவது போகிறேன்.. ....
ஓர் அறிஞர் என்னிடம் வந்து வெறும் கையுடன் திரும்பிச் செல்வதை நான் அனுமதிக்க மாட்டேன். நீங்கள் குருதட்சிணையாக என்ன கொடுக்க வேண்டும்? சொல்லுங்கள்.
கௌடர் தமது கல்வி முடிந்ததும் நடந்ததை நினைவு கூர்ந்தார்...
குருவே! நான் தங்களுக்குக் காணிக்கை செலுத்த விரும்புகிறேன். ...
நீ எனக்குச் செய்த பணிவிடைகளே போதும்....



கௌடர் கர்வத்துடன்...
அதெப்படி? பதினாலு கலைகள் கற்றுத் தந்தீர்கள். அவற்றுக்கு என்ன காணிக்கை?
வர்தந்து முனிவர் கோபமுற்று...
பதினாலு கலை களுக்குப் பதினாலு கோடி பொற் காசுகள் செலுத்து!
உத்தரவு...
நடந்ததை அறிந்த ரகு...
கௌடரே! என் செல்வமெல்லாம் தானத்தில் கரைந் தாலும் தெய்வ பலம் பாக்கியிருக் கிறது... மூன்று நாள் அவகாசம் கொடுங்கள்...
ரகு தனிமையில் சிந்தித்தார்....
மீண்டும் மன்னர் களிடம் காணிக்கை கேட்பது சரியில்லை... குபேரனின் அளகாபுரிக்குச் சென்று பொருள் பெற்று வருகிறேன்!
தம்மிடமிருந்த தெய்வீக ரதத்தில் ஏறி அமர்ந்தார் ரகு...
ஏனோ தெரியவில்லை; களைப்பாக இருக்கிறது; தூக்கம் வருகிறது....



தேர்த்தட்டிலேயே தூங்கி விட்டார் ரகு... கனவில் குபேரன் தோன்றி...
ரகு! இந்திரனை வென்ற நீ என்னைத் தேடி வருவதா? நான் வருகிறேன் உன்னை நாடி!...
திடுக்கிட்டுக் கண் விழித்தார் ரகு....
அரசே! அற்புதம்!
நமது பொக்கிஷ நிலவறை பொற்காசுகளால் நிரம்பி வழிகிறது!
ரகு கௌடரை அழைத்து...
தபஸ்வியே! தங்கள் குருகாணிக்கையைக் குபேரனே அளித்திருக்கிறார்! தேவையானதை எடுத்துக் கொள்ளுங்கள்!
வள்ளலே! உன் கொடையுள்ளத்துக்கு ஈடு இணை இல்லை!
உங்கள் குருவும் நீங்களும் உண்மையான தபஸ்விகள்; அதனால் கிடைத்த செல்வம் இது....
அடக்கமும், வீரமும், தெய்வ பக்தியும் நிரம்பிய ரகு, அறிவாற்றலுடன் பல்லாண்டு அரசாண்டார்.
ரகுவம்சம் வாழ்க!
வாழ்க! வாழ்க!

புலியைத் தாக்கிய குரங்குகள்

கொ.மா.கோதண்டம்

அது ஐயனூர் மலையின் அடிவாரம். அடர்ந்த வனத்தை ஒட்டிய அழகான புல்திரடு. எங்கும் பச்சைப் பசேல் என்று கண்ணுக்கு விருந்தாகக் காட்சியளிக்கிறது. வனத்து மரங்களில் பசுந் தளிர் இலைகளுக்கு ஊடே பலவண்ண மலர்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளும்படி மலர்ந்து மணத்தைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

சூரிய ஒளியில் இலைகளும் மலர்களும் பளபளவெனப் பிரகாசித்தன. புல் அடர்ந்த பகுதி பச்சைப் போர்வை போர்த்தியிருப்பது போல் தெரிந்தாலும் காற்றுக்கு அசையும் போது கடலில் அலைகள் வருவது போல் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

அந்த வனத்தில் மான்கள் கூட்டங் கூட்டமாக வசிக்கின்றன. மலையின் அடுத்தசரிவிலிருந்துஒருபுலி அடிக்கடி வந்து மான் கூட்டத்தில் பாய்ந்து மான்களை அடித்துத் தூக்கிச் சென்று விடும்.

அதற்காக மான்கள் எந்த நேரமும் பயந்தபடி மருண்ட பார்வையோடு இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டேதான் புல்லைப்புசிக்கும். ஒரேயடியாகப் புல்லை அதிகமாகக் கடித்து விழுங்கிவிட்டு,பின் கூட்டமாக மறைவிடத்திற்குப்போய் அமைதியாக அசைபோட்டு மென்று சாப்பிடும். குட்டிகளைப் பாதுகாப்புக்காக நடுவே விட்டுத்தான் கூட்டமாக இருக்கும்.

அதோ அதுதான் தலைமைமான். அதன் கொம்புகளைப் பாருங்கள். சின்னமரத்தின் கிளைகளைப் போல் எவ்வளவு அழகாக இருக்கின்றன.

அதன் ஒடுங்கிய முகத்தில் கோலிக் குண்டுக் கண்கள். பாக்குநிற உடலில் கறுப்புப் புள்ளிகள். கொழுகொழு வென்ற சதைப்பிடிப்பான உடல், மொட்டை வால். பக்கத்தில் அதன் குட்டி மேய்ந்து கொண்டிருக்கிறது. துறுதுறுவென்ற பார்வை. பூஞ்சையான உடல். அதில்மெல்லிய வெள்ளை ரோமங்கள், தாயைப் போல புள்ளிகள்.

மான் குனிந்து புல்லைக் கடிப்பதும் டக்கென்று தலையைத் தூக்கிச் சுற்று முற்றும் பார்ப்பதுமாக இருக்கிறது.

திடீரென்று ஏதோ உணர்வால் அடுத்த புல்மேட்டில் ஒரு பகுதியைக் கூர்ந்து பார்க்கிறது. அங்கே ஏதோ ஓர் அசைவு தெரிகிறது. புல்லைப் போன்ற கோடுகளை உடைய ஏதோ ஒரு உருவம் இருப்பது போலத் தெரிகிறது. மான் பார்ப்பது தெரிந்ததும் அந்த உருவம் பதுங்கிக் கொள்கிறது. பதுங்கும்போது புல் அசைவது தெளிவாகத் தெரிகிறது.

மரத்தின் மேலிருந்த குரங்கு ஒன்று "கீய்ய்யி" என்று கத்துகிறது.


உடனே அபாயம் வருகிறது என உணர்ந்ததும்மானின்மொட்டைவால் டக்கென்று மேலே தூக்கிக் கொள்கிறது.

முன்னங்கால்கள் தரையை டக் டக்என்று இரண்டுதடவைதட்டுகிறது. உடனே பின்னால் இருந்த மான்கூட்டம் தலைகளைத் தூக்கி ஒன்று போல நிற்கின்றன.

"உருக்கூ....ஊ" என்று மான் குரல் கொடுத்ததும் தளபதியிடமிருந்து கட்டளை பிறந்தவுடன் செயல்படும் படையைப் போல, டக்கென்று திரும்பி ஒரே பாய்ச்சலில்ஒன்றுபோலஓடிவிட்டன அந்த மான்கள்.

புலி ஏமாற்றத்தோடு திரும்பியது. அதற்கு அந்தக் குரங்கின் மேல் ஒரே கோபம். 'இந்த அசட்டுக் குரங்கு எப்போதும் நமக்கு இடையூறாகக் குரல் கொடுத்து மான்களை விரட்டி விடுகிறதே! எப்படியும் இதனைத் தீர்த்துக்கட்ட வேண்டும்' என நினைத்துக் கொள்கிறது.

அந்தப்புலிகம்பீரமானபொன்னிற உடல். நேரான வெள்ளை மீசை. கொக்கிபோன்றகூரியபற்கள். முரட்டு நாக்கு. உடலில் நிறம் வெளிறிய பட்டைகளாகக் கோடுகள். பாதங்களில் கத்தி போன்ற நகங்கள்.



புலி எப்போதும் தனித்தே இரை தேடும். மான்கள் தப்பிச் சென்ற வருத்தத்தில் சிறிது நேரம் யோசித்தது. அதற்கு ஒரு யோசனை தோன்றியது. வனத்தைச் சுற்றிச் சென்று எப்படியும் ஒரு மானைப் பிடித்து வந்துவிட வேண்டும். புதிய பாதையில் செல்ல வேண்டும். வரும்போது பாதை மறந்து விட்டால்....?

பாதையில் உள்ள மரங்களில் இரண்டு இடத்தில் காலைத் தூக்கி சிறுநீர் பெய்தது. மரத்தில் அடித்து புலியின் உடம்பில் அது சிதறியது. வாடையைக் கண்டு பாதை கண்டுபிடிக்க அது அப்படிச் செய்வதுண்டு. புலி எப்போதும் சுத்தமாக இருக்கும். தண்ணீரில் அசுத்தம்பட்ட இடத்தை கழுவிக் கொள்ளும். அங்கு தண்ணீர் இல்லையாதலால் பின்பக்க உடலை, புல்லில் தேய்த்துத் துடைத்துக் கொண்டது.

இதற்குள் அதற்குக் குரங்கின் நினைவு வந்தது. 'இந்தக் குரங்கு எப்பொழுதுமே நமக்கு எதிராக இருந்து கொண்டு நமது வருகையை மான் கூட்டத்திற்கு குரல் கொடுத்து அதனைத் தப்பிக்க வழி செய்கிறது. இதனை முதலில் ஒழித்து விட வேண்டும்' என முடிவு செய்தது.

குரங்கைத் தேடிப் புறப்பட்டது.

ஒரு மரத்தின் உச்சியில் நூற்றுக்கணக்கான குரங்குகள் பழத்தைப் பறித்துத் தின்று கொண்டிருந்தன. மான்களுக்கு எச்சரிக்கை கொடுக்கும் குரங்கு உச்சியிலிருந்து இரண்டு கைகளிலும் பழங்களைப் பறித்துக் கொண்டு வந்து தணிந்த அடிக்கிளையில் உட்கார்ந்து எதிர்த் திசையைப் பார்த்தவாறு தின்று கொண்டிருந்தது.

புலி அதனைப் பார்த்து விட்டது. இதுதான் சமயம் என நினைத்து ஒரே தாவில் அந்தத் தாழ்ந்த கிளைக்குத் தாவி, குரங்கைப் பிடித்துக் கீழே குதித்து முன் காலால் ஆக்ரோஷத்துடன் ஓர் அறைவிட்டது. பிறகு, அதைத் தூக்கித் தூர எறிந்தது.

மரத்திலிருந்த குரங்குகள் 'கீய் ஊய்' என்று அலறிக் கொண்டே கிளைக்குக் கிளை தாவி ஓட்டமெடுத்தன. நீண்ட தூரம் வந்துவிட்ட குரங்குகள் ஓர்

இடத்தில் கூடின. ஆலோசனை நடத்தின.

"இந்தப் புலி அடிக்கடி மான்களைக் கொல்வது போக, இன்று நமது இனத்துக் குரங்கையும் தாக்கிப் பலத்த காயம் உண்டாக்கி விட்டது. இனி, அடிக்கடி இது இப்படிதான் செய்யும். ஆகவே, நாம் இனி இங்கு வாழ முடியாது. வேறு காட்டுக்குப் போவோம்" என்று சொன்னது ஒரு கிழக்குரங்கு.

ஒரு வாலிபக் குரங்கு எழுந்தது. "இல்லை. இந்தப் புலிக்கு நாம் பாடம் புகட்ட வேண்டுமே அன்றி, கோழைகள் போல நாம் வாழும் காட்டை விட்டுப் போகக் கூடாது" என்றது.

"பலம் வாய்ந்த புலியை நாம் என்ன செய்துவிட முடியும்" என்றது அடுத்த குரங்கு.

"ஒரே அடியில் நம் அனைவரையும் அடித்துக் கொல்லும் அளவிற்கு அதற்கு வலிமை இருக்கிறது. ஆகவே, நாம் சென்று விடுவதுதான் நல்லது" என்றது குரங்கு.

அந்த வாலிபக் குரங்கு மறுபடியும் எழுந்தது. "தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். ஒரு சின்னஞ்சிறிய எறும்பு யானையின் காதுக்குள் சென்று யானையை வீழ்த்தி விடுமாம்! ஆயிரக்கணக்கான எறும்புகள் புலியின் உடம்பில் ஏறிக் கடித்தால் புலி துடிதுடித்துச் செத்துவிடும். அதுபோல நாம் கூட்டமாகச் சென்று புலியைச் சுற்றி, கிளைகளில் இருந்து கொண்டு மாறிமாறிப் பாய்ந்து தப்பித்து அதனைக் கடித்து விடுவோமானால் புலிக்கு முடிவு கட்டி விடலாம்" என்றது.

"நமக்கு அவ்வளவு தைரியம் உண்டா?" என்றது இன்னொன்று.

"ஒவ்வொன்றாகப் போனால் நமக்குப் பலமில்லை. ஆனால், கூட்டமாகப் போனால் நமக்கு அசுர பலம் சேர்ந்துவிடும்" என்றது வாலிபக் குரங்கு.


"நமது மூதாதையான அனுமான் பெரிய பெரிய அரக்கர்களையே கொன்றாராம். கேவலம் நாம் நூறு பேர் சேர்ந்து ஒரு புலியைக்கூடவா கொல்ல முடியாது. நமது இடத்தில் நமக்குத் தான் வலிமை. ஆகவே, என்னோடு வாருங்கள். இப்போதே போவோம். புலியைக் கொன்று சுதந்திரமாக வாழ்வோம்" என்று அது கூறியதும்,

புதிய உத்வேகத்துடன் எல்லாக் குரங்குகளும் புறப்பட்டன. புலி படுத்திருந்த மரத்தின் மேலே வந்ததும் அவை தயாராக நின்றன.

வாலிபக் குரங்கு "வீரத்தோடு பாய்ந்து கொல்லுங்கள்" என்றதும் எல்லாம் ஒன்றுபோலப் புலியின்மீது பாய்ந்தன. இதனைச் சற்றும் எதிர்பாராமல் தூங்கிக் கொண்டிருந்த புலி திடுக்கிட்டு எழுந்தது. சுற்றிச் சுற்றிக் குரங்குகளை அடிக்க முயன்றது. குரங்குகள் அதனிடம் பிடிபடாமல் தாவித் தாவிப் புலியின்மேல் விழுந்து கடித்தன. புலியால் ஒன்றும் செய்ய இயலவில்லை. பலம் கொண்ட மட்டும் உறுமியது. பயனில்லை. குரங்குகள் கடித்த இடத்தில் இரத்தம் பீறிட்டது. குரங்குகள் மாறி மாறிக் கடித்ததும் புலி விழுந்து உயிர்விட்டது.

புலி இறந்ததும் குரங்குகள் எல்லாம் வெற்றி விழாவாகவும் சுதந்திர நாளாகவும் அதனைக் கொண்டாட வருமாறு மான்களை அழைப்பதற்காகத் தேடிச் சென்றன.





நம்பினோர் கெடுவதில்லை

பத்மா ஜே.பி.

திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவிலின் முன்பு, தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த அந்தச் சுற்றுலாப் பேருந்து நின்றபோது நேரம் மாலை ஆறு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது.

பேருந்தின் இருபுறமும் கட்டப்பட்டிருந்த நீலநிற 'பேனர்' துணிகளில் 'பெண்கள் மேல்நிலைப்பள்ளி—தஞ்சாவூர்' என்று வெள்ளை எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருந்தது.

பேருந்தில் இருந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட 'ப்ளஸ் டூ' மாணவிகள், தங்கள் ஆடைகளைச் சரி செய்து கொண்டு 'திமுதிமு'வென்று கீழே இறங்கத் தொடங்கினார்கள். மாணவிகளுடன் துணையாய் வந்திருந்த தலைமையாசிரியையும், உதவித் தலைமையாசிரியையும் அவர்களைத் தொடர்ந்து பேருந்திலிருந்து இறங்கவும்,

மாணவியர் கூட்டம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது!

''டீச்சர்...! இந்தக் கோவிலில் என்னென்ன பார்க்க இருக்கிறது...?'' என்று உதவித் தலைமையாசிரியையிடம் ஆர்வத்துடன் கேட்டாள் மாணவிகளில் ஒருத்தி.

கோவில் நுழைவாயிலின் இடது புறம், தெப்பக்குளத்தை நோக்கி இருக்கும் பெரிய மணிக் கூண்டைச் சுட்டிக் காட்டிய உதவித் தலைமையாசிரியை, அந்த மணிக் கூண்டின் தனிச்சிறப்பை மாணவிகளுக்கு விளக்கிச் சொல்லலானார்.

''இந்த மணிக்கூண்டில் ராட்சஸன் போன்ற ஒரு பெரிய மனிதத்தலை உருவம் இருப்பதைப் பாருங்கள்!'' என்று மாணவிகளின் கவனத்தை மணிக்கூண்டின் பக்கம் திருப்பியவர், ''அந்தத் தலையின் இருபுறத்திலும் ஓர் ஆட்டின் உருவம் இருப்பதைப் பாருங்கள்!'' என்றும் சுட்டிக் காட்டினார்.

''ஒவ்வொரு முறை மணி அடிக்கத் தொடங்கும் போதும் இந்த மனித உருவம் வாயைத் திறக்கும்; அப்போது அதன் நாக்கு நீண்டு கொண்டு வெளியே வரும்; கண்களில் உள்ள விழிகள் பந்து போல் மேல் நோக்கி

உருளும்...!'' என்று ஆசிரியை அந்த விசேஷ மணிக்கூண்டைப் பற்றி விளக்கிக் கொண்டு போனபோது, மாணவிகள் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''மணி அடிக்கும் ஓசை கேட்கும் போது அந்த இரண்டு ஆடுகளும் அந்த மனிதனின் கன்னங்களில் வந்து முட்டும்!'' என்று அவர் விளக்கம் சொல்லி முடிப்பதற்கும், மணி ஆறைத் தொடுவதற்கும் சரியாக இருந்தது. உதவித் தலைமை ஆசிரியை கூறியது போலவே ஆறு முறை மணி அடிக்கும் போதும், அந்த மணிக் கூண்டுப் பொம்மைகள் காட்டிய வித்தையைக் கண்டு அதிசயித்து நின்றார்கள், மாணவிகள் அனைவரும்!

''இந்தக் கோயிலைப் பற்றியும் கொஞ்சம் சொல்லுங்கள் டீச்சர்!'' என்றாள் இன்னொரு மாணவி, தான் கண்ட அதிசயக் காட்சியிலிருந்து மீண்டு!

''சொல்லுகிறேன்; கேளுங்கள்!'' என்று தொண்டையைக் கனைத்துக் கொண்டே சொன்ன ஆசிரியை, பத்மநாபசுவாமி கோவிலின் சந்நிதானத்தைப் பற்றி மாணவிகளுக்கு விவரிக்கத் தொடங்கினார்.

''இந்தக் கோயிலின் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் தெய்வம் அனந்த பத்மநாபர்! இந்த ஊரின் பெயரே இந்த இறைவனின் பெயரைக் கொண்டதுதான்! திரு-அனந்த-புரம்! இந்த இறைவன் இங்கே அனந்தசயனத்தில் வீற்றிருக்கிறார்... இறைவனை நாம் மூன்று வாசல்கள் வழியாகக் காண வேண்டும்!'' — என்று கூறியவர் சிறிது நேரம் பேச்சை நிறுத்தி எச்சிலை விழுங்கிக் கொண்டார்.

''முதல் வாசல் வழியாக இறைவனின் தலையைக் காணலாம்; நடு வாசல் வழியாக இறைவனின் நாபியில் இருந்து வரும் பத்மத்தை — தாமரையைக் காணலாம்; மூன்றாவது வாசல் வழியாக இறைவனின் பாதங்களைக் காணலாம்!'' என்று அவர் தொடர்ந்து விவரித்ததை மலைப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள் மாணவிகள்!

''இந்தத் தெய்வம் 'பத்ம -நாபி' அதனால்தான் இந்தக் கோயிலின் வாசலில் தாமரைப் பூக்கள் எப்போதும் மிக மலிவாகக் கிடைக்கும்!'' என்று அவர் மேலும் கூறவும், மாணவிகள் அனைவரும் மகிழ்ச்சியில் துள்ளினார்கள்!

''ஒவ்வொரு நாளும் இங்கு காலை ஐந்து மணிக்கும், மாலை ஏழு மணிக்கும் இறைவனுக்கு தீபாராதனை நடக்கும்; திருவனந்தபுரத்து ராஜா, காலை நேர பூஜைக்கு இந்தக் கோயிலுக்குத் தினமும் வருவதுண்டு!'' என்று உதவித் தலைமையாசிரியை பத்மநாப ஆலயத்தைப் பற்றி மேலும் விவரிக்கவும்,


கோயிலின் உள்ளே சென்று உடனே தெய்வத்தைக் காண வேண்டும் போல் இருந்தது, மாணவிகளுக்கு!

''டீச்சர்! நாம் மாலை தீபாராதனை பார்த்துவிட்டுத்தானே வெளியே வரப் போகிறோம்?'' என்று ஆவல் பொங்கக் கேட்டாள் கடவுள் பக்தியில் திளைத்த மாணவிகளில் ஒருத்தி!

''தலைமையாசிரியையிடம் உத்தரவு கேளுங்கள்!'' — என்று மாணவிகளைப் பார்த்து உதவித் தலைமையாசிரியை சொல்லவும்,

மாணவிகளில் சிலர் தலைமையாசிரியையிடம் சென்றனர்.

பேருந்தின் அருகே தனியாக



முன்னும் பின்னும்

நாம் ஒருவருக்குக் கடிதம் எழுதும் போது பெயருக்கு முன்னால் 'மிஸ்டர்' அல்லது 'திரு' என்று குறிப்பிடுகிறோம். ஆனால், சீன நாட்டு மக்கள் கடிதம் எழுதும் போதும், உறையின் மீதும் பெயருக்குப் பின்னால்தான் 'மிஸ்டர்' 'திரு' போன்ற மரியாதைச் சொற்களை எழுதுவார்கள். உதாரணம் — ப. சண்முகம் மிஸ்டர், டி. கவிதா செல்வி.

— கே. நரசிம்மன் (7378), ஓசூர்.

நின்று கொண்டு, இதுவரை வேறு சிந்தனையில் மூழ்கி இருந்தார் தலைமையாசிரியை! அவர்களின் சுற்றுலாப் பயணத் திட்டப்படி இன்று இரவே ஒன்பதரை மணிக்குள் அவர்கள் குற்றாலம் சென்று, அங்கிருக்கும் மகளிர் கல்லூரி விடுதியில் தங்க வேண்டும். இரவு உணவும் அங்கேதான்! திருவனந்தபுரத்திலிருந்து மூன்று மணி நேரப் பயணம். பயணத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்த தலைமையாசிரியை, 'குறைந்த பட்சம் இங்கிருந்து ஆறரை மணிக்காவது கிளம்பிவிட வேண்டும்!' என்று மனத்தில் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

இத்தருணத்தில் மாணவிகள் அவரைப் பார்த்து, "தயவு செய்து நாம் அனைவரும் தீபாராதனை பார்த்துவிட்டு ஏழு மணிக்குமேல் இங்கிருந்து புறப்பட்டுச் செல்லலாம். நீங்கள் அனுமதிக்க வேண்டும்" என்று கோரஸாகக் கத்தவும் கடுங்கோபத்திற்கு ஆளானார் அவர்!

அவருக்குக் கோபம் வந்தால் எப்படி இருக்கும் என்று நன்கு தெரியும் மாணவிகள் அனைவருக்கும்! "ஆறரை மணிக்கு மேல் ஒரு நிமிடம் கூட இங்கே தாமதிக்கக் கூடாது... தீபாராதனையைப் பார்த்துவிட்டு வந்தால்தான் கடவுளின் அருள் கிட்டுமோ...! இல்லாவிட்டால் கிடைக்காதோ? கோயிலுக்குள் சென்றுவிட்டு உடனே திரும்பி வாருங்கள்!" என்று தலைமையாசிரியை கடுமையாகவும் கண்டிப்பாகவும் கூறவும்,

மாணவிகள் அனைவரும் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போய்விட்டார்கள்!

மாலை ஆறரை மணிக்குச் சரியாகப் பேருந்து கோவிலின் வாசலில் இருந்து புறப்பட்டு விட்டது.


நகரின் எல்லையைத் தாண்டி மலைப் பாதையின் ஏற்றத்தில் உறுமிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தது பேருந்து. கேரளத்தின் மலை அழகை ரசித்துக் கொண்டும், மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டும் பயணம் செய்து கொண்டிருந்தார்கள் தஞ்சை மாணவிகள். தலைமையாசிரியை மட்டும் சஞ்சலத்துடன் காணப்பட்டார்! 'கோயிலின் வாசல் முன்பு கடவுளை நிந்திப்பது போல் மாணவிகளிடம் வார்த்தைகளைக் கொட்டி விட்டோமே!' என்று நினைத்து நினைத்து அல்லல்பட்டுக் கொண்டிருந்தது அவர் மனம்!

மாலை மங்கி இருள் சூழத் தொடங்கிய அந்த வேளையில், ஓங்கி வளர்ந்த தேக்குமரக் காடுகளின் வழியே பேருந்து தனியே சென்று கொண்டிருந்த போது, திடீரென 'டமார்' என்று இடிபோல் ஒரு வெடிச் சத்தம்! அதைத் தொடர்ந்து "ஐயோ! அம்மா!" என்று மாணவிகளின் அவலக் குரல்கள்!

பேருந்து சாலை ஓரம் மரம் ஒன்றில் முட்டி மோதி நின்றது!

விபத்தின் அதிர்ச்சியால் அனைவரும் மிரண்டிருக்க அதிலிருந்து மீண்ட டிரைவர், பேருந்திலிருந்து கீழே குதித்து வண்டியைச் சுற்றிப் பார்வையிட்டார். பின்பு வெளியே இருந்தபடியே ஆசிரியைகளைப் பார்த்து உரக்கக் கத்தினார்.

"டீச்சர், பஸ்ஸின் முன் டயர் வெடித்து விட்டது. எல்லோரும் உடனே கீழே இறங்கி விடுங்கள்!" என்று தம் சக்தியை எல்லாம் கூட்டி



அலறியவர், "பஸ் மிகவும் ஆபத்தான நிலையில் நின்று கொண்டிருக்கிறது. இந்த மரத்தின் மீது மட்டும் மோதியிரா விட்டால், இருநூறு அடி பள்ளத்தில் உருண்டு இருக்கும்! எல்லோரும் உடனே இறங்குங்கள்!" என்று அலைவரையும் அவர் மேலும் துரிதப்படுத்தவும்,

எல்லோரும் பதறிக் கொண்டும் விழுந்தடித்துக் கொண்டும் கீழே இறங்கினார்கள். நல்லவேளை; ஒருவருக்கும் பெரிய காயம் ஒன்றும் இல்லை!

இறங்கிய மாணவிகள் அனைவரும் சாலை ஓரத்தில், மலைச்சரிவில் நடுங்கிக் கொண்டு நின்றார்கள், ஆசிரியைகளைச் சூழ்ந்து கொண்டு! பேருந்து மலை மீது இருந்து உருளாமல் தடுத்து நிறுத்தி பெரும் விபத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றிய அந்த மரம், அவர்க்ள் கண்களுக்கு அப்போது கடவுள் போலவே காட்சியளித்தது!

விபத்து நடந்த பின்பு தலைமையாசிரியை இடிந்து போய்விட்டிருந்தார்!

'நான் மாணவிகளின் விருப்பத்தைக் கோவிலில் நிறைவேற்றி வைக்காததால் இறைவன் எனக்கு அளித்த தண்டனை தான் இது!' என்று எண்ணி அழுதது அவர் மனம்.

டிரைவர் இடிந்துபோய்விட்ட தலைமையாசிரியையிடம் வந்து வருத்தத்துடன் சொன்னார்: "டீச்சர்! டயரைப் பழுது பார்க்காமல் நமது வண்டியை எடுக்க முடியாது! பழுதான சக்கரத்தை இனி திருவனந்தபுரத்திற்குக் கொண்டு சென்றுதான் சரி செய்ய முடியும்... ஸ்டெப்னியும் நல்ல கண்டிஷனில் இல்லை... இப்போது என்ன செய்வது?" என்று சோர்ந்து போய்க் கேட்கவும்,

மேலும் பேயறைந்தது போலாயிற்று தலைமையாசிரியைக்கு.


தன்னந்தனியாகக் காட்டில், இருள் சூழ்ந்த வேளையில், வயதுக்கு வந்த பெண்கள் ஐம்பது பேரை வைத்துக் கொண்டு எப்படிப் பாதுகாப்புக் கொடுப்பது? என்பதை நினைத்துப் பார்க்கும் போதே மயக்கம் வரும் போல் இருந்தது அவருக்கு!

"ஆள் அரவமே இல்லாத அந்த இடத்தில், வனவிலங்குகள் சுற்றித் திரியும் அந்தக் காட்டில்தான் இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு மாணவியைக் கடத்திச் சென்று நகைகளைக் கழற்றிக் கொண்டு கொலை செய்து போட்டுவிட்டுச் சென்றார்கள் கயவர்கள்!" என்று அவ்வழியே வந்த வழிப்போக்கன் ஒருவன் அவர்களைப் பார்த்துச் சொன்னபோது மேலும் வயிற்றில் புளியைக் கரைத்தது தலைமையாசிரியைக்கு!

"எட்டு மணிக்கு இவ்வழியே திருவனந்தபுரத்திற்கு ஒரு பஸ் உண்டு. அதுதான் இந்தமலைப்பாதை 'ரூட்டில்' வரும் கடைசி பஸ்! எப்படியாவது அந்த பஸ்ஸைப் பிடித்துத் திருவனந்தபுரத்திற்குச் சென்று விடுங்கள்! அதுதான் உங்களுக்குப் பாதுகாப்பு!" என்று அவன் மேலும் கூறியதைக் கேட்ட பின்புதான் சோர்ந்து போய் இருந்த உடம்பில் சிறிது தெம்பு வந்ததுபோல் இருந்தது அவருக்கு! தொடர்ந்து தலைமையாசிரியையின் மனம் நொடியில் ஒரு முடிவுக்கு வந்தது. அந்த முடிவில் ஓர் உறுதி தெரிந்தது!

இருட்டில் ஒருவர் கையை ஒருவர் பின்னிக் கொண்டு, பயத்துடன் நடுங்கிக் கொண்டிருந்த மாணவிகளின் கவனத்தைத் தம் பக்கம் திருப்பி அன்பொழுகச் சொன்னார் அவர்: "மாணவிகளே! அந்த வழிப்போக்கன் கூறிச் சென்றது போல இன்றிரவே நாம் மீண்டும் திருவனந்தபுரம் செல்கிறோம்; இன்றிரவு பத்மநாப சுவாமி கோயிலின் சத்திரத்தில்தான் நாம் தங்குகிறோம்; நாளை அதிகாலை கோயிலுக்குச் சென்று ஐந்து மணி பூஜையில் தீபாராதனையைக் கண்டு பத்மநாபசுவாமியை நாம் அனைவரும் மனம் உருகத் தரிசிக்கிறோம்!" என்று இறைவனின் எண்ணம் முழுவதும் மனத்தில் நிறைந்தவராக அவர் கூறிக் கொண்டே போனபோது மாணவிகள் அனைவரும் மகிழ்ச்சியில் துள்ளினார்கள்!

அதுவரை அவர்களைப் பின்னியிருந்த பய உணர்வு அறவே விலகியிருந்தது. இப்போது! இறைவனிடம் பாரத்தை இறக்கிவிட்டு பாட்டும் கூச்சலுமாகத் திருவனந்தபுரம் நோக்கிச் செல்லும் பேருந்திற்காக அந்த இருளில் நம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் காத்து நின்றார்கள் அந்த மாணவிகள்!



முடியாதது என்பது இல்லை

பழக்கம் இருந்தால் சர்க்கஸ்
வித்தையும்
பார்த்திட எளிதாய்த் தோன்றும்.
பழக்கத் தாலே கம்பியில் கூடப்
பதமாய் நடத்திடக் கூடும்.

தாயின் மார்பைக் குட்டிகள் இறுகத்
தழுவிக் கொண்டிடும் போது
பாய்ந்து தாவிடும் குரங்குகள் மலையில்
பயமறி யாமல் ஏறும்.

முயன்று பழகினால் எவர்க்கும் எதுவும்
முடியா தென்பதும் உண்டோ?
அயர்ந்து தூங்கிடும் பிள்ளைக ளால்
தான்
ஆவது ஒன்றும் இல்லை.

செல்லகணபதி

நார்வே கதை

கிறிஸ்துமஸ் பரிசு!



தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

நார்வே ஒரு கரடு முரடான நாடு. மலைகளும், பனிக்கட்டி ஆறுகளும் நிறைந்த நாடு. உடைந்த கடற்கரையும், ஆழமான கடற்கழிகளும் நிறைந்த நாடு. விவசாயத்திற்கு வசதியான நிலம் மிகவும் கொஞ்சம். அந்தக் கொஞ்ச நிலமும் ஒரு சில செல்வந்தரிடமே இருந்தது. அந்த நிலத்தைக் குத்தகைக்கு வாங்கி, உழவு செய்யும் சிறுசிறு ஏழை விவசாயிகளே அங்கு அதிகம்.

அப்போது டிசம்பர் மாதம், பதின்மூன்றாம் நாள். கிறிஸ்துமஸ் விழாக் காலம் தொடங்கும் நாள். அறுவடை முடிந்து வீட்டில் தானியங்கள் குவிந்திருக்கும் நாள். அந்தத் தானியங்களை அவர்கள் ஓராண்டிற்கு வைத்துக் கொள்ள வேண்டும். விளைச்சல் அதிகமாக இருந்தால், அடுத்து வரும் ஆண்டு சந்தோஷமாக இருக்கும். இல்லாவிட்டால் கஷ்டம்தான்.

நாம் பொங்கல் பண்டிகை கொண்டாடுவதைப் போல, நார்வே நாட்டு மக்கள் கொண்டாடும் உழவர் திருநாள் அந்த நாள்தான். அவர்கள் அறுவடைத் தேவதையை ஆராதிக்கும் நாளும் அந்த நாள்தான். அன்று முதல் விழாக் காலம் முழுவதும் காக்கை, குருவி, பூனை, நாய், மான் முதலிய எல்லா உயிர்களுக்கும் உணவு அளித்து, அவர்கள் அன்பு செலுத்துவர். மேலும், ஒவ்வொரு வீட்டிலும் அம்மா கிறிஸ்துமஸ் கேக்குகளைச் செய்யத் தொடங்கும் நாளும் அந்த நாள்தான். பண்டிகை தினங்களில் நாம் வாயிலில் இரண்டு வாழை மரங்களைக் கட்டி, மாவிலை முதலிய தோரணங்களால் வீட்டை அலங்கரிக்கிறோம் இல்லையா? அதைப் போலவே, நார்வே நாட்டு மக்களும் வாயில்புறத்தில் இரண்டு கிறிஸ்துமஸ் மரங்களைக் கட்டி வீட்டை அலங்கரிப்பர். ஆகவே, குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் டிசம்பர் மாதம் பதின்மூன்றாம் நாள் மிகவும் முக்கியமான நாள்.

நார்வேயில் கடற்கழிகளின் அருகில் பர்கென் என்று ஓர் ஊர். அங்கு கடலோரம் வரைக்கும் மலைகள் பரந்து சென்று, அந்தக் கடற்

கழிகளுக்குக் கரைகள் போலத் தோன்றின. எல்லா வீடுகளிலும் தாய்மார்கள் கிறிஸ்துமஸ் கேக்குகளைச் செய்யத் தொடங்கியிருந்தார்கள். ஆகையால், கூரைகளிலிருந்து கிளம்பிய புகை அந்தப் பகுதியை ஒரு திரை போட்டது போல மூடியிருந்தது.

புகைமண்டலத்தின்வழியேநோக்கினால், அந்த ஊர்க் கோடியில் உள்ள பழைய பள்ளிக்கூடத்தையும், பள்ளி மைதானத்தில் உள்ள ஊசியிலை மரத்தையும், பள்ளியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் சிறுவர், சிறுமியரையும் காணலாம்.

பெட்டருக்கும், அமாலிக்கும் அது ஒரு சந்தோஷமான நாள். ஏனென்றால், அன்றுதான் பள்ளியின் ஆண்டுக் கடைசி நாள். அப்புறம் நீண்ட விடுமுறை. அதற்காக மட்டும் அந்த இரண்டு ஏழைக் குழந்தைகளும் சந்தோஷப்படவில்லை. மைதானத்தில் உள்ள கிறிஸ்துமஸ் மரத்தில் தொங்கும் பரிசுகளில் தங்கள் பெயருக்கும் ஒன்று வராதா என்ற எதிர்பார்ப்பு. அன்றைக்கு யார் யாருக்குப் பரிசுகள் கிடைக்கப் போகிறது என்பதை அறியும் இனிய ஆவல். இந்த ஆவலுடன், அண்ணனும், தங்கையுமான அவர்கள் பள்ளியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர்.

''போன வருஷம் எனக்கு எந்தப் பரிசும் கிடைக்கவில்லை. இந்த வருஷமும் நான் எதையும் எதிர்பார்க்கவில்லை!'' பெட்டர் வருத்தத்தோடு சொன்னான்.

''போன வருஷத்துக் கதை எல்லாம் எதுக்கு? இந்த வருஷம் கிறிஸ்துமஸ் தாத்தாவிடம் நிறையப் பணம் இருக்கலாம். நமக்குப் பரிசுகள் கிடைக்கலாம், இல்லையா?'' என்றாள் தங்கை அமாலி.

கிறிஸ்துமஸ் தாத்தாகூட எப்போதும் பணக்காரக் குழந்தைகளுக்கே முதலில் பரிசுகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏழைக்குழந்தைகள் கடைசி வரையில் காத்திருக்க வேண்டியிருந்தது. ஏதாவது மிச்சம் மீதிப் பரிசு இருந்தால்தான் அவர்களுக்குக் கிடைத்தது. இல்லாவிட்டால் பரிசும் கிடையாது. ஒன்றும் கிடையாது.

பெட்டரும், அமாலியும் வகுப்பறை



யில் நுழைந்தபோது, அங்கு ஏற்கெனவே நிறையப் பிள்ளைகள் வந்திருந்தனர். அவர்கள் பண்டிகைக்காகச் சிறந்த ஆடைகளை உடுத்தியிருந்தனர். நீல நிறக் கம்பளிக் கோட்டும் தொப்பியும், அணிந்திருந்தனர். கோட்டில் வண்ண வண்ண நூல்களால் சித்திரத் தையல் வேலை செய்யப்பட்டிருந்தது. பொத்தான்கள் வெள்ளியைப் போல பளபளவென்று மின்னின. ஆனால், ஆடைகளைப் பற்றி விவாதிப்பதற்கு அவர்களுக்கு நேரம் ஏது? "கிறிஸ்துமஸ் மரத்திலிருந்து தனக்கு என்ன பரிசு கிடைக்கும்?" என்ற நினைப்பிலேயே அவர்கள் முனைப்பாக இருந்தனர்.

"எனக்கு என்ன பரிசு கிடைக்கும் என்று எனக்குத் தெரியும்! என் பெயர் பொறிக்கப்பட்ட சிறிய கத்தி ஒன்று பரிசாக வரப் போகிறது!" என்றான் பெட்டரின் நண்பன் ஹென்றிக்.

"ஏண்டா, வாத்தியார் பாடம் கேட்டால், தெரியாது என்கிறாய்! கிறிஸ்துமஸ் தாத்தா தரப் போகிற பரிசைப் பற்றி மட்டும், உனக்கு எப்படித் தெரியும்?" பெட்டர் கேட்டான்.


"எனக்குக் கத்திதான் தேவை. நான் ஆசைப் பட்ட பொருள் கிடைத்துவிடும். அதனாலே தெரியும்!" என்றான் ஹென்றிக்.

"உனக்குத்தான் இலக்கணமே வராதே. ஓர் இலக்கணப் புத்தகம் வேண்டும் என்று ஆசைப்படேன்?" அமாலி குறுக்கிட்டாள்.

"ஆமாம், ஆமாம். நீ ஏன் அப்படிச் செய்யக் கூடாது. ஒரு நாளைப் போலத் தினமும் ஆசிரியரிடம் வசவும், உதையும் வாங்குகிறாயே?" என்றான் பெட்டர்.

ஆனால், ஹென்றிக் சொன்னதைப் போலப் பளபளப்பான ஒரு சிறிய கத்தி அவனுக்குப் பரிசாக வந்தது! அவனுடைய பெயர் அதில் பொறிக்கப்பட்டிருந்தது!

"நான் முன்கூட்டியே சொன்னேனே, பார்த்தியா?" என்று ஹென்றிக் பெட்டரிடம் பெருமைப் பட்டுக் கொண்டான்.



"அந்த யானைப்பாகன் ஏன் சோகமா இருக்கான்!"

"ஒவ்வொரு நாளும் தான் வசூல் பண்ற தொகை பற்றிய கணக்கை யானை கேட்கிறதாம்!"

— மணியன் தர்மலிங்கம்.

மரத்திலிருந்து பரிசுகளை எடுத்து அளிக்கும் ஆசிரியரையே பெட்டரும், அமாலியும் வைத்த கண் வாங்காமல், உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். அநேகமாக எல்லோருக்கும் பரிசுகள் அளிக்கப்பட்டன. பாடத்தில் கவனம் இல்லாத ஹென்றிக்குக் கூடப் பரிசு அனுப்பும் கிறிஸ்துமஸ் தாத்தா, ஒழுங்காகப் படிக்கும் தங்களுக்கு மட்டும் ஏன் பரிசு அனுப்பவில்லை? என்றுபெட்டரும்அமாலியும்வருத்தப் பட்டனர். வகுப்பில் இருந்த சிறுவர்களும், சிறுமிகளும் பரிசாகக் கிடைத்த இனிப்புக்களையும், பழங்களையும் ஆசையோடு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

தங்களுக்குப் பரிசு கிடைக்காத ஏமாற்றத்தால் பெட்டரும், அமாலியும் தங்கள் இருக்கைகளில் அமர்ந்து, அவமானத்தால்கூனிக்குறுகிப்போயினர்.

"பரிசுகள் தீர்ந்து விட்டன. அவ்வளவுதான்! உங்களுக்கெல்லாம் என் பண்டிகைக் கால வாழ்த்துக்கள்!" என்றார் ஆசிரியர்.

குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வெளியே வந்தனர். ஒவ்வொருவரும் பெருமையோடு தங்கள் பரிசுகளை மற்றவர்களுக்குக்காட்டினர். "பெட்டருக்கும், அமாலிக்கும் ஒன்றுமே கிடைக்கவில்லையே!" என்று

அவர்கள் பேசினர். "அவர்கள் இருவரும் நல்லவர்கள் இல்லையோ என்னவோ?"

"ஆனாலும், கிறிஸ்துமஸ் தாத்தா அவர்களை ஏமாற்றியிருக்கக் கூடாது!" இப்படி அவர்கள் பலவிதமாகப் பேசிக் கொண்டனர்.

அமாலி தன் அண்ணனைப் பார்த்தாள். அவனுடைய கண்களில் நீர் முட்டியிருந்தது. மற்றவர்கள் தன்னைப் பார்க்கக் கூடாது என்பதற்காக அவன் தன் கோட்டுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தான். அமாலிக்கும் வருத்தமாக இருந்தது. இருந்தாலும் அவள் தன்னை ஒரு நொடியில் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

"வா அண்ணா! வீட்டுக்குப் போகலாம்!" என்று சொல்லி எழுந்தாள்.

பனித்தரையில் நடப்பதற்கு ஏற்ற ஷி (Shi) என்னும் நீண்ட கட்டையைக் காலில் அணிந்தனர். பனியில் ஊன்றிச் செல்வதற்கு வசதியாகக் கைகளில் கோலை (Poles) எடுத்துக் கொண்டு இருவரும் தங்கள் வீட்டை நோக்கி நடந்தனர்.

"பெட்டர்! கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு நமக்குப் பரிசே கிடைக்காது என்ற அர்த்தத்தில் அவர்கள் பேசுகின்றனர்!" அமாலி சொன்னாள்.

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன். போன வருஷமே நமக்கு ஒன்றும் கிடைக்கவில்லையே!" என்று பெட்டர் ஏக்கத்தோடு பதிலளித்தான்.

"பெட்டர், நீ ஏன் நம்பிக்கை இல்லாமல் பேசுகிறாய்? கிறிஸ்துமஸ் தாத்தாவைக் குற்றம் சொல்லாதே. நீ சந்தோஷமாக உன் கடமைகளைச் செய்து கொண்டிரு. இந்த வருஷம்



நிச்சயமாகப் பரிசு கிடைக்கும்!" என்றாள் அமாலி.

பெட்டர் விழிகளைத் துடைத்துக் கொண்டான். மறுபடியும் அவனுக்கு நம்பிக்கை துளிர்த்தது. தன் தங்கை சொல்வது ஒருவேளை சரியாக இருக்கலாம் என்று எண்ணினான். 'ஷி' கட்டையுடன் பனியின்மேல் மௌனமாக நடந்து கொண்டே இருவரும் தங்கள் வீட்டு வாயிலை அடைந்தனர்.

சுற்றிலும் மரவேலி. நடுவில் இருந்த வீடும், தோட்டமும் வெள்ளை வெளேர் என்ற பனியில் முழுகியிருந்தன.

மாலை நேரம். பனிக் குருவிகள் கூட்டமாக வந்து, வழக்கம் போல அவர்களுடைய தோட்டத்துப் பனியில் இறங்கின. பெட்டரும், அமாலியும் தங்கள் சாப்பாட்டிலிருந்து ஒரு பகுதியைச் சேமித்து, அதை அந்தக் குருவிகளுக்குத் தினமும் போடுவது வழக்கம். அவை ஆவலோடு அவற்றைக் கொத்தித் தின்னும். குழந்தைகள் இருவரும் அந்தக் குருவிகளை வேடிக்கை பார்ப்பார்கள்.

திடீரெனப் பெட்டர், "அமாலி! உனக்கு ஒரு சேதி தெரியுமா?" என்று கேட்டான்.

"என்ன?"

"குருவிகளுக்குக் கிறிஸ்துமஸ் பரிசாகக் கொடுக்க இந்த வருஷம் நம்மிடம் தானியக் கதிர்களே இல்லையே?" என்று பெட்டர் சொன்னான்.

பள்ளிக்கூடத்தில் தாங்கள் ஆசையோடு பரிசுகளை எதிர்பார்த்தது போலவே, அந்தக் குருவிகளும் அவர்களிடம் கிறிஸ்துமஸ் பரிசை எதிர்பார்க்கின்றன என்று பெட்டரும், அமாலியும் நம்பினர்.

"பனிக்காலத்தில் இந்தக் குருவிகளுக்குப் பசியாற உணவு கிடைப்பதில்லை. குளிரால் வருந்தும். பிஞ்சுக் கால்கள் இளைப்பாற இவற்றிற்கு வெதுவெதுப்பான ஓர் இடம் கிடைப்பதில்லை. பாவம், இந்தக் குருவிகள்! கிளைக்குக் கிளை தாவி அலைகின்றன. கிறிஸ்துமஸ் பரிசாக நாம் எப்படியாவது இவற்றிற்குத் தானியக் கதிர்களைக் கொடுக்க வேண்டும்!" என்றான் பெட்டர்.



வீட்டில் உணவுப் பஞ்சம் இருந்தாலும், குருவிகளுக்குத் தானியக் கதிர்களை அளிக்காமல் இருப்பது தவறு என அவர்கள் நினைத்தனர்.

"கதிர்கள் வாங்கக் காசு இல்லையே? என்ன செய்யலாம்?" அமாலி கேட்டாள்.

"காட்டுக்குப் போய் இரண்டு ஊசி இலை மரங்களை வெட்டுவோம். அவற்றை ஊருக்குள் கொண்டு போவோம். நம்மிடமிருந்து யாராவது அவற்றைவாங்கலாம்!" என்றான் பெட்டர்.

"சரி, சரி. அப்படியே செய்வோம்!" என்றாள் அமாலி.

அடுத்த நாள் பெட்டரும், அமாலியும் காட்டுக்குப் போனார்கள். இரண்டு ஊசி இலை மரங்களை வெட்டினார்கள். மரங்கள் கீழே சாய்ந்தன. ஒவ்வொரு மரத்திலும் ஒரு சிறு கயிற்றைக் கட்டினர். ஆளுக்கு ஒன்றாக அந்த மரங்களைப் பனித்தரையின் மீது இழுத்துக் கொண்டு, ஊரை நோக்கி நடந்தனர். பர்கெனில் அநேகமாக எல்லா வீட்டு வாயில்களிலுமே இரண்டு கிறிஸ்துமஸ் மரங்கள் நடப்பட்டிருந்தன.

"எல்லோருமே மரங்களை வாங்கியிருந்தால் என்ன செய்வது?" என்று பெட்டர் கேட்டான்.

"இவ்வளவு பெரிய ஊரில் யாருக்காவது இவை தேவைப்படாமலா போகும்? கேட்டுப் பார்ப்போமே?" என்றாள் அமாலி.

பெட்டரும், அமாலியும் ஒவ்வொரு வீடாகச் சென்று, "மரம் வேண்டுமா? மரம் வேண்டுமா?" என்று பொறுமையாகக் கேட்டனர். ஏதோ ஒரு பதிலைச் சொல்லி, ஒவ்வொருவரும் அவற்றை வேண்டாம் என்று மறுத்துவிட்டனர்.

இரவு ஆயிற்று. அவர்கள் அந்த மரங்களை இழுத்துக் கொண்டு இன்னும் அலைந்து கொண்டே இருந்தனர். களைப்பும், ஏமாற்றமும் மேலிட்டன.

"வீட்டுக்குத் திரும்புவோம். அம்மா கவலைப்படுவாள்," என்றாள் அமாலி.

"தானியக் கதிர்களை நம்மால் காசு கொடுத்து வாங்க முடியவில்லை. கடைக்குப் போய் அவற்றைக் கண்ணால் பார்த்துவிட்டாவது வரலாமே?" என்றான் பெட்டர்.

இருவரும் அந்த மரங்களைப் பனி படர்ந்த தரையின் மீது இழுத்துக் கொண்டே, கதிர்கள் விற்கும் கடை

மனம் ஒரு தோட்டம்!

ரூ. துளசிதாஸ்

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
இனிய கனிகள் மரமுண்டு;
தங்கி அமர்ந்து விளையாடத்
தக்க தான நிழலுண்டு.

பாத்தி கட்டிப் பலநாளாய்ப்
பக்குவ மாக உரமிட்டுக்
காத்தி ருந்து கிடைத்தபலன்
கனிகள் தருமாம் மரக்கூட்டம்.

எந்த முனைப்பும் இல்லாமல்
இடையே களைகள் வளர்ந்தனவே;
எந்தப் பலனும் தாராமல்
இடையூ றாக இருந்தனவே.

அவற்றைக் கெல்லி எடுத்தெறிந்தே
அழகு செய்தோம் தோட்டத்தை.
களையும் சுகமும் தருகின்ற
தூய இடமே எம் தோட்டம்.

கள்ளம் எண்ணும் மனம்கூடக்
களைகள் மலிந்த தோட்டம்தான்;
துள்ளித் திரியும் பருவத்தில்
தூய எண்ணம் வளர்த்திடுவோம்.

களைகள் இல்லாத் தோட்டம்தான்
கனிகள் நிறையத் தந்திடுமே;
தெளிந்த நல்ல மனத்தால்தான்
செழுமை சேரும் வாழ்வினிலே.

தேவை இன்றி வளர்கின்ற
தீய எண்ணம் நீக்கிடுவோம்;
கோவில் நமது மனமென்று
குறைகள் நீக்கி வாழ்ந்திடுவோம்!



யை நெருங்கினர். கடை முழுவதும் தானியக் கதிர்களாகவே இருந்தன. விதவிதமான கதிர்கள். கடைக்காரர் அவற்றைக் கொத்துக் கொத்தாகக் கட்டிச் சீராகத் தொங்க விட்டிருந்தார். அந்தப் பொன்னிறக் கதிர்களைக் குழந்தைகள் இருவரும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றனர்.

''உங்களுக்கு இரண்டு கதிர்கள் தரட்டுமா?'' கடைக்காரர் கேட்டார்.

''வேண்டாம். வேண்டாம். நாங்கள் இன்னும் இந்த மரங்களை விற்கவில்லை. எல்லா வீடுகளிலும் கேட்டோம். யாரும் வாங்கவில்லை. இந்த வருஷம் எங்களால் குருவிகளுக்குக் கிறிஸ்துமஸ் விருந்து கொடுக்க முடியாதோ என்று கவலையாக இருக்கிறது,'' என்று பெட்டர் பதிலளித்தான்.

''எனக்கு அந்த மரங்கள் தேவை. நானே வாங்கிக் கொள்ளுகிறேன். பதிலுக்கு இரண்டு தானியக் கதிர்களைத் தருகிறேன். சம்மதமா?'' என்று அவர் கேட்டார்.

பண்டமாற்று முடிந்தது. மரங்களுக்குப் பதிலாகத் தானியக் கதிர்களைக் கயிற்றின் முனையில் கட்டி, சந்தோஷமாக அவற்றை இழுத்துக் கொண்டு இருவரும் வீடு திரும்பினர்.

வீட்டில் ஆடு, மாடுகளை அடைக்கும் தொழுவம் காலியாக இருந்தது. அந்தக் கதிர்களை அங்கு வைத்துக் கதவுகளை இறுகச் சாத்தினர். ''நேரம் அதிகமானாலும் பரவாயில்லை. நல்லவேளை, குருவிகள் தாம் கொடுக்கப் போகும் கிறிஸ்துமஸ் பரிசைப் பார்க்கவில்லை,'' என்றான் பெட்டர்.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன் தினம் எப்போது வரும் என்று பெட்டரும், அமாலியும் ஆவலோடு காத்திருந்தனர். அவர்களுக்கு ஒரு நிமிஷம் போவது ஒரு யுகமாகத் தோன்றியது.

கடைசியில் அந்த நாள் வந்தது. இருட்டியதும் குருவிகள் ஓய்வு எடுக்கப் போய்விட்டன. முன் வர்ரிவில் இருந்த கம்பத்திற்கு ஒன்றாக அவர்கள் அந்த இரு தானியக் கதிர்களையும் கட்டி வைத்தனர்.

''விடிந்தால் கிறிஸ்துமஸ்! குருவிகளுக்கு எதிர்பாராத ஆச்சரியம்!

கிறிஸ்துமஸ் தாத்தாதான் அந்தப் பரிசைத் தங்களுக்கு அனுப்பியிருக்கிறார் என்று குருவிகள் நினைக்கும்!'' என்று இருவரும் நினைத்தனர்.

பெட்டரின் பள்ளித் தோழனை ஹென்ரிக்குக்கு ஒரு தாத்தா. தாத்தாவின் பெயர் ஓலாப். அவர் பர்கெனை அடுத்த குன்றின் மேல் வசித்தார். அவர் ராணுவ அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர். அவருடைய மாளிகை பெரியது. செல்வச் செழிப்பு மிகுந்தது. ஆனாலும், அவர் எச்சில் கையால் காக்கை ஓட்ட மாட்டார். ஏழைகளுக்கு ஒரு காசு போட மாட்டார். தன் நிலத்தில் உழைக்கும் ஆட்களுக்கு எந்த உதவியும் செய்ய மாட்டார். மகாக் கருமி, அவர் தன் பேரனை ஹென்ரிக்குக்குக் கிறிஸ்துமஸ் பரிசுகள் வாங்குவதற்காகப் பர்கென் கடைத் தெருவுக்குப் போனார். இனிப்புக்களும், பழங்களும், பொம்மைகளும் நிறைய வாங்கிப் பரிசுப் பொட்டலங்களாகக் கட்டச் சொன்னார்.

பரிசுப் பொட்டலங்களைச் சறுக்கு வண்டியில் வைத்துக் கொண்டு ஓலாப் தம் மாளிகைக்குப் புறப்பட்டார். சறுக்கு வண்டியை ஒரு பெரிய குதிரை பனித்தரையின் மேல் இழுத்துச் சென்று கொண்டிருந்தது. சறுக்கு வண்டி பெட்டரின் வீட்டைக் கடந்து செல்லும் போது, முன் வாயிலில் இருந்த இரண்டு கம்பங்களும் தலை வணங்கிக் காற்றில் அசைவது போலத் தோன்றின.

இருளில் அந்தக் காட்சியைக் கண்ட ஓலாப் ஆச்சரியப்பட்டார். குதிரை மிரண்டது. திடீரென்று அது ஓலாப்பைக் கீழே தள்ளிவிட்டு, நாலு கால் பாய்ச்சலில் ஓடத் தொடங்கியது. ஓலாப் ஒருவாறு சமாளித்துக் கொண்டு ஓடும் வண்டியில் தாவி ஏறினார்.

மாளிகையை அடைந்ததும் பரிசுப் பொருள்களை வண்டியில் தேடினார். காணவில்லை. அது எப்படி மறைந்தது என்று அவருக்குத் தெரியவில்லை. அவ்வளவு பொருளும் நஷ்டமாகி விட்டதே என்று அவருக்குக் கோபமாக வந்தது. ''சே! எவனோ என்னுடைய பரிசுகளைத் திருடிவிட்டான். ஊரில் திருட்டு அதிகமாகிவிட்டது!'' என்று வாயில் வந்தபடி வைது கொண்டிருந்தார்.

அந்தப் பரிசுகள் எங்கேயும் போய் விடவில்லை. சரியாகப் பெட்டரின் வீட்டு முன் வாயிலில் விழுந்திருந்தன. குதிரை ஓடுவதையும், பொட்டலங்கள் கீழே விழுவதையும், பெட்டரும் அமாலியும் பார்த்துக் கொண்டிருந்தனர். பொட்டலங்களை எடுத்துக் கொண்டு அவர்கள் குன்றின் மேல் ஏறினர். ஓலாப்பின் மாளிகையை அடைந்து, கதவைத் தட்டினர்.

பிச்சைக்காரர்கள் பண்டிகை இனாம் கேட்க வந்திருக்கிறார்களோ என்று எண்ணிக் கொண்டே, ஓலாப் கதவைத் திறந்தார். ஒரு சிறுவனும், ஒரு சிறுமியும் நிற்பதைக் கண்டு, ''என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

''உங்கள் குதிரை மிரண்டு ஓடுவதைக் கண்டோம். எங்கள் வீட்டின் முன்பு இந்தப் பொட்டலங்கள் கிடந்தன. இவை உங்களுடையவையாக இருக்குமோ என நினைத்து, எடுத்து வந்தோம்,'' என்று சொல்லிப் பெட்டர் அவற்றைக் கொடுத்தான்.

அவற்றைப் பெற்றுக் கொண்ட ஓலாப், ''மிக்க நன்றி. நீங்கள் நல்ல பிள்ளைகள். இந்த நல்ல காரியத்திற்காகக் கிறிஸ்துமஸ் தாத்தா உங்களை மறக்க மாட்டார்,'' என்று கூறினார்.

''ஓ! கிறிஸ்துமஸ் தாத்தாவுக்குப் பல வேலைகள் இருக்கின்றன. எங்கள் இருவரையும் பற்றி நினைக்க அவருக்கு நேரம் ஏது...? ம்ம்ம்... உங்களுக்கு எங்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!'' என்று சொல்லி அண்ணனும், தங்கையும் விடைபெற்றனர்., தங்கள் வீட்டை நோக்கி நடந்தனர்.

மறுநாள் காலை.கிறிஸ்துமஸ்தினம். பெட்டரும், அமாலியும் கண் விழித்த உடனே, கிறிஸ்துமஸ் தாத்தா தங்கள் காலுறைகளுக்குள் ஏதாவது பரிசு வைத்திருக்கிறாரா என்று அவசர அவசரமாக நோக்கினர். அவை காலியாகவே இருந்தன. பரிசு ஒன்றும் காணப்படவில்லை.

''இந்த வருஷம் நம் ஊரில் பெரிய பஞ்சம். அதனால் கிறிஸ்துமஸ் தாத்தா

நிறைய பேருக்குப் பரிசுகளே கொடுக்கவில்லை,'' என்று அம்மா சொன்னாள். பண்டிகைக் காலத்தில் அந்த இரு குழந்தைகளுக்கும் பள்ளிக்கூடத்திலும் பரிசு கிடைக்கவில்லை; வீட்டிலும்பரிசுகிடைக்கவில்லை. அவர்களுக்குவருத்தம்நெஞ்சை அடைத்தது. அழுகை வந்தது. அம்மாவின் எதிரில் அழ வேண்டாம் என்பதற்காக அவர்கள் வீட்டிற்கு வெளியே சென்றனர்.

''குருவிகள் தங்கள் கிறிஸ்துமஸ் பரிசைக் கண்டுபிடித்து விட்டனவா என்று பார்க்கலாம். வா, அண்ணா!'' என்று அமாலி கூப்பிட்டாள்.

இருவரும் முன் வாயிலை அடைந்தனர். கதவைத் திறந்ததும், அவர்களுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது! அங்கு சில பரிசுப் பொட்டலங்கள் அவர்களுக்காகக் காத்திருந்தன!

''ஓ! கிறிஸ்துமஸ் தாத்தா நம்மை மறக்கவில்லை! அவசர அவசரமாக முன் வாயிலிலேயே நமக்குப் பரிசுகளை வைத்துவிட்டுப் போயிருக்கிறார்!'' என்று சந்தோஷமாகக் கூறினர். அவற்றை அள்ளிக் கொண்டு, ''அம்மா! அம்மா! கிறிஸ்துமஸ் தாத்தா பரிசுகள் அனுப்பியிருக்கிறார்!'' என்று கூவிக் கொண்டே அவர்கள் வீட்டுக்குள் ஓடினர்.

குன்றின் மேல் இருந்த மாளிகைக்குக் குழந்தைகள் கொண்டு போய்க் கொடுத்த அதே பொட்டலங்கள்தான் பரிசாகத் திரும்பி வந்துள்ளன என்று அம்மா உணர்ந்தாள்.

குழந்தைகளுக்கு இனிப்புக்களும், பழங்களும், பொம்மைகளும் கிறிஸ்துமஸ் பரிசாகக் கிடைத்தன.

குருவிகளுக்குத் தானியக் கதிர்கள் கிறிஸ்துமஸ் பரிசாகக் கிடைத்தன.

பிறகு என்ன? கொண்டாட்டம்! கொண்டாட்டம்! கொண்டாட்டம் தான்!

துளியும் வெள்ளமும்

வே. சபாநாயகம்



"அப்பா! நாளையிலிருந்து அந்தப் பள்ளிக்கூடத்துக்கு நான் போகப் போறதில்லேப்பா! ராஜினாமா செய்துடப் போறேன்!"

"ஏம்மா! நேத்துதான் வேலையிலே சேர்ந்தே. அதுக்குள்ளே என்ன ஆச்சு? ஆசிரியர் தொழில் அப்படி ஒண்ணும் அகௌரவமானதில்லியே!"

"போங்கப்பா! அகௌரவம் ஒண்ணுமில்லேதான். ஆனால், இந்தக் குட்டிப் பிசாசுகளை என்னாலே சமாளிக்க முடியாது போலிருக்கு! அதான்!"

அப்பா 'கடகட' வென நகைத்தார். "இதுதான் உன்பிரச்சினையா? ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும். குழந்தைகள் தானே? சமாளிக்கத் திறமை வேணும்தான்!"

"குழந்தைகளா? அத்தனையும் குரங்குகள்! உள்ளே நுழைந்ததும் குபீல்னு எல்லாம் மேலே விழுந்து, 'குட்மார்னிங், குட்மார்னிங்'னு, பிடுங்காத குறைதான்! எரிச்சலா இருக்கு!"

"அட என்னம்மா! நல்ல பழக்கம் தானே! காலையிலே வணக்கம் சொல்கிற அந்தக் குழந்தைகளின் நல்ல பழக்கத்தை நீ ஊக்குவிக்க வேண்டாமோ?"

"நல்ல பழக்கம்தான்! அதுக்குன்னு மேலே விழுந்து புரளணுமா? அதோட விட்டாப் பரவாயில்லேயே—ஒண்ணு புடவையைப் பிடிச்சு இழுக்குது; ஒண்ணு கைப்பையைப் பிடிச்சு இழுக்குது; ஒண்ணு கையைப் பிராண்டுது; ஒண்ணு காலை மிதிக்குது!" என்று அலுத்துக் கொண்டாள் மீரா.

"சே சே! இப்படி வெறுப்புக் காட்டக் கூடாது அம்மா! குழந்தைகள் எல்லாம் பூக்கள் மாதிரி! அவர்கள் மேலே வந்து விழுந்தா பூக்களை ஆண்டவன் உன்மீது சொரிகிறார்னு அர்த்தம். வெறுப்பு ஆசிரியத்தொழிலுக்கே எதிரியம்மா! 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே'ன்னு நீ கேள்விப்பட்டதில்லையா? குழந்தைகள் அப்படித்தான் இருக்கும். அவங்களுக்கு ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நீதான் சொல்லிக் கொடுக்கணும் அவங்களுக்கு என்ன தெரியும்? சுத்தமான சிலேட் அவங்க! நீதான் அழகான எழுத்துக்களை அதுலே எழுதணும்!"

"ரொம்பத்தான் வேதாந்தம் பேசறீங்கப்பா! நீங்க இதுங்களைக் கட்டி

மேய்ச்சுப் பார்த்தால் தெரியும்! நாள் முழுதும் நரக வேதனைதான்! கேள்வி கேட்டாப்போதும்—'யாராவது ஒருத்தர் மட்டும் சொல்லுங்கன்னு' கரடியாக் கத்தினாலும், 'நான் மிஸ்', நான் மிஸ்'— என்று எல்லாம் 'காச் மூச்' சென்று, பொறியிலே மாட்டிக்கிட்ட ஏகப்பட்ட எலிங்கமாதிரி கத்துது! சீ சீ! சகிக்கவே இல்லே! எனக்குச் சரிப் பட்டு வராது.

"சேசே! இப்படிக் கசந்து கொள்ளக்கூடாதம்மா! பிஞ்சுக் குழந்தைகள் தானே! 'நர்சரி'ன்னு அப்படித்தான் இருக்கும்!. ஆசிரியத் தொழில் புனிதமானது! அதை இப்படி வெறுக்காதே! பெண்ணுக்குத்தான் சகிப்புத்தன்மையும், தாய்மை உள்ளமும், கருணையும், பச்சாத்தாபமும், பொறுமையும் இருக்கும்! சம்பளமா பெரிசு? சேவை ஒரு பெரிய மகிழ்ச்சி இல்லையா?"

"பொறுமைதானே! வேண்டியது தான். இன்னிக்கு ஒரு நிகழ்ச்சி சொல்லட்டுமா? என் கிளாசிலே 'ரமேஷ்'னு ஒரு வாண்டு இருக்குது; அது என்ன பண்ணிச்சு தெரியுமா? 'உம்'முனு மூஞ்சியை வச்சிக்கிட்டு எந்த வேலையுமே செய்யாமே உட்கார்ந்திருந்தது. 'ஏண்டா இப்படி இஞ்சி தின்ன குரங்குமாதிரி இருக்கே? மத்தவங்களெல்லாம் சிலேட்டிலே எழுதுறாங்களே—நீ மட்டும் ஏன் எழுதலே!'ன்னு கேட்டேன். உடனே அவன், 'நீதான் குரங்கு! உவ்வவ்வே...!'ன்னு அழகு காட்டுறான்.' என்ன சொன்னே? நான் தான் குரங்கா'ன்னு காதைப் பிடிச்சேன். 'பளிச்' சுன்னு என் கையைத் தட்டிவிட்டு, 'குரங்கு மூஞ்சி மிஸ்! உன்னை எனக்குப் பிடிக்கல்லலே போ! பழைய வசந்தி மிஸ்கிட்டேதான் படிப்பேன். நீ போ! இனிமே வராதே!' என்று என் கையிலே 'நறுக்'குன்னு கிள்ளிப்புட்டான். இதப்பாருங்க நகம் கூடப் பதிஞ்சிருக்கு!" என்று வலது கை மணிக்கட்டுக்கு அருகில் சின்னப் பிறையாக இருந்த ஒரு முத்திரையை அப்பாவிடம் காட்டினாள் மீரா.

"அடடா! அவன்தான் சாமிநாதன்! தந்தைக்கே பாடம் சொன்ன தகப்பன் சாமி! அந்தக் குழந்தைதான் உனக்கு குரு! இப்போ தெரியுதா? குழந்தை முகம் பார்க்கிற கண்ணாடி மாதிரி! நீ சிரிச்சா அது சிரிக்கும்; நீ வெறுப்புக் காட்டினா அதுவும் வெறுப்புக் காட்டும். குழந்தைகளை அன்பா நடத்தணும். குழந்தைகள் கிட்டே ஒரு துளி அன்பைக்காட்டு; அது எப்படி வெள்ளமாத் திருப்பிக் கொட்டுது பார் என்று ஒரு அறிவாளி சொல்லி இருக்கார். இனிமே நீ அவர்களிடம் வெறுப்புக் காட்டாதே! பொறுமையா அன்பு காட்டி அணைத்துக் கொள்! போய் இரண்டு நாளைக்குள்ளேயே அலுத்துக் கொள்றியே! குழந்தைகள் உணர்ச்சியற்ற எந்திரங்கள் இல்லை. அவர்கள் உயிருள்ள பூக்கள். அவர்களது அருமையை உணர்ந்து நடத்து" என்று அப்பா உபதேசம் செய்தார்.


"போங்கப்பா நீங்களும் உங்க புத்திமதியும்! கொஞ்ச நாள் பார்ப்பேன்! அப்புறமும் ஒத்து வரலேன்னு விட்டுடப்போறேன்" என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள் மீரா.

பிறகு மீராவிடமிருந்து எந்த விதமான புகாரும் இல்லாதிருந்ததில் அப்பா மகிழ்ச்சியடைந்தார். ஒழுங்காகப்பள்ளிக்குப்போய்வந்துகொண்டிருந்தாள். குழந்தைகளது பயிற்சி ஏடுகளைச் சுமந்து வந்து திருத்துவதும் தேர்ச்சி அட்டைகளைப் பூர்த்தி செய்வதும், பாடபோதனைக்குத் தேவையான உபகரணங்களைத் தயார் செய்வதுமாய் மும்முரமாக இருந்தாள். 'சரி, பிடித்துப் போய் விட்டது போலிருக்கிறது' என்று அப்பா நிம்மதி அடைந்த போது, ஒருநாள் காலை அவள் வழக்கமாகப் பள்ளிக்குச் செல்லும் பரபரப்பின்றிச் சோர்வாகப் படுத்திருந்ததைப் பார்த்துத் திகைப்படைந்தார். 'பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டுவிட்டதோ' என்று கவலைப்பட்டவராக, "ஏம்மா! பள்ளிக்கூடம் போகலையா? பழையபடி அலுப்பா?" என்று கேட்டார்.

"இல்லேப்பா! இன்னிக்கு உடம்பு சரியில்லே! ஒரே தலைவலியும் குளிருமாய் உடம்பை அனத்துது! விடுப்புமனு அனுப்பிவிட்டேன்!" என்றாள் மீரா.

"அதுதானே பார்த்தேன்! எங்கே பழையபடியும், 'குரங்குகள், குட்டிப் பிசாசு'னு ஆரம்பிச்சுடப்போறியோன்னு பயந்துட்டேன்" என்று சிரித்தார் அப்பா. "இப்போதுஎப்படி? பிடிச்சிருக்கில்லே வேலை?"

"ரொம்பத்தான் குளிர்ந்து போகாதீங்கப்பா! இன்னும் நான் தீர்மான



முடிவுக்கு வரலை. நீங்க சொன்னீங்களேன்னு ஒரு சவால் மாதிரி அதுகள்கிட்டே போராடிக்கிட்டிருக்கேன். மனசு ஒண்ணும் அதிலே லயிச்சுப் போயிடலே. இன்னும் ஒரு மாசம் பாத்துட்டு, ஒத்து வரலேன்னு விட்டு விடுவேன்'' என்று மிரட்டினாள் மீரா.

''என்னம்மா மறுபடியும்? இதற்குள் உனக்கு சகிப்புத் தன்மையும் பொறுமையும் வந்திருக்கணுமே! பிள்ளைகளோட இன்னமும் உனக்கு இணக்கம் வரவில்லையா, என்ன?''


''அதென்னமோ உண்மைதான்! குரங்குக்குட்டிகளா இருந்தது இப்போ கொஞ்சம் கொஞ்சமா அடங்கிவருது! இப்போ அவ்வளவு அட்டூழியம் இல்லே! மெதுமெதுவாக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்துட்டேன்! நீங்க சொன்ன மாதிரி ரொம்பப் பொறுமை வேணும்தான்!''

''அவ்வளவுதான்! இன்னும் அன்பா நடத்திப்பார். எல்லாம் மான் குட்டிகளா உன்னைச் சுத்திவரும். அது சரி! அந்த ரமேஷ்— உன்னைக் 'குரங்கு மூஞ்சி'ன்னுனே, அவன் எப்படி இருக்கான்?''

''அந்த வாண்டுதானே? இப்ப கொஞ்சம் பரவாயில்லே! முன்னே மாதிரி முரட்டுத்தனம் இல்லே! அவனைக் கொஞ்சம் குஷிப்படுத்தி, நல்ல வார்த்தை பேசி, மெதுவா எங்கிட்ட ஒரு பிரியம் வர்ற மாதிரி பண்ணிட்டேன். ஆனாலும் மத்தக் குழந்தைகளை விட அவன் வாலுதான்! கொஞ்சம், அடக்கிறது சிரமந்தான். இன்னிக்கு நான் போகலியா— அடுத்த வகுப்பு 'மிஸ்' எப்படி அவனைச் சமாளிக்கப் போறாங்களோ?''

''சரி சரி!'' நீ ஓய்வெடுத்துக்க. இதுவே உங்கிட்ட ஒரு பெரிய மாற்றம். நாம எப்படி நடந்துக்கிறோமோ, அப்படியே குழந்தைகள் திருப்பிச் செஞ்சுடும்! அதனாலே அன்பா நடத்து அவங்களை'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார் அப்பா.

மாலை சற்று உடல் நலம் தேறிற்று. இரவு 8மணிஇருக்கும். வெளியே யாரோ அழைக்கும் குரல் கேட்டது. 'மிஸ், மிஸ்!' என்று ஒரு சின்னக் குரலும் கூடவே கேட்கவே மீரா பரபரப்புடன் வெளியே வந்தாள். வாசல் விளக்கைப் போட்டதும் யாரோ நிற்பதைப் பார்த்து, ''யாருங்க? என்ன வேணும்?'' என்று கேட்டாள். ''மீரா மிஸ் வீடு இதுதானுங்களே!'' என்ற குரல் கேட்டது. ''ஆமாம்! உள்ளே வாங்க'' என்றாள். ''அதோ பாருடா உங்க மிஸ்!'' என்று பெண் குரலும் 'மிஸ் மிஸ்' என்று பிஞ்சுக் குரலும் கேட்கவே, வியப்புடன் முன்னே வந்



''ஏண்டா! அவனோட டிபன் பாக்ஸை நீ திறந்து பாதியைத் தின்னிட்டியே!''

''பகிர்ந்து உண்பது எப்படின்னு அவனுக்குச் சொல்லித் தர முயற்சி செய்தேன்! அவ்வளவுதான்

தாள் மீரா.

இளம் தம்பதியர் இருவரும் ஒரு வாண்டுப் பயலும் படியேறி வந்தார்கள். பார்த்தால்—ரமேஷ் வாலுப் பையன்! ''அடடே! நீ எங்கேடா வந்தே! வாங்க வாங்க!'' என்று வியப்புடன் அழைத்தபடி உள்ளே வந்தாள். வெளியே குரல் கேட்டு அப்பாவும் அங்கு வந்தார். ''யாரும்மா அது?'' என்று கேட்டார்.

''நான் சொல்லுவனே அப்பா ரமேஷ்னு என் கிளாஸ் பையன் ஒருத்தன், அவனும் அவனோடே அப்பா அம்மாவும்'' என்று அவர்களை அறிமுகப்படுத்தியபடியே உள்ளே அழைத்து வந்தாள்.

''வாங்கவாங்க!'' என்றுவரவேற்ற அப்பா, ''நீ சொன்ன சுட்டிப் பையன் ரமேஷ் இவன் தானா?'' என்றார்.

''உங்களுக்கு உடம்பு எப்படி இருக்கு மிஸ்? உங்களுக்கு உடம்பு சரியில்லாம ஸ்கூலுக்கு வரலேன்னதும் உடனே பார்க்கணும்னு அழுது அடம் பிடிச்சுட்டான் மிஸ்!'' என்றாள் சிறுவனின் தாய்.

''அதையேன் கேக்கறீங்க! ஸ்கூல்லே வேறே உங்களுக்குப் பதிலா வந்த மிஸ்ஸைப் பிடுங்கி எடுத்துட்டான். மதியம்சாப்பாடு இவகொண்டு போனப்போ, உங்களை உடனே பார்க்கணும்னு அடம்புடிச்சிருக்கான். 'சாயங்காலம் ஆகட்டும், ஸ்கூல் முடிஞ்சு போகலாம்'னு சமாதானப் படுத்தியும் கேட்கலே! எப்படியோ சமாளிச்சு — நான் ஆபீஸிலிருந்து வந்ததும் வராததுமாய் விடாப்பிடியாக உங்களைப் பார்க்க அழைச்சுக்கிட்டு வந்துட்டான்'' என்றார் ரமேஷின் அப்பா.

''அடடே ரமேஷ்! அப்படியா செஞ்சே?'' என்று கண் அகலக் கேட்டாள் மீரா. 'ஓ'வென்று அழுதபடி ஓடிவந்து அவளது கால்களைக் கட்டிக் கொண்டான் ரமேஷ்.

''அழாதேடா! அழாதே! எனக்கு என்ன இப்போ? நான் நல்லாத்தான் இருக்கேன்; அழாதே!'' என்று குரல் தழுதழுக்க அவனை அணைத்துக் கொண்டாள் மீரா. கண்களில் நீர் துளிர்த்தது.

''மிஸ், நீங்க வராமே நான் இனிமே ஸ்கூலுக்குப் போமாட்டேன்!'' என்று தேம்பினான் ரமேஷ்!

''ரமேஷ், எனக்குக் காலையிலே யிருந்து உடம்பு சரியில்லாமே இருந்தது. இப்போ உன்னைப் பார்த்ததும் சரியாப் போச்சு! நாளைக்கு நான் வந்துடுவேன். கவலைப்படாதே!'' என்று அந்த அன்புப் பிணைப்பில் நெகிழ்ந்து போய்ச் சொன்னாள்.

''பார்த்தியாம்மா — நான் சொல்லலே! குழந்தைகள் பளிங்குகள் மாதிரி, உன்னை அப்படியே பிரதிபலிப்பவை. உனக்கு உடம்பு சரியில்லேன்னதும் எப்படித் தவிச்சுட்டான் பாரு இந்தக் குழந்தை!'' என்றார் அப்பா.

''இந்தப் பழத்தை 'மிஸ்'கிட்டே கொடுடா ரமேஷ்!'' என்று அவனது தாய் ஒருபையை அவனிடம் நீட்டினாள்.

''அடடே! இதெல்லாம் எதுக்குங்க!'' என்று மறுத்தாள் மீரா.


''ஊகூம்! உங்களுக்குத்தான் உடம்பு சரியில்லியே! இந்த ஆரஞ்சை சாப்பிடுங்க!'' என்று பையிலிருந்த ஆரஞ்சுகளை எடுத்து அவள் கையில் திணித்தான் ரமேஷ்.

மீராவுக்கு உடல் சிலிர்த்தது. 'அடடா! இந்த அன்புக்கு நான் எப்படி அருகதை? இவனையா தொல்லையாக நினைத்தேன்!'' என்று உருகினாள் மீரா.

''மிஸ்ஸுக்கு உடம்பு சரியில்லே! ஆரஞ்சு வாங்கிட்டு வா! போய்ப் பார்க்கணும்னு அடம்புடிச்சிட்டான் மிஸ்! உங்ககிட்டே அவனுக்கு அவ்வளவு பிரியம்!'' என்றாள் தாய்.

கண்களில் நீர் வழிய ரமேஷை மீண்டும் அணைத்துக் கொண்டாள் மீரா. அப்பா சொன்னது உண்மைதான்! 'துளி அன்பு எப்படி வெள்ளமாகப் பெருக முடியும்' என்பதை அவளால் இப்போது பார்க்க முடிந்தது!

சிந்தாவனம்



எந்தத் திசை?

நீங்கள் மேற்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறீர்கள். இடது பக்கம் திரும்பி, பிறகு வலது பக்கம் திரும்பி, பிறகு இடது பக்கம் திரும்பி, பிறகு இடது பக்கம் திரும்பிச் செல்கிறீர்கள். இப்போது எந்தத் திசையில் நீங்கள் நடந்து கொண்டிருப்பீர்கள்?

விடை: கிழக்கு.

— ந. ஆனந்தகுமார், சென்னை 112.



சி. என். ஏ.

அறிஞர் அண்ணாவை ஆரம்ப காலத்தில் சி.என்.ஏ. (C.N.A.) என்று குறிப்பிடுவார்களாம். கையெழுத்துப் போடும் போதும் அவர் சி.என். அண்ணாதுரை என்றுதான் போடுவாராம். C.N. என்பதைத் தமிழில் எப்படி எழுதுவது? நான் பலரிடம் கேட்டுப் பார்த்தேன். சரியான பதில் கிடைக்கவில்லை. சென்ற மாதம் கண்டுபிடித்து விட்டேன்! மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலுள்ள ஒரு சலவைக் கல்லில் அவர் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. C.N. அண்ணாதுரை என்பதற்குப் பதிலாக கா.ந. அண்ணாதுரை என்று அதில் இருக்கிறது. 'கா' என்ற எழுத்து காஞ்சீபுரம் (Conjeevaram) என்ற அவரது ஊர்ப் பெயரையும் 'ந' என்ற எழுத்து, அவருடைய தந்தையாராகிய நடேசரின் பெயரையும் குறிக்கின்றன.

— விஜி (397), மதுரை. 2.

விலை என்ன?



நான் இரண்டு பெரிய நோட்டுகளும், அவற்றைவிடச் சற்று சிறிய இரண்டு நோட்டுகளும் வாங்கி


னேன். மொத்தம் நான்கு நோட்டுகள். பெரிய நோட்டு ஒன்றின் விலைக்கும் சிறிய நோட்டு ஒன்றின் விலைக்கும் உள்ள வித்தியாசம் ஒரு ரூபாய். நான்கு நோட்டுகளுக்கும் நான் கொடுத்த ரூபாய் 36. அப்படியானால் பெரிய நோட்டு ஒன்றின் விலை என்ன? சிறிய நோட்டு ஒன்றின் விலை என்ன?

விடை:

1. பெரிய நோட்டின் விலை ரூ. 9.50.

சிறிய நோட்டின் விலை ரூ. 8.50.

— ச.சுரேஸ் (11577)



ஆளைப் பார்த்து...

மக்கள் நடமாட்டமில்லாத ஒரு தெருவில் மாலை 6 மணிக்கு ராமு சென்று கொண்டிருந்தான். அந்தப் பகுதியில் திருடர் பயம் அதிகமாதலால், முன் ஜாக்கிரதையாகத் தன் மோதிரத்தையும், கைக் கடிகாரத்தையும் கழற்றிச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு நடந்தான்.

அப்போது அவ்வழியாக ஆபீசர் போல் உடை உடுத்திக் கொண்டு ஒருவன் எதிரில் வந்தான். "அவன் ராமுவைப் பார்த்து "டைம் என்ன?" என்று கேட்டான்.

உடனே ராமு பைக்குள்ளிருந்த கடிகாரத்தை எடுத்துப் பார்த்து "6—10" என்றான். உடனே, எதிரில் வந்தவன், கடிகாரத்தைப் பறித்துக் கொண்டு ஓடிவிட்டான். எவ்வளவு கதறியும் யாரும் உதவிக்கு வரவில்லை.

"ஆளைப் பார்த்து மோசம் போனேனே!" என்று தலையில் அடித்துக் கொண்டான் ராமு.

எஸ்.சந்திரசேகர் (1981),
எருமைக்குளம்.




சிம்மாசனம்

அரசர் அமரும் ஆசனத்தை 'சிம்மாசனம்' என்று கூறுகிறோம். அது ஏன் தெரியுமா? மகாவிஷ்ணு நரசிம்ம அவதாரம் எடுத்த போது இரண்ய கசிபுவைக் கொன்று, அவனுடைய ஆசனத்தில் அமர்ந்து பிரகலாதனுக்கு அருள் புரிந்தார். அதுவரை அந்த ஆசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிந்த இரண்யனின் கெட்ட குணங்கள் இனி அதில் அமர்ந்து ஆட்சி செய்யப் போகும் பிரகலாதனுக்குச் சேரக் கூடாது என்று எண்ணியே, நரசிம்மமே அந்த ஆசனத்தைத் தூய்மை செய்தது. எனவே, நரசிம்மம் அமர்ந்த ஆசனம் சிம்மாசனம் ஆயிற்று.

—த. அருள்சிவபாலன் (47),
செங்கல்பட்டு

மன்னர் யார்?

1. மகனைத் தேர்க்காலில் இட்ட மன்னன் யார்?
2. தன் உடலின் தசையை அரிந்து கொடுத்த மன்னன் யார்?
3. யானைக் காலால் இடற ஆணை



யிட்ட மன்னன் யார்?

4. முதியோர் வழக்கைத் தீர்த்து வைத்த மன்னன் யார்?

விடை:

1. மனுநீதிச் சோழன்,
2. சிபிச் சக்கரவர்த்தி
3. கிள்ளி வளவன்
4. கரிகாலன்.

— ஜே. காத்திகேயன் (18435)
திருத்துறைப்பூண்டி.



அரியும் சிவனும்

அரியும் சிவனும் ஒண்ணு
அறியாதவர் வாயிலே மண்ணு

என்பார்கள். என் தாத்தா சிறு பிள்ளையாக இருந்த போது, அவருடைய அப்பா அதிகாலையிலே எழுப்பி விடுவாராம். எழுந்ததும், ஒரு பாட்டைப் படிக்கச் சொல்வாராம்.


பொழுதெப்ப விடியும்?
பூ எப்ப மலரும்?
சிவன் எப்ப வருவார்?
வரம் எப்ப தருவார்?

அதேபோல், இரவு படுக்கப் போகுமுன் ஒரு பாட்டைப் படிப்பாராம் என் தாத்தா:

அரியின்னு பேர் சொல்லி
அச்சுதான்னு பாய் விரிச்சு
கிருஷ்ணான்னு படுத்தவர்க்கு
கேடில்லை ஒருநாளும்
கோவிந்தான்னு படுத்தவர்க்கு
குறைவில்லை ஒருநாளும்.

காலையில் சிவனைப் பற்றி, இரவிலே கிருஷ்ணனைப் பற்றிப் பாடுவது 'அரியும் சிவனும் ஒண்ணு' என்பதைக் காட்டுகிறதல்லவா?


— ஏ. ஆர். ஆனந்த் (421),
காரைக்குடி.



சைக்கிளில் செல்லும் போது...

என் நண்பர்களில் சிலர் சைக்கிள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் பள்ளிக்குச் சைக்கிளில் செல்லும் போது ஒருவர் பக்கத்தில் ஒருவராய்ச் சென்று சாலையை அடைத்துக் கொள்ளுகிறார்கள். ஒருவர் பின் ஒருவராகச் செல்வதுதானே நல்லது! அவர்களில் ஒருவன் மோட்டார் வண்டியைப் பிடித்துக் கொண்டு செல்வான். அது எவ்வளவு ஆபத்தானது என்று நான் சொல்லியும் அவன் கேட்கவில்லை. சாலை விதிகளைப் பின்பற்றினால் சங்கடமே இல்லை.

— ஏ. பிரபு (641), பரோடா.



செங்கடல்

கடல் என்றாலே நீல நிறத்தில்தான் அது இருக்கும் என்று நினைக்கிறோம். ஆனால், ஆப்பிரிக்காக் கண்டத்திற்கும் அரேபியா நாட்டிற்கும் இடையே உள்ள கடல், சிவப்பு நிறத்தில் இருக்கிறது. இதற்குக் காரணம், சிவப்பு நிறமுள்ள ஆல்கா என்ற ஒரு வகைத் தாவரம் இக்கடலில் ஏராளமாக இருப்பதுதான் என்று நான் சமீபத்தில் ஒரு புத்தகத்தில் படித்தேன்.

— ஏ. எல். பழநியப்பன் (3035),
சென்னை — 40.



யார் எதை எழுதினார்?

எங்களுக்காக எழுதும் எழுத்தாளர்களின் பெயர்களையும், அவர்கள் எழுதிய புத்தகங்களையும் கீழே காணலாம். ஆனால், அவரவர் பெயருக்கு எதிராக அவர்கள் எழுதிய புத்தகங்கள் இல்லை. மாற்றிக் கொடுத்திருக்கிறேன். கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்:

1. அகிலன் — பறக்கும் பாப்பா,
2. ஆர். வி. — மலரும் உள்ளம்,
3. நெ. சி. தெய்வசிகாமணி — கண்ணான கண்ணன்,
4. கல்வி கோபாலகிருஷ்ணன் — நல்ல நாடகங்கள்,
5. அழ. வள்ளியப்பா — லீடர் மணி,
6. தணிகை உலகநாதன் — பரமன் அருள்.

விடை: 1 — 3, 2 — 5, 3 — 6, 4 — 1, 5 — 2, 6 — 4.

— ஆர். ராஜா (1006),
சென்னை — 17.



சாப்பாட்டு ராமனின் குறள்

சாப்பாட்டு ராமன், தன் நண்பன் குமரனிடம் கூறிய குறள் பாக்கள்:

* இட்டிலியும் சட்டினியும் இன்பச் சிற்றுண்டியாம்
கெட்டியானகாப்பிசேர்ந்தக் கால்.

* கூட்டு பொரியல் குழம்பு ரசம் தயிர்
கூட்டு மதிய உணவில்.

* அப்பளம் பச்சடி ஆவக்காய் ஊறுகாய்
தப்பாமல் உண்பாய் தினமும்.

* வடையுடன் பாயசம் மாபலா வாழை
படைத்திடு நண்பக லுக்கு.

— என். செல்வகுரமன் (4858),
பண்ருட்டி.



டாக்டர். கே. எஸ். கிருஷ்ணன்

தோற்றம்: 4.12.1898. மறைவு: 14.6.1961



டாக்டர் கே.எஸ். கிருஷ்ணன்

நம் தேசத்துக்குப் பெருமை தேடித் தந்த விஞ்ஞானிகளில் இவரும் ஒருவராவார். ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவிலுள்ள வத்திராயிருப்பு என்ற ஊரில் பிறந்த இவர், கல்கத்தா பல்கலைக் கழகவிஞ்ஞானக்கல்லூரியில்பயின்று பட்டம் பெற்றார்.

விஞ்ஞானத் துறையில் இவர், படிகங்களின் ஒளி, காந்தப் பண்புகள் ஆகியவை பற்றி ஆராய்ந்து பல உண்மைகளை வெளியிட்டார். இவை தவிர, ஒளிச் சிதறல், எக்ஸ்—கதிர்கள், எலெக்ட்ரான்கள் முதலிய பலவற்றைப் பற்றியும் ஆராய்ச்சிகள் நடத்தினார். இவரது ஆராய்ச்சிகளை இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் இருந்த விஞ்ஞானிகள் பெரிதும் பாராட்டினார்கள்.

1940 ஆம் ஆண்டு லண்டன் ராயல் கழகம் இவரைத் தனது உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டது. ஆங்கில அரசு 'சர்' பட்டம் வழங்கியது. இந்திய அரசு 'பத்மபூஷண்' விருது அளித்தது.

தமிழிலும் சமஸ்கிருதத்திலும் நல்ல புலமை உடைய இவர், விஞ்ஞானக் கருத்துக்களை எளிய நடையில் எழுதியும் விளக்கியும் வந்தார். மனிதனை உயர்த்தவும் மனிதனுக்கு உதவவுமே விஞ்ஞானம் பயன்பட வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்.



ஆறுமுக நாவலர்

இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்த இவர், தமது 19 வது வயதிலேயே தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்றார். இவரது திறமையை உணர்ந்த பார்சிவல் பாதிரியார், அவர் நடத்தி வந்த பள்ளியிலேஇவரை ஆசிரியராக நியமித்தார்., அத்துடன், அந்தப் பாதிரியார் இவரிடமே தமிழும் கற்றுக் கொண்டார்.

பாதிரியார் விருப்பப்படி இவர் பைபிளை நல்லதமிழில்மொழிபெயர்த்தார். பைபிளை மொழி பெயர்த்த போது, 'நாமும் நமது சமயத்தை நன்கு உணர வேண்டும். சமயத் தொண்டு புரிய வேண்டும்' என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. அதன் விளைவாக, இவர் சமயச் சொற்பொழிவுகள் செய்தார்; இரவிலே மாணவர்களுக்குஇலவசமாகச்சமயக் கருத்துக்களை எடுத்துரைத்தார்.

இவர் பல நூல்களை எழுதினார். ஏடுகளை ஆராய்ந்து அச்சிட்டார். பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், போன்ற பல நூல்களுடன், சிறுவருக்கான பால பாடங்களையும் எழுதி வெளியிட்டார்.

இவருடைய 27 வது வயதில், திருவாவடுதுறை ஆதீனம் இவரது பேச்சுத் திறமையைப் பாராட்டி, 'நாவலர்' என்ற சிறப்புப் பட்டத்தை அளித்தது.



"ஏலேலோ ஐலசா
என் படகு ஐலசா"

என்று பாடிக் கொண்டு நான்கைந்து பையன்கள் எதையோ இழுக்க முயன்று கொண்டிருந்தனர். அந்த வழியில் தனிஉலா வந்த திப்பிலி ராஜா உதவி செய்ய அருகில் சென்றார். அங்கே படகு இல்லை! ஒரு வீட்டைச் சுற்றிக் கயிற்றைக் கட்டிப் பையன்கள் இழுத்துக் கொண்டிருந்தனர். அது படகு வீடு போலும் என எண்ணிய ராஜா

தம் பிடிடா ஐலசா
தாவி இழுடா ஐலசா

என்று பாடி, எம்பிக் குதித்து உற்சாகமூட்டினார். பையன்கள் 'தம்' பிடித்துத் தாவி இழுத்தனர். 'படார்' என்று கயிறு அறுந்து விட்டது. இழுத்த பையன்கள் 'தடார்'— என்று ராஜாவின் காலடியில் விழுந்தனர். மிகவும் பணிவான பையன்கள் என நினைத்த ராஜா, கையை உயர்த்தி அவர்களை வாழ்த்திவிட்டு,

"ஏன் இப்படி வீட்டை இழுக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"நாளைக்குத் தேர்வு"— என்று பையன்கள் பதில் கூறினர்.

"கயிறு இழுக்கும் தேர்வா?"

"இல்லை ராஜா! கணக்குத் தேர்வுதான்!"

"வீட்டுக்கு வேலி போடும் கணக்கோ?" என்று ராஜா கேள்வியை இழுத்தார். அப்பொழுது எதிரே இருந்த மைதானத்திலிருந்த ஒலி பெருக்கியிலிருந்து "எங்கே நிம்மதி" — என்ற பாடல் அலறத் தொடங்கியது. அந்த ஒலி வெள்ளத்தில் பையன்களின் பேச்சு முழுகி விட்டது.

"இந்த அலறல் அதிகமாக இருப்பதால் இங்கே பாடம் படிக்க முடியவில்லை. எனவே வீட்டை இழுத்துக் கொண்டு காட்டுக்குப் போகிறோம்" என்று பையன்கள் சைகை மூலம் சொல்ல முயன்றனர்.

"என்ன இது முட்டாள்தனம்! வீட்டை வெறுந் தரையில் இழுக்க முடியுமா? வீட்டின் படிகளைக் கொஞ்சம் தூக்கிக் கீழே சக்கரங்களைக் கட்ட வேண்டும். அந்தச் சக்கரங்களின் கீழே வாழைப்பழத் தோல்களைப் போட்டு, வீட்டைத் தள்ளினால் அது சுலபமாகச் சறுக்கியபடி நகருமே" — என்று ராஜாவும் சைகைகள் காட்டி விளக்க முயன்றார். அது அபிநயம் போலிருந்தது. பையன்களும் பதில் அபிநயம் பிடித்தனர். ஒலிபெருக்கியின் அல

றல் அதிகமாகிக் காதைப் பிளந்தது. பையன்கள் களைத்துப் போய் உட்கார்ந்து விட்டனர். அரண்மனை திரும்பியதும் சக்கரங்களையும் பழத் தோல்களையும் அனுப்ப வேண்டும். எனச் சிந்தித்துக் கொண்டே, தலை குனிந்தபடி ராஜா நடந்தார்.

ஒரு தெருமுனையில் வேகமாகத் திரும்பிய ஒருவன், 'திடும்' — என ராஜாவின் மேல் மோதி விழுந்தான்.

"என்னப்பா இது? என் மேல் மோதியதற்கே இப்படி விழுந்து விட்டாய். வண்டி கிண்டியில் மோதியிருந்தால் ஆஸ்பத்திரிக்குப் போயிருப்பாய்" என்று சொல்லியபடியே ராஜா அவனைத் தூக்கி விட்டார். அவன் உடம்பெல்லாம் பாண்டேஜ் கட்டுகள் இருப்பதைப் பார்த்த ராஜா திகைத்தார்.

"நான் ஆஸ்பத்திரியில் இருந்து தான் ஓடி வருகிறேன்" — என அந்த நோயாளி அழுதான்.

"தவறு. பாண்டேஜைத் திருப்பிக் கொடுக்காமல் ஓடி வந்தது தவறு" என்று அவனைக் கடிந்து கொண்ட ராஜா, பக்கத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு கழுதையின் மேல் அவனை ஏற்றி மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றார்.

மருத்துவ மனையை அவர்கள் நெருங்க, நெருங்க "டணங்—டங்—மணங்—மங்" என்ற சத்தம் மண்டையைப் பிளந்தது.

"இந்தச் சத்தம் பொறுக்க முடியாமல்தான் நான் ஓடி வந்து விட்டேன்!" — என நோயாளி புலம்பினான்.

"எந்த மடையன் இந்த ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் டணங்—மணங் என்று தட்டிக் கொண்டிருப்பது?" என்று கேட்க நினைத்தார் ராஜா. ஆனால் சத்தம் வந்த மாளிகையின் பெயர்ப் பலகையைப் பார்த்ததும் பேசாமல் தலை குனிந்து கொண்டார். ஏனென்றால் அந்தப் பலகையில் "டிப்பிலி ராஜா அண்டா குண்டா பணிமனை" — என எழுதப்பட்டிருந்தது.

ஒரு வழியாக நோயாளியைச் சமாதானப்படுத்திய ராஜா, அவனை மருத்துவ மனைக்குள் அழைத்துச் சென்று படுக்கையில் படுக்க வைத்தார். அந்த அறை புழுக்கமாக இருக்கவே, ராஜா ஜன்னலைத் திறந்தார். எதிர் மாளிகை வாசலில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கியிலிருந்து வந்த

"தூக்கம் உன் கண்களைத்
தழுவட்டுமே
அமைதிஉன் நெஞ்சில் நிலவட்டுமே"

என்ற பாட்டலறல் அவர் காதைப் பிளந்தது. மாளிகை மாடத்தில் "டிப்பிலி ராஜா திருமண மாளிகை" எனப் பொறிக்கப்பட்டிருந்த சலவைக் கற்பலகை 'பளிச்'சென மின்னி அவர் கண்ணைப் பறித்தது. நோயாளி துடித்தான். ராஜா ஜன்னலை இறுக்கமாக மூடித் திரையிட்டார். நோயாளியைக் கட்டிலோடு கட்டிப் போட்டு விட்டுக் காதைப் பொத்திக் கொண்டு வெளியே ஓடினார்.

அண்டா குண்டா பணிமனைக்கும், திருமண மாளிகைக்கும் இடையில் மருத்துவ மனையைக் கட்டியது தவறு. அதனை நடுக்கடலுக்கு மாற்ற நாளையே ஆணையிட வேண்டும்— என்று எண்ணியபடியே ராஜா அரண்மனை நோக்கிக் குறுக்கு வழியாக ஓடினார். வழியில் அடர்ந்த காடு. திடீரென மேகமூட்டம் ஏற்பட்டதால், ராஜாவுக்கு வழி தவறிவிட்டது. சுற்றியலைந்த ராஜா, கடைசியில் ஒரு பாழடைந்த மண்டபத்தைக் கண்டார். அதில் இருள் நிறைந்திருந்தாலும், அமைதி இருந்தது. எனவே உள்ளே நுழைந்த ராஜா, களைப்புடன் ஒரு தூண்மேல் சாய்ந்

ராமு: நீங்க பேசின பேச்சிலே ஒரு இடம் தான் சார் எனக்குப் பிடிச்சிருந்தது!

பேச்சாளர்: எந்த இடம்?

ராமு: 'இத்துடன் எனது உரையை முடித்துக் கொள்கிறேன்'னு சொன்ன இடம்!

பேச்சாளர்: ??????

— எஸ்.எஸ்.ராஜா.





தார். என்ன ஆச்சரியம்! தூண் நகர்ந்தது. ராஜா தரையில் விழுந்தார். விழுந்த இடத்தில் ஒரு தட்டு! தட்டில் பாலும் பழமும்! ராஜாவின் மனத்திலோ பயம்! அசையாமல் படுத்துக் கொண்டார். நேரம் ஆக ஆகப் பசி. பயத்தை விழுங்கியது. எனவே ராஜா பழத்தை விழுங்க எடுத்தார். அப்பொழுது.

''பாதியே நீதி! நீதியே பாதி''— என்ற குரல் கேட்டது. பேசியது எது? தூணா? ராஜா நடுங்கியபடியே பழத்தை விழுங்கிவிட்டுத் தோலைத் தூண் முன் வைத்தார். பாலைக் குடித்து விட்டுப் பாத்திரத்தையும் கீழே வைத்தார். என்ன ஆச்சரியம்! தூண் வளைந்தது; பழத் தோலினை மென்றது. பால் பாத்திரத்தைத் தின்றது. பின் அது பேசியது:

''பாதியே நீதி! நீதியே பாதி! நான் கழுகுகளின் நண்பன்— கட்டபெட்டா கழுகா— மித்ர முனிவன்''

இருட்டில், முனிவரைத் தூண் என்று எண்ணிவிட்ட ராஜாவுக்கு மீண்டும் பயம் வந்து விட்டது. முனிவர் சபித்து விட்டால்....?

''முனிவரே! உங்களுக்கு முன் இருந்த பாலையும், பழத்தையும் நான் சாப்பிட்டு விட்டேன். மன்னியுங்கள். தெரியாமல் சாப்பிட்டு விட்டேன். ஆனால் நீங்களோ— தோலையும், பாத்திரத்தையும் தெரிந்தே சாப்பிட்டு விட்டீர்களே! என்ன மாய மந்திரமோ?''

''மாயமும் இல்லை! மந்திரமும் இல்லை! சிறுமலை வாழைப் பழத்தின் தோலைக் கரண்டி நீ சாப்பிடுவதில்லையா? இது பெருமலை வாழை. தோலையும் சேர்த்து விழுங்கலாம்

மாம்பழமும் போல.''

''பாத்திரம் தின்றது எப்படியோ?''

''நான் தின்றது பாத்திரமல்ல. நீ குடித்தது பாலுமல்ல.''

''அய்யய்யோ''

''அஞ்ச வேண்டாம்! நீ குடித்தது ஒரு மூலிகை நீர். அதை மூலிகைத் தொன்னையில் ஊற வைத்துத் தொன்னையுடன் சேர்த்து விழுங்குவதே என் வழக்கம்.''

அதைக் கேட்ட ராஜாவுக்கு அச்சம் நீங்கியது. படுத்தபடியே முனிவரின் காலைத் தொட்டு வணங்கிய ராஜா,

''முனிவரே! நாட்டில் ஒலித் தொல்லை அதிகமாகி விட்டது. நிம்மதியைத் தேடி வந்தேன். இந்தக் காட்டில் கிடைக்குமா?'' — என்று வேண்டினார்.

''பாதியே நீதி! நீதியே பாதி! என்பதே என் மந்திரம். நீ வேண்டுவதில் பாதியே கிடைக்கும். நிம்மதியில் பாதி 'மதி'. அம் 'மதி'யைக் கொண்டு நிம்மதியைக் கண்டு பிடித்தல் உன் விதி. நிம்மதி காட்டுச் சரக்கல்ல. விதியின் கிறுக்கு. அது சிலருக்குச் சந்தை இரைச்சலில் கிடைக்கும். சிலருக்குக் கோயிலில் கிடைக்கும். சிலருக்குக் குளத்தில் கிடைக்கும்.'' — என்று முனிவர் போதனை செய்யத் தொடங்கினார். அவர் போதனைகள் ராஜாவின் காதில் 'கும்' 'கும்' என்று கும்மாக் குத்துக் குத்தின. ஆனால், சிறிது நேரமானதும் முனிவர் பேச்சு ராஜாவின் காதில் விழவில்லை. அப்பொழுது முனிவர் ராஜாவின் காதில் ஏதோ ஒரு சாற்றினை ஊற்றினார். ஒரு மூலிகையை அவரது ஐந்தறைக் கவசத்தினுள் வைத்து மூடினார். ராஜா மயங்கினார். முனிவர் மீண்டும் தூண் ஆனார்.

ராஜா கண் விழித்த பொழுது, பொழுது விடிந்தது. 'க்கூ— க்கூ', 'அக்கக்கா', 'ட்ரும்—ட்ரும்' 'கீச்—கீச்' எனப் பறவைகள் பாடின. ஓடைகள் 'சல சல'த்தன. ஓலைகள் 'கலகலத்'தன. மூங்கில்கள் 'கரமுறத்'தன. அந்தக் காட்டொலிகள் ராஜாவின் காதில் இனிமையாக ஒலித்தன; நாட்டொலிகளைப் போல் மண்டையைப் பிளக்கவில்லை. ராஜா எழுந்தார். சுற்றும் முற்றும் பார்த்தார். மண்டபத்தையும் காணோம். முனிவரையும் காணோம். கனவோ? ஆனால் ஐந்தறைக் கவசத்தில் ஒரு மூலிகை இருந்தது. அதைப் பத்திரமாக எடுத்துக் கொண்ட ராஜா அரண்மனைக்குத் திரும்பினார்.

காட்டிலிருந்து திரும்பிய பிறகு ராஜா, ஒலிக்கு அஞ்சாமல் நிம்மதியாக இருந்தார். அவர் ஒருமுறை, அரசவையில் ஒரு வழக்கை விசாரித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று 'கட கடா கட கடா'— என்று இடி பயங்கரமாக இடித்தது. அவையோர் பயந்து காதுகளை மூடிக் கொண்டு 'அர்ஜுனா! அர்ஜுனா! என்று கத்தினர். ராஜா மட்டும் பயப்படாமல் மெதுவாக,


''உப்பரிகையின் மேல் தகரத்தை நெளிக்கிறது யார்? போய்ப் பார்!'' என்று சேவகனை விரட்டினார். அதைக் கேட்ட ராணி, ராஜாவுக்குக் காது செவிடாகி வருகிறதோ என அஞ்சினார்.

அன்றிரவு விருந்தின் போது ராணி ''இடியைத் தகரமென்று ஏன் நினைத்தீர்கள்?'' என்று ராஜாவைக் கேட்டார். ராஜா அதற்குப் பதில் சொல்லாமல் ஆனையடி அப்பளத்தைக் 'கடமுட' என்று கடித்தார். ராணி கோபமாக வெள்ளிக் கிண்ணத்தைச் சலவைக் கல் மேஜை மீது

ஒருவர்: என்னங்க, உங்க பையன்கிட்ட ஒரு திருக்குறள், சொல்லுன்னா, 'இதுக்குப் போயி அலட்டிக்கலாமா'ன்னு சொல்றான்.

மற்றவர்: சின்னப் பையன்தானே சார், முதல் அடியை மறந்திருப்பான்.

— எம்.பி.ராஜசேகரன்.



'ணங்' என்று வைத்தார். அதையும் ராஜா கண்டு கொள்ளாமல் இரண்டாம் அப்பளத்தை எடுத்தார். ராணி "என்ன இது? நான் கேட்பது உங்கள் காதில் விழவில்லையா? நான் பாட்டுக்குக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்கள் பாட்டுக்கு நிம்மதியாக அப்பளம் கடித்துக் கொண்டிருக்கின்றீர்களே!" என்று ஆத்திரத்துடன் கத்தினார்.

அந்தக் கத்தலும் ராஜாவின் காதில் விழவில்லை போலும். அவர் நிம்மதியாகக் கிண்ணத்தில் இருந்த தயிர் வடையை வெட்டிச் சாப்பிடப் போனார். ராணி பொறுமையிழந்து தயிர்வடைக் கிண்ணத்தைப் பிடுங்கி, நிலா மாடத்தை நோக்கி வீசினார். அது மாடச் சுவரில் இருந்த ஒரு சிறு தொட்டிச் செடியை வெளியில் தள்ளியது.

அதைப் பார்த்த ராஜா, "ஐயோ! போச்சு! போச்சு!"—என்று அலறினார்.

"தயிர் வடைதானே! போகட்டும். நீங்கள் என் கேள்விக்குப் பதில் சொன்னால், நொடியில் நூறுவடை சுட்டுத் தருவேன்" என்றார் ராணி.

"போனது தயிர் வடை மட்டுமா? என் உயிர் விடையே போச்சே! சப்த நாசினி போச்சே!" என்று ராஜா அலறிக் கொண்டே எழுந்து நிலா மாடத்துக்கு ஓடினார். உடைந்து சிதறியிருந்த தொட்டிச் செடியின் மீது கண்ணீர் சிந்தினார்.

ராஜாவின் கண்ணீர் அரிய பொருள் அல்லவா? அதனைப் பிடித்து அருங்காட்சியகத்தில் காக்க வேண்டும் என ராணி எண்ணினார். எனவே அவர், ராஜாவின் கண்ணீரைக் கனகமணிக் கிண்ணத்தில் பிடித்த படியே,

"கண்ணீர், தொட்டிக்காகவா? செடிக்காகவா?" என்று கேட்டார்.

"மூலி—கை! மூலி—கை"—என்று ராஜா புலம்பினார்.

"யாருடைய கையோ போகட்டும் விடுங்கள்! தன் கையே தனக்குதவி!"

"யாருடைய கையா? அது பெரிய மூலிகை. முனிவர் கொடுத்த அரிய மூலிகை. தினம் அதன் இலையைப் பிழிந்து இரண்டு சொட்டுச் சாறு காதில் விட்டுக் கொள்வேன். பத்து நாழிகைக்குச் செவிப்பறை கல்போல் இறுகிவிடும். அப்பொழுது எந்த ஒலியும் கேட்காது. நிம்மதியாக இருப்பேன். அரசவையில் வழக்குகளைக் கேட்பேன். சரியான தீர்ப்புச் சொல்வேன். ஒரு மண்டலத்திற்கு நானே அந்த மூலிகையைச் சோதனை செய்து பார்த்த பிறகு, நாடெங்கும் அதை வளர்த்து மக்களுக்கு வழங்கலாம் என்று திட்டமிட்டிருந்தேன். எல்லாம் போச்சே!"



ஹிட்லர் ஒரு சைவர்!

உலக வரலாற்றிலேயே மிக அதிகமான மனித உயிர்களைக் கொன்று குவித்த ஹிட்லர் மாமிச உணவைக் கையால் கூடத் தொடாதவர்!

பெர்னார்ட்ஷா, அன்னிபெசண்ட், ஹெச். ஜி. வெல்ஸ், எமர்சன் போன்ற மேலைநாட்டு அறிஞர்களும் சைவ உணவு மட்டுமே உண்டு வாழ்ந்தவர்கள்தான்!

— பாகன்

"தொட்டி தானே உடைந்து விட்டது! மூலிகையை வேறு தொட்டியில் நட்டு வளர்க்கலாம்"

"உண்மை தெரியாமல் உளறுதே! இது சத்திய மூலிகை. இதற்குப் பத்தியம் உண்டு. பனிநீரில் வளரும். எனவே தான் மாடச் சுவரில் வைத்தேன். தயிரோ, உளுந்தோ படக் கூடாது என்றார் முனிவர். தயிர் வடை பட்டதால் சத்தியமும் போச்சு! பத்தியமும் போச்சு"—என்று ராஜா கதறி அழுதார். அவர் விட்ட கண்ணீர், கோப்பையை நிரப்பி விட்டதால், வெள்ளி அண்டாவைக் கொண்டு வர ராணி உள்ளே ஓடினார்.

அப்பொழுது வானம் பளீரென மின்னியது. ஒரு யானைக்கழுகு பறந்து வந்து மாடத்தின் கீழ் இறங்கியது. அது முனிவர் அனுப்பியது என ராஜா புரிந்து கொண்டார். அதன் தும்பிக்கையைப் பிடித்துச் சறுக்கிய படியே இறங்கிய ராஜா, அதன் கழுத்தில் உட்கார்ந்தார்.

யானைக்கழுகு கட்ட பெட்டாவை நோக்கிப் பறந்தது.

இதுவும் ஒரு குழந்தைகள் தின விளம்பரமோ—அல்ல

இது இந்திய குழந்தைகளுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்.



நமது நாடு அழகிய நாடு. நமது மரபு மற்றும் இயற்கை வளம் பெருமைக் குரியதாகும்.

ஆனால்—

அவை அனைத்துமே அபாயத்திற்கு உள்ளாகக் கூடும்.

பெருகிவரும் காற்றுச் சூழ்நிலை அசுத்தம், இயற்கை வளத்தை அளவுக்கு மீறி பயன்படுத்தும் திட்டமில்லாத வளர்ச்சி இவை நம் சுற்றுப்புறத்திற்கே அபாயம் விளைவிக்கின்றன.

நதிகள் அசுத்தமாகின்றன. புனித கங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல.

நச்சுக் கழிவுப் பொருட்களும், எண்ணெய்க் கசிவுகளும் கடல் வாழ் பிராணிகளுக்கு தீங்கு விளைவிக்கின்றன.

அசுத்தக் காற்று, நமது விலைமதிப்பற்ற நினைவுச் சின்னங்களை சேதப்படுத்துகிறது.

வனச்செல்வங்கள் இரக்கமின்றி அழிக்கப் படுகின்றன. அதன் விளைவு—சுற்றிலும் உள்ள உயிரினங்களின் வாழ்வு பாதிக்கப்படுகிறது.

இயற்கையின்மீது இத்தாக்குதல் இனியும் தொடர்ந்தால், வருங்காலத்தில் நீங்கள் வளர்ந்து பெரியவர்களானாலும் நம் நாட்டு பசுமையையும் வளத்தையும் காணவே முடியாது.

வண்ணத்துப் பூச்சிகள் மலர்விட்டு மலர் சிறகடித்துப் பறக்காது.

ஏனெனில் கண்ணைக் கவரும் அழகிய மலர்கள் இல்லாமல் போகக்கூடும்.

வசந்தத்தை அறிவிக்கும் குயில்களின் கானம் கேட்காது. மான்களின் கள்ளமற்ற துள்ளலைப் பார்க்க முடியாது.

இதுபோன்ற வறண்ட உலகில் நீங்கள் வாழ விரும்புவீர்களா?

அழகான உலகத்திலும், ஆரோக்கியமான சூழலிலும் வாழ உங்களுக்கு உரிமை உள்ளது.

முதியோர்கள் அதை உங்களுக்கு வழங்கக் கடமைப்பட்டுள்ளனர். அதை கேட்டுப் பெறுங்கள்.

இயற்கை வளத்தை உரித் தெடுக்கும் சுயநல தூண்டுதல் களாக மாறாமல் இருக்கும்படி அவர்களுக்கு வேண்டுகோள் விடுங்கள்.

இந்தியராக, உங்கள் நகரத்து குறிப்பிட்ட சுற்றுப்புற பிரச்சினை பற்றி சிந்தித்து அதிலிருந்து மீளுவதற்கான உங்கள் யோசனைகளையும் எழுதுங்கள்.

உங்கள் யோசனையைப் பெற்றுக் கொண்டதும், நாங்கள் உங்களுக்கு ஆறு பறவைகளின் அழகிய ஆறு கலர் ஸ்டிக்கர்களை இலவசமாக அனுப்புவோம்.

தயவுசெய்து, உங்கள் யோசனைகளுடன் இக் கூப்பனையும் இணைத்து இம் முகவரிக்கு அனுப்பவும்:

மேனேஜர் (பொது ஜனத் தொடர்பு)
லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன்
ஆப் இந்தியா
மைய அலுவலகம், "யோகக்ஷேமா",
ஜீவன் பீமா மார்க், பம்பாய்-400 021.

பெயர்: ....

வயது: ....

முகவரி: ....

நகரம்: .... பின்கோட்: ....

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா
ஆயுள் காப்பு—நிரந்தரமான அன்பின் சின்னம்.

LIC - 234/87 TM

புதையல் வீடு



டாக்டர் பூவண்ணன்

15. சுமதி கேட்ட வரம்

சோமு தாத்தா சொல்லொணாத மகிழ்ச்சியில் மிதந்தார். "செங்கோடா, நீ சொல்றது நிசமா? உட்கோயில் வழியைக் கண்டுபிடிச்சுட்டீங்களா? நிசமாவே கண்டுபிடிச்சுட்டீங்களா?" என்று உடல் சிலிர்க்க, உள்ளம் பூரிக்க, கண்களில் நீர் துளிக்கக் கேட்டார்.

சோமு தாத்தாவைத் தேடிச் சென்ற செங்கோடன் ஊருக்குள் அவரைக் கண்டு, அவரைத் தனியே அழைத்துச் செய்தியைச் சொன்ன போதுதான், அவர் ஆனந்தம் மேலிட அப்படிக் கேட்டார்.

"ஆமாம் தாத்தா! நிசம்! நிசம்! உட்கோயிலுக்குள் சென்று நானும் சுமதியும் தசாவதார மூர்த்திகளைத் தரிசித்தோம்" என்று கூறிய செங்கோடன், உட்கோயில் வழியைக் கண்டு பிடித்தது முதல், பாபுவை உட்கோயிலுக்குள் வைத்து வழியை மூடியது வரை கூறினான். "தாத்தா, சுமதியைக் கோயில் வாசலில் உட்கார வைத்துவிட்டு வந்திருக்கிறேன். அந்தப் பாபுவை மடக்கிப் பிடிக்க ஆளுங்களோட நாம போகணும்" என்றும் கூறினான்.

சோமு தாத்தா, தனது நிலத்தில் வேலை செய்யும் இரண்டு ஆட்களுடன் புறப்பட்டார். செங்கோடன் உட்கோயில் வழியைத் திறந்தான். தாத்தா ஒரு கையில் தீப்பந்தத்தைக் கொளுத்திக் கொண்டு முன்னே இறங்க, அவர் அழைத்து வந்த ஆட்கள் கையில் தடிகளுடன் அவரைப் பின் தொடர, அவர்களுக்குப் பின்னே சுமதியும் செங்கோடனும் சென்றனர்.

படிகளைக் கடந்து, சமதளத்தில் நடந்து பொற்சிலைகளை அவர்கள் நெருங்கிய போது, "பெருமாளே! நரசிங்க மூர்த்தி! என்னை ஒன்னும் செஞ்சிடாதே!" என்று பிள்ளைப் பெருமாள் அலறுவது கேட்டது. அனைவரும் விரைந்து சென்றனர்.

ஒரு தூணருகே மடியில் நகைகள் நிறைந்த பனியன் பையுடன் உட்கார்ந்திருந்த பிள்ளைப் பெருமாள் நரசிங்க மூர்த்தியைப் பார்த்தபடி, தொடர்ந்து அலறினான்.

"பெருமாளே! நான் செஞ்சது தப்புதான்! என்னை மன்னிச்சு விட்டுடு. உன் சொத்தைக் காப்பாத்தின நல்ல பெருமாள் வழியிலே வந்த என்னை மன்னிச்சுடு. வராதே.... என்னருகே வராதே... ஐயோ.. கழுத்து! கழுத்து! என்னைக் கொல்லாதே!

கொல்லாதே!''

பிள்ளைப் பெருமாள் கையிலிருந்த சிகரெட் லைட்டரைக் கீழே போட்டு விட்டு, இரண்டு கைகளாலும் கழுத்தைப் பிடித்துக் கொண்டான். ''பெருமாளே! பெருமாளே!'' என்று இருமுறை ஓலமிட்டுக் கீழே சாய்ந்தான்.

சோமு தாத்தாவும் மற்றவரும் எதிரே பார்த்தனர். பத்துப் பொற்சிலைகள் இருந்தனவே தவிர, பாபுவை நோக்கி எந்தப் பெருமாளும் வரவில்லை.

சோமு தாத்தா கீழே சாய்ந்த பாபுவின் அருகில் சென்று, அவன் மூக்கில் கைவைத்துப் பார்த்தார். பிறகு நாடியைப் பிடித்துப் பார்த்தார். ''இறந்து விட்டான்'' என்று மெல்லச் சொன்னார்.

''தாத்தா! பெருமாளே நரசிங்க மூர்த்தி... என்னருகே வராதே, என்னைக் கொல்லாதேன்னு இவன் கத்தினதைக் கேட்டோமே! நரசிங்கமூர்த்தி இவன் கண்ணுக்கு மட்டும் தெரிகிறபடி வந்து இவனைக் கொன்னுட்டாரா?'' என்று கேட்டான் செங்கோடன்.

''பெருமாள் சொத்தைக் களவாடிய குற்றவுணர்விலே, நரசிங்கப் பெருமாள் தன்னைத் தண்டிப்பாருன்னு நினைச்சு, அந்த மனப்பிராந்தியிலே பெருமாள் கொல்ல வர்றதா கற்பனை செஞ்சி பயந்து செத்துப் போயிருக்கலாம். அல்லது, நரசிங்கப் பெருமாளே நம் கண்ணுக்குத் தெரியாம அவன் முன்னே தோன்றிக் கழுத்தை நெறிச்சுக் கொன்னிருக்கலாம். பெருமாளின் திருவிளையாடலை யாரால் புரிஞ்சுக்க முடியும்? இவன் சிற்பி நல்ல பெருமாளின் வழியில் வந்தவன்னு தெரியுது... உம். இவன் செத்ததை போலீஸில் சொல்லணும். உட்கோயில் கண்டுபிடிப்பைக் கலெக்டருக்குத் தெரிவிக்கணும்'' என்றார் சோமு தாத்தா.



மறுநாள் காலையிலே எல்லாப் பத்திரிகை நிருபர்களும் பக்தசிரோமணிகளும் விஜயமங்கலத்தைத் தேடி வந்தனர். சோமுதாத்தா, செங்கோடன், சுமதி ஆகியோரைப் பேட்டி கண்டனர். அன்றே பத்திரிகைகள் உட்கோயில் கண்டுபிடிப்புச் செய்தியை வெளியிட்டன. வானொலியும், தொலைக் காட்சியும் இதே செய்தியை ஒலி—ஒளி பரப்பின. ஒரே நாளில் விஜயமங்கலம் உலகம் அறிந்த பெயரானது. சுமதியே உட்கோயிலைக் கண்டுபிடித்தவள் என்று செங்கோடனும், சோமுதாத்தாவும் சொன்னதால் சுமதி பெரும்புகழ் பெற்றாள்.

உட்கோயிலின் பொறுப்பை அரசு ஏற்றது. ஆனால், சோமுதாத்தாவைத் தக்காராக நியமித்து, அவருக்குத் துணை செய்ய ஊரார் பதின்மர் அடங்கிய ஒரு குழுவை அமைத்தது. எந்தக் கோயிலிலும் இல்லாதபுதுமையாக அந்தக் குழுவில் சிறுமி சுமதிக்கும் இடம் அளித்தது. சுமதியின் சித்தப்பா முத்துசாமிக்கும் சித்தி பத்மாவுக்கும் ஊருக்குள் தனிப் பெருமை ஏற்பட்டது. ஒரிஸ்ஸாவில் இருந்த சுமதியின் பெற்றோரைக் கூடப் பத்திரிகையாளர்கள் பேட்டி கண்டு பெருமைப்படுத்தினர்.

பெருமாள் கோயில் பாழடைந்திருந்ததால் அதைச் செப்பனிட்டு, கும்பாபிஷேகம் செய்த பின்னர்தான் பொது மக்கள் உட்கோயிலுக்குச் செல்லலாம் என்று கோயிலின் நிர்வாகக் குழு முடிவு செய்தது. கொங்கு நாட்டின் செல்வச் சீமான்கள் நன்கொடையை வாரி வழங்கினர். அரசும் தாராளமாக நிதி உதவி செய்தது. அதனால், பெருமாள் கோயிலைப் புதுப்பிக்கும் திருப்பணி இரவும் பகலும் இடைவிடாமல் நடந்தது.

ஆறுமாதங்களுக்குப் பிறகு, ஜனவரி மாதத்தின் இறுதியில், தைத் திங்களில் ஒரு நல்ல நாளைத் தேர்ந்தெடுத்து பெருமாள் கோயிலின் கும்பாபி





“நம்ம பிரகாஷ் சிக்ஸர் அடித்தவுடன் தொடர்ந்து விளையாடாமல் பேட்டை போட்டுட்டு வீட்டுக்கு ஓடுறானே! ஏன்?”

“இன்னைக்கு ஆட்டத்தில் சிக்ஸர் அடிச்சா ஆறு சாக்லெட் பரிசா தர்றதா அவங்கம்மா சொன்னாங்களாம்!”

— மணியன் தர்மலிங்கம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

ஷேகத்தை நடத்தினர். அன்று விஜய மங்கலத்தில் என் விழவும் இடமில்லாதபடி மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்தது. உள்ளூர்க்காரர்கள் உவகையின் உச்ச நிலையை அடைந்தனர்.

அமைச்சர்கள், அதிகாரிகள், சமயச் சான்றோர், பல்வேறு துறைகளில் புகழ் பெற்ற பெருமக்கள் ஆகிய அனைவரும் அன்று பெருமாள் கோயிலுக்குள் இருந்தனர். இந்தத் திருவிழாவில் சுமதிக்குத் தனிச் சிறப்புக் கிடைத்தது.

கும்பாபிஷேகம் முடிந்த பிறகு, உட்கோயில் திறப்பு விழா நடக்க இருந்தது. உட்கோயிலின் வழியிருந்த இடத்தின் நான்கு புறமும் கெட்டியான திரைகள் தொங்கிக் கொண்டிருந்தன. வைணவத் திருமடத்தின் தலைவரான ஜீயர் அந்தத் திரையை விலக்கி, உட்கோயிலை மக்களுக்குத் திறந்துவிடப் போகிறார்.

திறப்பு விழாவுக்குப் பெருமாள் சன்னதியின் மண்டபத்தை ஒட்டி மேடை அமைத்திருந்தார்கள். அந்த மேடையில் அமைச்சர்கள், ஜீயர், உள்ளூர்ப் பெருமக்கள் ஆகியோருடன் நடுநாயகமாக சுமதிக்கு இடம் அளித்திருந்தனர்.

கோயிலின் தக்காரான சோமு தாத்தா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பெருமாள் கோயிலின் வரலாற்றையும், சுமதி உட்கோயிலைக் கண்டுபிடித்த அரிய செயலையும் விளக்கினார்.

“உட்கோயிலைக் கண்டு பிடித்த முயற்சியில் என் பேரன் செங்கோடனுக்கு ஓரளவு பங்கு உண்டு. என்றாலும் உட்கோயிலின் கண்டு பிடிப்புக்கு முதற் காரணம்— முழுக்காரணம் நம் சுமதியே. சுமதியைப் பெருமாளே நம் ஊருக்கு வரவழைத்திருக்கிறார் என்று தோன்றுகிறது. சுமதியின் பெற்றோர் ஒரிஸ்ஸாவிலிருந்து திரும்பி விட்டால், சுமதி விஜயமங்கலத்தை விட்டுப் போய்விடக் கூடும். ஆனால், நம் இதயத்தை விட்டுப் போக முடியாது. நாமும் நம் சந்ததியினரும், என்றென்றும் சுமதியை மறக்காமல் இருக்கும் பொருட்டு இக்கோயில் நிர்வாகம் ஓர் ஏற்பாடு செய்திருக்கிறது. அது என்ன என்பதை நீங்கள் சிறிது நேரத்தில் அறிந்து கொள்வீர்கள்.....”

சோமு தாத்தா சொன்னதும், ‘அது என்ன ஏற்பாடு?’ என்னும் கேள்வி அங்கே கூடியிருந்த அனைவர் உள்ளத்திலும் பிறந்தது. அதே கேள்வி சுமதியின் உள்ளத்திலும் எழுந்தது.

“கோயில் நிர்வாகக் குழுவில் நாமும் இருக்கிறோமே! நமக்குத் தெரியாமல்செய்திருக்கும்ஏற்பாடுஎன்ன?”

சுமதியின் மனம் தன் கேள்விக்கு விடை காண முயன்றது. சிறிது தூரத்தில் மேடையை ஒட்டி நின்று கொண்டிருந்த செங்கோடனைப் பார்த்தாள். ‘அது என்ன ஏற்பாடு?’ என்று கண்களால் கேட்டாள். செங்கோடன் அதைப் புரிந்து கொண்டான்.

‘அது எனக்குத் தெரியாது’ என்று உதட்டைப் பிதுக்கிக் கைகளை விரித்துக் காட்டிச் சைகை மூலமே பதில் அளித்தான்.

அமைச்சரின் தலைமை உரை, ஆன்றோர்களின் சிறப்புரை ஆகியன நிகழ்ந்தன. அனைவரும் ‘சுமதி’யின் பெயரைச் சகஸ்ரநாமம்போலத் திரும்பத் திரும்பக் கூறிப் புகழ்ந்தனர். இறுதியாக ஜீயர் பேசத் தொடங்கியதும் மக்கள் அமைதி அடைந்தனர்.

ஜீயரும் சுமதியைப் புகழ்ந்து பேசினார். முடிவில், “இப்போது நான் உட்கோயிலைத் திறக்கப் போகிறேன்.

உடனே இந்த ஊர் ஜனங்களுடைய நன்றி வெளிப்படும்,'' என்று கூறி விட்டு மேடையிலிருந்து இறங்கினார்.

''குழந்தே! என்னோட வாம்மா!'' என்று ஜீயர் சுமதியை அழைத்துக் கொண்டார். அந்தச் சான்றோரின் அன்புக் கரம் சுமதியை அணைத்துக் கொண்டிருக்க அவர், உட்கோயிலை மூடிய திரையருகே நின்றார். அவரைச் சூழ்ந்து அமைச்சர் முதலிய சிறப்பு விருந்தினர் நின்றனர்.

திரையருகே இருந்த ஒரு மின் சாரப் பொத்தானைச் சோமு தாத்தா ஜீயருக்குச் சுட்டிக் காட்டினார். அதன் பொருள் உணர்ந்த ஜீயர், சுமதியை அணைத்த கரத்தை எடுத்து, அதன் ஒரு விரலால் பொத்தானை அழுத்தினார். நான்கு புறமும் சூழ்ந்து கூடு போல இருந்த அந்தத் திரை மெதுவாகக் கீழ் நோக்கி இறங்கியது. அது இறங்க, இறங்க, உட்கோயில் வழியின் மேலே, கூரையில் ஒரு பெயர்ப் பலகை தெரிந்தது. அனைவரும் அதைக் கண்டதும் கைதட்டி ஆரவாரித்தனர்.

மேல் நோக்கிப் பார்த்த சுமதி திகைத்து விட்டாள். திகைப்பு, ஆனந்தத்தால் ஏற்பட்டது. அவளைத் திகைக்க வைத்த பெயர்ப் பலகையில் ''சுமதி வாயில்'' என்று எழுதியிருந்தது.

சுமதி சோமுத் தாத்தாவைப் பார்த்தாள்.

''தாயே, உன்னை நானும் இந்த ஊர் மக்களும் இந்த நாட்டு மக்களும் பல்லாண்டுகள், பல நூற்றாண்டுகள் மறக்காமல் நினைக்க எங்களுக்குத் தெரிஞ்ச வழி இதுதாம்மா. உட்கோயிலுக்குள்ளே சுவரில் நீ உட்கோயிலைக் கண்ட வரலாற்றைக் கல்வெட்டாகப் பொறித்திருக்கிறோம்'' என்றார் சோமு தாத்தா.

ஜீயர், ''மகளே! உட்கோயிலுக்குள் முதன் முதலாக நான்தான் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அந்தச் சிறப்புக்கு நீயே தகுதியானவள். அதனால், நீ முதலில் வலது காலை வைத்துச் செல்லம்மா'' என்று கூறினார்.

அதை ஆமோதிப்பது போல



''டேய் மணி, நீ கொய்யா மரத்திலே ஏறி மாங்காய் பறிச்சியா? ஏண்டா என்னை ஏமாத்தவா பார்க்கிறே!''
''இல்லேடா, பக்கத்திலே இருந்தது மாமரமாச்சே!''

— மணியன் தர்மலிங்கம்.

* * * * * * * * * * * * * * * * * * * *

அமைச்சர் தலை அசைத்தார்.

சுமதி தன்னைச் சுற்றி நின்ற அனைவரையும் ஒருமுறை பார்த்தாள். பிறகு குனிந்து ஜீயரின் திருவடிகளை வணங்கினாள். அதன் பின் உட்கோயிலின் படியில் வலது காலை வைத்து இறங்கினாள்.

அவளைத் தொடர்ந்து ஜீயரும் பிறரும் மெல்லப் படியில் இறங்கினர்.

உட்கோயில் வழி ஒளி வெள்ளத்தில் பிரகாசித்தது.

அந்த வழியே இறங்கிக் கொண்டிருந்த சுமதி, ''பெருமாளே! நான்தான் உட்கோயிலைக் கண்டுபிடிச்சேன்னு சொல்றாங்க. அதுக்குப் பிரதியுபகாரமாக இந்த வழிக்கே என் பேரை வெச்சிருக்காங்க. பெருமாளே, உன் உட்கோயிலைக் கண்டுபிடிச்ச நான் உங்கிட்டே ஒரு வரம் கேக்கறேன். நான் இந்த ஊரை விட்டுப் போகாம செஞ்சிடு. எங்கம்மாவும், அப்பாவும் இந்த ஊருக்கே வந்திருக்கும்படி செஞ்சிடு. இதுதான் நான் உன்கிட்டே கேக்கற வரம்,'' என்று மனமுருக வேண்டினாள்.

பெருமாள் சுமதியின் வேண்டுகோளை நிறைவேற்றுவாரா?

(முற்றும்)

கவிதை பிறந்த கதை:



கரிய யானை இருபுறம் காவலுக்கு நிற்குது!


—மதிஒளி—

கவிஞர் மதிஒளி (ஆர். சரஸ்வதி), மயிலை கபாலீஸ்வரர் கோயிலுக்குப் போகும் போதெல்லாம் அந்தக் கரிய யானைகளைப் பார்ப்பது வழக்கம். காலப் போக்கில் அந்த யானையே ஒரு கவிதைக்குக் கருப் பொருளாக அமைந்து விட்டது. கவிஞர் கூறுகிறார்.

''மயிலை கபாலீஸ்வரர் கோயிலில் ஒவ்வொரு நாளும் திருநாள்தான். கோயில் துவஜ ஸ்தம்பத்திற்கு இடது புறம் ஒரு மண்டபம். உற்சவக் காலங்களில் அந்த மண்டபத்தில் உற்சவர் அலங்காரத்தோடு அமர்ந்திருந்து அருளாசி வழங்குவார். மற்ற நாட்களில் அந்த மண்டபம் பக்தர்களின் மண்டபம்; குழந்தைகளின் விளையாட்டுக் கூடம். கோயிலின் கர்ப்பக் கிரகத்தை விட அந்த மண்டபத்திற்கு என் மனத்தில் ஆழமான அஸ்திவாரம் உண்டு. ஓர் ஓரமாக உட்கார்ந்து கொண்டு, அந்த மண்டபத்தில் உட்கார்ந்து பேசுபவர்களைப் பார்ப்பது, முடிந்தால் உரையாடலைக் கேட்பது என்பது ஒரு சுவாரஸ்யமான பொழுது போக்கு.

''மூன்று படிகள் ஏறி அந்த மண்டபத்தில் உட்கார வேண்டும். படிக்கட்டுகளின் இருபுறமும் பக்கத்துக் கொன்றாக கருங்கல் யானைகள் இரண்டு நின்றிருக்கும். அந்த யானைக்குத் தான் எத்தனை மரியாதை! ஒன்று, இரண்டு, வயதுக் குழந்தைகளை அதன் அப்பாவோ, அம்மாவோ கையைப் பிடித்து, ''யானையைத் தொட்டுப் பாரு... காது பார்த்தியா பெரிசு... காலு பாரு, தொட்டுப்பாரு... பயப்படாதே! ஏறி உட்காரய்யா... பயப்படாதே கண்ணு!'' என்று குழந்தைகளோடு அந்தப் பெரியவர்களும் அந்தக் கல் யானையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் களிப்பதுண்டு.

''சிறுவர் சிறுமியர் அதன் மீது ஏறி அமர்ந்து சவாரி செய்வதும், யானை



மீது அமர்ந்தவாறே கத்திச் சண்டை செய்வது போலப் பாவனை செய்வதும், வீர உரையாடல்களும் கேட்க நல்ல சுவையோடு இருக்கும். நிஜ யானையைக் கண்டு பயப்படும் குழந்தைகள், இந்தக் கல் யானை மீது ஏறி அமர்ந்து தங்கள் பயத்தைப் போக்கிக் கொள்வதைப் பார்த்திருக்கிறேன். அந்த யானை மீது சாய்ந்து கொண்டு பேசும் ஆண்களையும், பெண்களையும் பார்த்திருக்கிறேன். யானையருகே நிற்கையில் எல்லோரும் குழந்தைகளாய் மாறிப் போவதையும் பார்த்திருக்கிறேன். அப்படி என் பார்வைபட்டு மனத்தில் நிற்கும் யானையைப் பற்றிய பாடல் இதோ:

கரிய யானை இருபுறம்
காவலுக்கு நிற்குது
சிறிய வாலை அடக்கியே
திகைப்பு மிக்க நிற்குது!

சீப்புப் பழங்கள் நீட்டியும்
திரும்பிப் பார்க்க வில்லையே!
கூப்பிட்டுத்தான் பார்க்கினும்
கொஞ்சம் அசைய வில்லையே!

சிறிதும் அச்சம் இன்றியே
சிறுவர் கூட்டம் அணுகியே
விரைவில் ஏறிக் கொள்ளவும்
விரும்பி நிற்கும் யானையாம்!

கழுத்தில் தொங்கும் மணியிறைல்
கிளம்பும் ஓசை கண்டிலோம்
அழுத்த மாக நிற்குதே
அதற்கு என்ன காரணம்?

முறத்தைப் போன்ற காதுகள்
விறைத்த படியே இருக்குமாம்.
கருத்தில் என்ன கலக்கமோ
கண்டு கொள்ள முடியுமோ?

கல்லில் செய்த யானையாம்.
காவல் கோவில் யானையாம்.
நல்ல அழகு யானையாம்,
நடந்தி டாத யானையாம்!

உங்கள் வீட்டில் துளசி மாடம் இருக்கிறதா?

துளசி மாடம் வீட்டுக்கு அழகை மட்டுமல்ல, மனத்திற்கு மகிழ்ச்சியையும் தரும். அதே சமயத்தில் தெய்வ பக்தியும் வளரும்.

கவிஞர் பள்ளியில் படிக்கும்போது ஒரு சிநேகிதி. அவள் பெயர் துளசி. அவள் அழகானவள்; அமைதியானவள். அவளை, துளசியை— துளசிச் செடி என்றும், துளசி மாடம் என்றும் இவர் செல்லமாகக் கூப்பிடுவாராம். புனிதத் துளசிச் செடியைப் பற்றியும், அதன் மகிமை பற்றியும் அப்போது அதிகம் தெரியாது இவருக்கு. பின்



நாளில்தான், பல வீடுகளில் துளசி பூசையையும், துளசிக்கல்யாணம்சிறப்பாகச் செய்வதையும் காண நேர்ந்ததாம். ஜலதோஷம் பிடிக்கும் போதும், பூச்சிக் கடிக்கும் துளசி தெய்வீக மூலிகையாய் வீட்டுத் தோட்டத்திலிருந்து பறித்துக் கொள்வதை இன்றும் நாம் பார்க்கிறோம். இப்படிப் பல நேரங்களில் துளசி, தன் பசுமையை, தெய்வீக நறுமணத்தை, புனிதத்தைக் கவிஞர் மனத்தில் ஊடுருவிச் சென்றுள்ளது. அதன் பிரதிபலிப்பு பாடலாக உருவானது. அந்தப் பாடல்:—


மாடத்தில் உள்ள துளசி — எங்கள்
வாசலுக் கேதனி யழகு.
பாடிப் பணிகின்ற துளசி — நாளும்
பார்க்கின்ற பச்சைத் துளசி!

வெண்கலச் செம்பிலே தண்ணீர் — ஊற்றி
வேண்டி வணங்குவாள் அம்மா;
மங்கலம் பலநூறு தருவாள் — துளசி
மாதா இவளெனச் சொல்வாள்!

சுற்றிவலம்வந்துதொழுவாள்—இலையைத்
தொட்டு நற்குங்குமம் இடுவாள்;
முற்றத்தில் நறுமணம் சூழும் — அம்மா
முகத்திலும் பேரன்பு நிறையும்!

மாடத்துப் பிறையினில் தீபம் — அந்தி
மாலையில் செவ்வொளி வீசும்;
ஆடிக் கொண் டேஇளங் காற்றில் — நல்ல
ஆனந்தக் காட்சி அளிக்கும்!

பேட்டி: பி. வி. கிரி.



சார் தபால்!

இசையைப் போலவே இனித்தது!

* சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்களது இளமைப் பருவம், அவரது இசையைப் போலவே இனிமையாக இருந்தது.

— ப்ரிய பாரதி, போடிநாயக்கனூர்.

* "குரு பக்திதான் ஒருவனை உயர்த்தும்; முன்னுக்குக் கொண்டு வரும்" என்னும் இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் வரிகள் மிகமிக உயர்வானவை. இன்றைய குழந்தைகள் உள்ளத்தில் இந்த குருபக்தி இடம் பிடித்து விட்டால், குழந்தைகள் உயர்விற்கு வேறு எதுவும் வேண்டாம்.

— அழகனூர், கள்ளிக்கோட்டை.

* எங்கள் ஊரில் பிறந்து வளர்ந்த சீர்காழி கோவிந்தராஜனின் இளமைப் பருவத்தைச் சிறப்பாக வெளியிட்டு எங்கள் மனத்தை நெகிழ வைத்து விட்டீர்கள்.

— ஆர். சாந்தகுமாரி, சீர்காழி.

* புதுவை அரசு வெளியிட்டுள்ள நான்காம் வகுப்புத் தமிழ்ப் பாட நூலில் திரு ஜெயசீலன் எழுதிய 'தந்தையைத் தேடி' என்ற சிறுகதை இடம்பெற்றுள்ளது. இந்தக் கதை கோகுலத்தில் வெளிவந்தது. தரமான இக்கதையை வெளியிட்ட கோகுலத்திற்குப் பாராட்டு.

— அனிதா, பாண்டிச்சேரி — 10.

* வெளிநாடுகளில் மட்டும்தானா? நம் நாட்டில் கூட, பிராணிகளுக்காகச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை ரமணர் ஆசிரமத்தில் பகவான் ரமணர் வளர்த்த லட்சுமி பசுவுக்குச் சமாதி கட்டி அதன் மீது அந்தப் பசுவின் சிலை வைத்து மண்டபமும் கட்டியிருக்கிறார். பசுவுக்கு மட்டும்தானா? அவர் வளர்த்து மடிந்த நாய், அவரிடம் தொடர்ந்து உணவு அருந்திப் பின் மடிந்த காக்கை ஆகியவற்றிற்குக் கூட சமாதி கட்டி மண்டபம் எழுப்பியுள்ளார்.

— லலிதா செல்லப்பா, வேலூர் — 7.

* 'இன்னும் காந்தி இருக்கின்றார்' என்ற கதை பற்றிய எங்கள் மன்றத்தின் மதிப்பீடு இதோ...

"ஹலோ, பேரளம் புகழ்மதியா...? என்ன சார், சென்ற முறை 'கால் தந்த பெருமை' மூலம் நகைச்சுவை வெள்ளத்தில் எங்களைத் திணற அடித்த நீங்கள், இந்த முறை முற்றிலும் வித்தியாசமான நடையில் 'இன்னும் காந்தி இருக்கின்றார்' கதையைத் தந்து கண்ணீர்க் கடலில் எங்களை மூழ்க வைத்துவிட்டீர்களே! உங்களைப் போன்ற எழுத்தாளர்களால், இளைய தலைமுறையில் இன்னும் பல காந்தி உருவாவார்கள் என்பது சத்தியமானது.

— கே. நளினி பி. எஸ்ஸி., தலைவி, கஸ்தூரிபாய் மகளிர் மன்றம், கும்பகோணம்.

* பரமஹம்ஸர் சொன்ன பாலர் கதைகள் அருமையிலும் அருமை. அக்கதை ஒவ்வொன்றும் எங்கள் அறிவுக்கு விருந்து!

— வி. சாந்தி, நேமத்தான்பட்டி.

* 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதியை இன்னும் அதிக பக்கங்களில் வெளியிடுங்கள். பல நல்ல செய்திகளை அறிய முடிகிறது.

— த. முத்துக்குமார் (10,210), காடாம்பாடி.

* கராத்தே கற்கும் சிறுமியை நினைக்கும் போது, நாம் கூட ஏன் இந்தக் கலையைக் கற்றுக் கொள்ளக் கூடாது என்று தோன்றியது.

— எல். ஜி. இரவிச்சந்தர், காளிக்காவல்புரம்.

* 'நேருஜியிடம் ஒரு சிறுவன் கையெழுத்துப் பெற்ற கதை' என் போன்ற மாணவர்களை வெகுவாகக் கவர்ந்தது.

— சி. எல். சரவணன் (706), மதுரை — 1.

* 'புவி ஈர்ப்புச் சக்திக்கு 300 வருடம் ஆகிறது' என்ற வாக்கியம் பிழையானது. 'புவி ஈர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்து 300 வருடமாகிறது' என்றே இருக்க வேண்டும்.


— ச. ஜான்சிராணி (319), உதகை.

* 'மறதி மன்னர்களைக் கண்டுபிடியுங்கள்' அறிவுக்கு நல்ல வேலை தந்தது. எப்படியோ விடாப் பிடியாக விடையை யூகித்துக் கொண்ட பிறகே விடைப் பக்கத்தைப் பார்த்தேன். சுவையான பகுதி.

— பி. கேசவ சர்மா, இராஜாக்கமங்கலம்.

பரதன் அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கெ. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3 1 5 4 3, 4 34 157.



ஆறுமுக நாவலர்

தோற்றம்: 18.12.1822 மறைவு: 1879

Registered No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

